# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 தை 06 வியாழக்கிழமை (20.01.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 055


## வடக்கிலிருந்து மேலும் ஆயிரம் இளைஞர்களை பொலிஸ் சேவைக்கு இணைக்க நடவடிக்கை

கொழும்பு, ஜன. 20

மூன்று தசாப்த காலத்திற்குப் பின்னர் வடக்கிலிருந்து 1,000 இளைஞர்கள், யுவதிகள் இலங்கை பொலிஸ் சேவையில் சேர்த்துகொள்ளப்பட்வுள்ளனர். பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

-இப்படி பொலிஸ்-மனிதவள பிரிவின் பொலிஸ் அத்தியட்சகர் கித்சிறி ஜயலத் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள், பெண் பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள், பொலிஸ் கான்ஸ்டபிள்கள், பொலிஸ் சாரதி ஆகிய பதவிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்றும், டிசம்பர் மாதம் 24 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலில்' இது தொடர்பான விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

விண்ணப்பதாரிகள் 011- 2552953, 011- 2552736 என்ற தொலைபேசி இலக்கங்களினூடாகத் தொடர்பு கொண்டு இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, வடக்கு - கிழக்கில் மூன்று தசாப்தங்களாக இடம்பெற்ற யுத்தத்தால் பொலிஸ் சேவையில் தமிழ் இளைஞர்கள், யுவதிகள் எவரும் இணைத்துக் கொள்ளப்படவில்லை.

(28ஆம் பக்கம் பார்க்க)

# சலுகைக்காக அன்றி அரசுடன் உரிமைகளுக்காகவே பேச்சு

### கல்முனையில் அடித்துக் கூறினார் கூட்டமைப்பு எம்.பி.

அம்பாறை,ஜனவரி 20

தமிழ் மக்களின் உரிமைகளின் அடிப்படையில்தான் பேச்சு, சலுகையின் அடிப்படையில் அல்ல என்ற விடயத்தை அரசுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெளிவுபடுத்தி உள்ளது. இந்தப் பேச்சுக்கள் வெளிப்படையானவையாக இருக்காது என்றும் குறிப்பிட்ட அடைவை எட்டிய பின்பே அது குறித்து வெளியே மக்களுக்குத் தெரிவிக்கப்படும் என்றும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கிழக்கில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை முன்னிட்ட விளக்கக் கலந்துரையாடல் ஒன்று கல்முனை வை.எம்.சி.ஏ. கட்டடத்தில் நேற்று நடைபெற்றது.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் இதில் கலந்துகொண்டு, தற்போதைய அரசியல் கள நிலவரம் குறித்து விளக்கினர்.

(27ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் வேட்புமனுத் தாக்கல் இன்று ஆரம்பம்

கொழும்பு,ஜன.20

228 பிரதேச சபைகள் மற்றும் 40 நகர சபைகளுக்கான வேட்புமனுக்கள் நாடு முழுவதிலுமுள்ள 25 மாவட்ட செயலகங்களில் இன்று முதல் எதிர்வரும் 27ஆம் திகதி வியாழக்கிழமை வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்று மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் டபிள்யூ.பி. சுமணசிறி நேற்றுத் தெரிவித்தார்.

நாடு முழுவதிலுமுள்ள பல மாவட்ட செயலகங்களில் பெரும் எண்ணிக்கையான சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன என்றும் அவர் கூறினார்.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களுக்காக சுயேச்சைக் குழுக்களின் (28ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.அசம்பாவிதம்: நாடாளுமன்றில் இன்று விவாதம்

கொழும்பு,ஜன.20

குடாநாட்டில்நடைபெறும்அசம்பாவிதச் சம்பவங்கள் தொடர்பான விவாதம் நாடாளுமன்றத்தில் இன்று நடைபெறவுள்ளது.

கடந்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, யாழ். சம்பவங்கள் தொடர்பாக ஒத்தி

(28ஆம் பக்கம் பார்க்க)

## புங்குடுதீவில் மீட்ட பெண்ணின் சடலம் கொலைசெய்யப்பட்ட பின்பே வீசப்பட்டது

### ஆரம்ப விசாரணையில் கிடைத்த தகவல்

யாழ்ப்பாணம்,ஜன.20

புங்குடுதீவு முனைப்புலம் பகுதியில் இருந்து அழுகிய நிலையில் மீட்கப்பட்ட பெண்ணின் சடலம் திட்டமிட்டுக் கொலை செய்யப்பட்ட பின்னர் கிணற்றில் வீசப்பட்டுள்ளது என்பது ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற நீதிவான் திருமதி ஜோய் மகிழ்மகாதேவாவின் உத்தரவின் பேரில் கிணற்றிலிருந்து சடலம் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டது. நேற்று அந்தக் கிணறு இறைக்கப்பட்டு மேலதிகத் தடயங்கள் தேடப்பட்டன.

கிணற்றிலிருந்து அந்தப் பெண் அணிந்திருந்த பச்சை நிறச் சேலை, பச்சை நிறமான நீள உள்பாவாடை, வெள்ளை நிறமான கட்டை உள்பாவாடை, கறுப்பு நிற மேலாடை, பச்சை

(27ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மார்ச் 12இல்

கொழும்பு,ஜன.20

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கள் எதிர்வரும் மார்ச் மாதம் 12ஆம் திகதி நடைபெறும் என பிரதமர் டி.டிம்.ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

கண்டியில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

(28ஆம் பக்கம் பார்க்க)


இன்னும் ஒரு நாள்

JAFFNA International 2011 TRADE FAIR 2nd Edition

ஜனவரி 21, 22, 23 திகதிகளில்

சுப்ரமணியம் பூங்காவிற்கு முன்பாக

மு.ப. 10.00 தொடக்கம் பி.ப. 7.00 வரை


## நல்லிணக்க ஆணைக்குழுவின் பணி இம்மாத இறுதியுடன் நிறைவடைகிறது

கொழும்பு,ஜன.20

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள், நல்லிணக்க ஆணைக் குழுவின் சாட்சியங்களைப் பதிவுசெய்யும் நடவடிக்கை இம்மாதம் 31ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது. நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வரும் மே மாதம் முதல்வாரமளவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் சமர்ப்பிக்கப்படும் என்று நல்லிணக்க ஆணைக் குழுவின் ஊடக இணைப்பாளர் லக்ஷ்மன் விக்ரமசிங்க நேற்றுத் தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தயாரிக்கும் முதற்கட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் (28ஆம் பக்கம் பார்க்க)


இடமாற்ற நிகழ்வு விழா கலைமகள் வர்த்தக நிலையம் (KTC)

அன்புடையீர்!..

நிகழும் மங்களகரமான தைத்திங்கள் 6ஆம் நாள் (20.01.2011) வியாழக்கிழமை முற்பகல் 11.09 மணிமுதல் 11.28 வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் எமது முன்னைய நிறுவனமாகிய

கலைமகள் வர்த்தக நிலையம் (KTC) எனும் வியாபர ஸ்தாபனத்தை இல.216, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்(VMS முன்பாக) எனும் முகவரிக்கு இடமாற்றம் செய்து ஆரம்பிக்க இருப்பதனால் எமது வாடிக்கையாளர்களாகிய தாங்களும் இந்த நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம் தங்களின் நல்வரவை நாடும்...

இல.216, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 021 222 2410


உரிமையாளர்: க.நந்தகுமார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
தொடர்புகளுக்கு

ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




வானம் சிதறிய மேகக் கூட்டத்துடன் காணப்படும். வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் மழை பெய்வதற்கு 20 வீத வாய்ப்பு உண்டு.

# மதவாதத்தைத் தூண்ட ஹெல உறுமய முயற்சி

கொழும்பு, ஜன. 20

நாட்டில் மதவாதத்தைத் தூண்டி, இனங்களுக்கிடையில் குரோதங்களை ஏற்படுத்த ஜாதிக ஹெல உறுமய முனைகிறது எனப் பிரதமர் கடுமையாகச் சாடியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கண்டி மாவட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒருங்கிணைப்பு அலுவலகத்தை நேற்று உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்துப் பேசிய பிரதமர் டி.எம்.ஜயரத்ன, நேற்றுமுன்தினம் ஜாதிக ஹெல உறுமயவினர் அவர் மீது விடுத்த கண்டனத்திற்குப் பதிலடி கொடுக் கும் விதமாக இதனைத் தெரிவித்துள்ளார்.



ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கண்டி மாவட்ட உள்ளூராட்சி மன்ற தேர்தல் ஒருங்கிணைப்பு அலுவலகத்தை பிரதமர் நேற்று உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கிறார்.

இலங்கையில் அனைத்து மதங்களும் ஒன்றே என்றும், எந்தவொரு மதத்துக்கும் முன்னுரிமை இல்லை என்றும் பிரதமர் தெரிவித்த கருத்தானது, அவர் வகிக்கும் பிரதமர் பதவிக்கும், நாட்டின் அரசியல் யாப்பிற்கும் முரணானது என்று ஜாதிக ஹெல உறுமய நேற்று முன்தினம் குற்றஞ்சாட்டியிருந்ததுடன், இது தொடர்பபாகப் பகிரங்கமாகத் தெளிவுபடுத்த வேண் டும் என்றும் வலியுறுத்தியிருந் தது. எனினும், இந்தக் குற்றச் சாட்டை முழுமையாக நிராகரித் தார் பிரதமர்,

''நாட்டில் பல மதங்களைச் சேர்ந்த பல்லின மக்கள் வாழ்கின்றனர். அனைவரும் சமமான வர்களாக மதிக்கப்பட வேண் டும் என்றே அரசியல் யாப்பு குறிப்பிடுகின்றது. இதனையே நான் வலியுறுத்தினேன்.

ஹெல உறுமயவோ மதத்தை அடிப்படையாக வைத்து மக்களுக்கிடையில் குரோதத்தை ஏற்படுத்தி, நாட்டில் மீண்டும் குழப்பத்தை ஏற்படுத்த முனைகிறது. இவ்வாறான நடவடிக்கைகளுக்கு நாட்டில் இனிமேல் இடமளிக்கப்படமாட்டாது'' - என்று தெரிவித்தார். *(ஹெல உறுமயவின் செய்தி 12 ஆம் பக்கத்தில்)* (சி)

# மழையால் சுற்றுலாப் பயணிகள் வருகை வீழ்ச்சி

கொழும்பு, ஜன. 20

அண்மைக்காலமாக நாட்டில் பெய்த அடை மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை காரணமாக இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் சுற்றுலாப் பயணிகளின் வருகை, 15 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது என இலங்கை சுற்றுலா சபை அறிவித்துள்ளது.

டிசம்பர் மாதம் சுமார் எழுபதாயிரம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர் என சுற்றுலாச் சபையின் தலைவர் கலாநிதி நாலக்க கொடஹேவா கூறியுள்ளார்.

எனினும், அடுத்த மாதத்திலிருந்து சுற்றுலாப் பயணிகளின் வருகை மீண்டும் வழமைக்குத் திரும்பும் என இலங்கை சுற்றுலா சபைத் தலைவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சுற்றுலாப் பயணிகளின் வருகை வீழ்ச்சிக்கு கடந்த சில மாதங்களாக நிலவிய சீரற்ற காலநிலையே காரணம் என்றும் அவர் கூறினார். (சி)

# மாகாண அலுவலகங்கள் இரண்டு யாழ்ப்பாணத்தில் நேற்றுத் திறப்பு

வலி.வடக்கு, ஜன.20

வடமாகாணத்தின் நிர்வாக அலுவலகங்கள் இரண்டு நேற்று யாழ்ப்பாணத்தில் தமது பணிகளை ஆரம்பித்தன.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு மற்றும் திணைக்களத்தின் அலுவலகங்கள் இணுவில், மருதனார்மடத்தில் அமைந்துள்ள வலிகாமம் கல்வி வலய மேல் மாடியில் நேற்று சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டன.

மருதனார்மடம் சந்தியில் அமைந்துள்ள வைரவர் ஆலயத்தில் இடம்பெற்ற பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து மாகாண அமைச்சின் அலுவலர்களினால் சுவாமிப்படங்கள் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு அலுவலகங்களில் வைக்கப்பட்டன. பின்னர் அங்கு பொங்கிப் பால் காய்ச்சியதைத் தொடர்ந்து புதிய அலுவலகங்கள் திறந்து வைக்கப்பட்டன.



மாகாணக் கல்வி அமைச்சின் அலுவலகம் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன், மாகாண பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் ஆ.சிவசுவாமி, ஆளுநரின் செயலாளர் ரங்கராஜன் உட்பட மாகாணத் திணைக்கள உயர் அலுவலர்கள் மற்றும் கல்லூரிகளினதும் பாடசாலைகளினதும் அதிபர்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, வடமாகாணப் பொதுநிர்வாகச் செயலகம் யாழ். நாவலர் வீதியில் உள்ள 695 ஆம் இலக்க இல்லத்தில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. பொதுநிர்வாகப் பிரதிப் பிரதம செயலரும் கிளிநொச்சி-முல்லைத்தீவு பிராந்திய ஆணையாளருமான தி.இராசநாயகம் அலுவலகத்தை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். (201-86-302)

# கரவெட்டியில் கும்பாபிஷேகம்

கரவெட்டி, ஸ்ரீ வெல்லன் விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10.06 மணி முதல் 11.30 மணி வரையான சுபவேளையில் நடைபெறும்.

கும்பாபிஷேகக் கிரியைகள் பிரதம குருவான கிரியாரத்னம் சிவஸ்ரீ வே.கனகசபைக் குருக்கள் தலைமையில் நடைபெறும். *(கும்பாபிஷேகச் சிறப்பிதழ் IV, V பக்கங்களில்)*

# நிகழ்வுகள்

## இன்று

**திறப்பு விழா**

கைதடி பொது நூலகத்தின் சிறுவர் பகுதி திறப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. சாவகச்சேரிப் பிரதேச சபையின் கைதடி உப அலுவலகப் பொறுப்பதிகாரி சி.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகப் பிரதேச சபையின் முன்னாள் செயலாளர் வே.சிவராஜலிங்கமும் சிறப்பு விருந்தினராகச் சாவகச்சேரிப் பிரதேச சபையின் செயலாளர் செல்வி தி.தர்சினியும் கலந்து கொள்ளவுள்ளார்கள். இறுதியாகக் கலை நிகழ்வுகளும், சிறார்களுக்கான பரிசளிப்பு நிகழ்வுகளும் நடைபெறும். (ற-121,131 ,122)

* * *

வடமராட்சி கிழக்குக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கசமாசத்துக்கான அலுவலகக் கட்டடத் திறப்பு விழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. சமாசத்தலைவர் கொ.அன்ரனிஸ்லாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவுக்குப் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அலுவலகத்தைத் திறந்து வைப்பார். சிறப்பு விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜி.எ. சந்திரசிறி, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மு. சந்திரகுமார், சில்வேஸ்திரி அலன்ரின், யாழ் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். போரூட், கொமன் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவற்றின் நிதி உதவியுடன் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட இந்த அலுவலகக் கட்டடம் வடமராட்சி கிழக்கு, தாளையடி பிரதான வீதியில் அமைந்துள்ளது. (ற-236)

* * *

சங்கானை மரக்கறிச் சந்தையில் புதிதாக அமைக்கப்பட்ட தேங்காய் விற்பனை மண்டபம் இன்று வியாழக்கிழமை பி.ப 2 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. வலி.மேற்கு பிரதேச சபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் டக்ளஸ் கலந்து கொண்டு விற்பனை மண்டபத்தைத் திறந்துவைப்பார். இதே வேளை பல்லசுட்டி சனசமூக நிலையமும் இன்று அமைச்சரால் திறந்துவைக்கப்படவுள்ளது. (ஒ-10-302)

**கால்கோள் விழா**

யாழ்.இந்துக் கல்லூரியில் தரம் 6 மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் கால்கோள் விழா இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள் ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா கலந்து கொள்வார். (ஒ-10)

**ஆண்டு நிறைவு விழா**

ஆனைக்கோட்டை விநாயகர் சனசமூக நிலையத்தின் ஐந்தாம் ஆண்டு நிறைவு தினம் இன்று பி.ப 3.30 மணிக்கு இடம்பெறும். நிலையத் தலைவர் க.இராசேந்திரன் தலைமையில் நிகழ்வு இடம்பெறும். பிரதம விருந்தினராக யாழ்.உள்ளூராட்சித் திணைக்கள சனசமூக அபிவிருத்தி உத்தியோகஸ்தர் திருமதி கே.சிவசோதி கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராகப் பத்திரிகையாளர் பொன்.பொன்னுத்ததுரை, ஓய்வுபெற்ற அதிபர், க.கதிரேசு ஆகியோர் கலந்து கொள்ளுவர். கௌரவ அதிதிகளாக கிராம அதிகாரிகளான அ.நிஷாந்தன், வை.சந்திரராஜா ஆகியோர் கலந்துகொள்வர். (ஒ-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ள நிவாரணம் வழங்க 51 மில்லியன் டொலர் தேவை

ஐ.நா. அறிவிப்பு



கொழும்பு, ஜன. 20

இலங்கையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட மக்களுக்கு உதவ 51 மில்லியன் டொலர் உதவிகள் தேவை என்று ஐக்கிய நாடுகள் சபை நேற்று அறிவித்தது.

இந்த உதவிகளைத் தந்து உதவுமாறு அது உலக நாடுகளிடம் கேட்டுள்ளது. "உதவிகளுக்காக 51 மில்லியன் டொலர் தேவை என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அடுத்த ஆறு மாத காலத்திற்கு உதவிகளை வழங்க வேண்டும். அந்தப் பணியில் இலங்கை அரசுக்கு உதவிடுமாறு உலக நாடுகளையும் நன்கொடையாளர்களையும் கேட்டுள்ளோம்" என்று ஐ.நா. தெரிவித்தது.

அண்மையில் நாட்டில் ஏற்பட்ட வெள்ளத்தால் இதுவரை 43 பேர் உயிரிழந்துள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மற்றும் பாதிக்கப்பட்ட ஏனைய பகுதிகளில் வெள்ளம் வடிந்து வருவதால் நலன்புரி முகாம்களில் தங்கியிருப்பவர்களின் எண்ணிக்கை 10 ஆயிரமாகக் குறைந்துள்ளது. வெள்ளத்தால் கிழக்கு, வடக்கு மற்றும் மத்திய பாகங்களே பாதிப்புக்கு உள்ளாகின.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய முறையில் அரசால் நிவாரணம் வழங்கப்படவில்லை என்று மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். சில இடங்களில் அவர்கள் இதற்கு எதிராக ஆர்ப்பாட்டங்களையும் நடத்தியுள்ளனர். (உ)

# பாகிஸ்தான் இராணுவ தளபதி கஜானி வருகை

கொழும்பு , ஜன. 20

பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஜெனரல் ஆஷாவ் பர்வேஷ் கஜானி நேற்று மாலை கொழும்பை வந்தடைந்தார்.

இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெகத் ஜயசூரிய அவரை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திற்கு நேரில் சென்று வரவேற்றார். இலங்கை இராணுவத் தளபதியின் அழைப்பின் பேரிலேயே கஜானி கொழும்பு வந்துள்ளார். அவருடன் மூத்த படைத் தளபதிகள் சிலரும் வந்துள்ளனர். (உ)

# முதலையால் வந்த வினை: கிராமமே மூழ்கியது வெள்ள நீரில்

அம்பாறை, ஜன. 20

முதலை ஒன்றால் 87 குடும்பங்கள் வெள்ளத்தில் மூழ்கிய சம்பவம் திருக்கோவில் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் உள்ளது திருக்கோவில். அங்குள்ள தாண்டியடி கரடியன் குளத்தின் குளக்கட்டு முதலை ஒன்றினால் பெருமளவில் தோண்டப்பட்டு குளத்துநீர் உடைப்பெடுத்தமையால் திருப்பதி என்ற கிராமம் நீரில் மூழ்கியுள்ளது.

இது தொடர்பாகத் திருக்கோவில் பிரதேச செயலாளர் தெரிவித்தவை வருமாறு:-

இக் குளக்கட்டு உடைப்பெடுத்துள்ளமையால் அக் கிராமத்தைச் சேர்ந்த 87 குடும்பங்கள் பாதிக்க்ப்பட்டுள்ளன. இக் கிராமத்தில் உள்ள வயல் நிலங்களும் நீரில் மூழ்கியுள்ளன. இதனால் சிறுபோக நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. குளத்து நீரைக் கட்டுப்படுத்துவதற்குத் தற்காலிகமாக மண் மூடைகள் அடுக்கப்படுகின்றன.

வெகு விரைவில் குளக்கட்டு புனரமைப்பு மேற்கொள்ளப்படும். வெள்ள அனர்த்தத்தின்போது முதலைகளின் கடிக்கு இலக்காகி பலர் இறந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

- இப்படி அவர் தெரிவித்தார்.

# தேசிய அ.அட்டை பற்றிய தகவலுக்கு எஸ்.எம்.எஸ்.

கொழும்பு, ஜன.20

தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்து முதல் அடையாள அட்டை கிடைக்கும் திகதி தொடர்பான முக்கிய தகவல்களை குறுந் தகவல் மூலம் உரியவர்களுக்கு அனுப்பும் திட்டத்தை ஆட்பதிவுத் திணைக்களம் முன்னெடுத்துள்ளது.

எவரேனும் ஒருவர் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த பின்னர் அது தொடர்பான விவரங்களைப் பெற்றுக்கொள்ள விரும்பினால், ஆர்.பி.டி. இடைவெளி எஸ்.பி.ஏ.எஸ்.(SBAS Capital Letters) இடைவெளி விண்ணப்ப இலக்கத்தைப் பதிவு செய்து 1919 என்ற இலக்கத்திற்கு குறுந்தகவல் அனுப்பி இச்சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும். எதிர்வரும் காலத்தில் இணைய தளம் ஊடாக இந்தத் தகவல்களைப் பெற்றுக் கொள்ள வழிவகுக்கப்படவுள்ளது. (உ-சி)

# நிபுணர் குழு ஏற்பாட்டுக்காக ஐ.நா. பிர்திநிதி வரவில்லை

கொழும்பு, ஜன.20

ஐக்கிய நாடுகள் சபையின் அவசர உதவிகளுக்கான பிரதி இணைப்பாளர் கத்தரீன் பார்க் இலங்கைக்கு வருவது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் உதவிப் பணிகளை ஆய்வு செய்வதற்காக மட்டுமே என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்படும் ஐ.நா. பொதுச் செயலருக்கு ஆலோசனை வழங்கவென நியமிக்கப்பட்ட குழு இலங்கைக்கு வரவுள்ளது. அதற்கான முன்னேற்பாடுகளைக் கவனிக்கவே கத்தரீன் வருகிறார் என்று தெளிவுபடுத்தி உள்ளது ஐ.நா.

நேற்று இலங்கை வந்து சேர்ந்த கத்தரீன் வடக்குப் பகுதிகளுக்கும் செல்ல உள்ளார். போரால் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வு நடவடிக்கைகளையும் அவர் நேரில் பார்வையிட உள்ளார். கிழக்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று அவர் நோட்டம்விட உள்ளார்.

"அவரது பயணம் முற்றிலும் மனிதார்ந்த தேவைகளையொட்டியது. அது நிபுணர் குழுவின் ஏற்பாடுகளுக்கானது அல்ல. நிச்சயம் இல்லை. இந்த விடயம் தெளிவாகி இருக்கும் என்று நினைக்கிறேன்" என்றார் ஐ.நா. பொதுச் செயலரின் பேச்சாளர் நெசிர்க்கி.

# அமெரிக்க ராஜதந்திரி திடீர் இரகசியப் பயணம்

கொழும்பு,ஜன 20

அமெரிக்காவின் முன்னாள் பிரதி ராஜாங்கச் செயலர் றிச்சர்ட் ஆர்மிரேஜ் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி திடீரென இலங்கை வந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை அலரி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்புக் குறித்து ஊடகங்களுக்கு அறிவிப்பு வெளியிடப்படும் வரை அது இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தது.

றிச்சர்ட் ஆர்மிரேஜ் அமெரிக்காவின் 13 ஆவது பிரதி இராஜாங்கச் செயலராக 2001 தொடக்கம் 2005 வரையான காலப்பகுதியில் பணியாற்றியவர். பின்னர் முரண்பாடுகளுக்கான அனைத்துலகக் குழுவின் சபை உறுப்பினராகவும் இருந்தவர்.

தற்போது ஆர்மிரேஜ் 'இன்டர்நஷனல்' என்ற அனைத்துலக வர்த்தக அபிவிருத்தி, தந்திரோபாயத் திட்டமிடல், பிரச்சினைகளைத் தீர்த்தல் போன்ற விடயங்களில் நெருக்கடியில் உள்ள பல்தேசிய வாடிக்கையாளர்களுக்காக ஆலோசனை வழங்கும் நிறுவனம் ஒன்றை நடத்தி வருகிறார்.

ஆர்மிரேஜ் உடனான இந்தச் சந்திப்பின் போது ஜனாதிபதியுடன் அவரது செயலாளர் லலித் வீரதுங்கவும், வெளிவிவகாரச் செயலர் றொமேஸ் ஜெயசிங்கவும் உடனிருந்தனர். விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையிலான பேச்சுக்கள் நடைபெற்றபோது ஆர்மிரேஜ் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கும் வந்திருந்தார்.

ஜப்பான் தலைநகர் ரோக்கியோவில் இணைத் தலைமை நாடுகள் நடத்திய கொடையாளர் மாநாட்டிலும் அவர் பங்கேற்றிருந்தார்.

தற்போது பல்வேறு நெருக்கடிகளிலும் சிக்கியுள்ள இலங்கை அரசுக்கு உதவும் நோக்கிலேயே அவர் கொழும்பு வந்திருக்கிறார் என்று கருதப்படுகிறது. அரசின் அழைப்பின் பேரிலேயே அவர் கொழும்பு வந்துள்ளார். மேற்கு நாடுகளுக்கும் கொழும்புக்கும் இடையிலான முறுகல் நிலையைச் சமாளித்து நிலைமையைச் சீராக்கும் அரசின் ஒரு முயற்சியே இது என்றுதெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக, அமெரிக்காவுடனான முறுகலைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் குறித்து அவரது ஆலோசனையைப் பெற இலங்கை அரசு திட்டமிட்டிருப்பதாகவும் சந்தேகிக்கப்படுகிறது. ஜனாதிபதி - ஆர்மிரேஜ் இடையிலான சந்திப்புக் குறித்து தகவல் வெளியிட்ட ஜனாதிபதி செயலகம், அவர்கள் எது பற்றி விவாதித்தார்கள் என்பதைக் கூறவில்லை. (த)



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அமெரிக்காவின் முன்னாள் ராஜதந்திரியான றிச்சர்ட் ஆர்மிரேஜ்க்கும் இடையிலான சந்திப்பு நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்றது.

# ஜனாதிபதி அமெரிக்கா விஜயம்

கொழும்பு, ஜன.20

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று அதிகாலை அமெரிக்கா பயணமானார். தனிப்பட்ட தேவைக்காக அவர் அமெரிக்கா சென்றார் என்று அவரது பேச்சாளர் கூறினார்.

ஜனாதிபதியின் புதல்வரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தற்போது லிபியாவிற்குச் சென்றுள்ளார். அவர் அங்கிருந்து நேரடியாக அமெரிக்காவிற்குச் செல்வார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (உ)

# எரிபொருளின் விலை உயர்த்தப்படமாட்டாது

கொழும்பு, ஜன 20

எரிபொருள்களுக்கான விலை உயர்த்தப்பட மாட்டாது என அரசு அறிவித்துள்ளது. உலகச் சந்தையில் எரிபொருளுக்கான விலை உயர்வடைந்து சென்றபோதிலும், உள்நாட்டில் விலை அரிகரிப்பை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பெற்றோலிய வள அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

பிலியந்தலை பிரதேசத்தில் எரிபொருள் நிரப்பு நிலையமொன்றை திறந்து வைத்து உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். கடந்த மாதத்தில் மட்டும் உலக சந்தையில் எரிபொருள் விலை 12 வீதத்தினால் உயர்வடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

சவூதி அரேபியா, ஓமான் மற்றும் ஈரான் போன்ற நாடுகளிடமிருந்து இலங்கை சலுகை விலையில் எரிபொருளைப் பெற்றுக் கொள்வதாக அவர் தெரிவித்தார். 2009ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தின் பின்னர் எரிபொருள் விலை உயர்த்தப்படவில்லை என அவர் குறிப்பிட்டார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
20 ஜனவரி 2011 வியாழக்கிழமை

# உதயன் ஊடக அனுசரணையுடன் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி

உதயன் ஊடக அனுசரணையுடன் 'வியாபாரத்துக்கான உங்கள் திறவு கோல்' என்ற தொனிப்பொருளிலான யாழ்ப்பாண சர்வதேச வர்த்தகக் கண்காட்சி நாளை வெள்ளிக்கிழமை கோலாகலமாக ஆரம்பமாகிறது. யாழ்ப்பாணம் பிரதான வீதியில் சுப்பிரமணியம் பூங்காவிற்கு முன்பாக உள்ள யாழ். மாநகரசபைக்கு உரிய இடத்தில் தொடர்ச்சியாக மூன்று நாள்கள் கண்காட்சி இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் வர்த்தக கைத்தொழில் மன்றம், வரையறுக்கப்பட்ட இலங்கைக் கண்காட்சி மற்றும் மாநாடுகள் சேவைகள் தனியார் நிறுவனம் ஆகியன இணைந்து இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளன.

இருநூற்றைம்பதுக்கும் மேற்பட்ட காட்சியறைகளைக் கொண்டிருக்கும் இந்தக் கண்காட்சி நிகழ்வை இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்த இந்தக் கண்காட்சியை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இந்தியா, இந்தோனேசியா ஆகிய நாடுகளினது முன்னணிக் கைத்தொழில் நிறுவனங்கள் இதில் பங்கேற்கின்றன. குறிப்பாக இந்தியாவின் முன்னணிக் கைத்தொழில் நிறுவனங்கள் ஐம்பதுக்கு மேற்பட்டவை தமது காட்சியறைகளை கொண்டிருக்கின்றன. அதில் கேரளா , கோயம்புத்தூர், பெங்களூர், சேலம், சென்னை, கைதரபாத் உள்ளிட்ட பகுதிகளிலுள்ள மிகப் பிரபல்யமான முன்னணி நிறுவனங்கள் உள்ளடங்குகின்றன.

அதேபோல் தென்னிலங்கையின் முன்னணி நிறுவனங்களும் பங்கேற்கின்றன. வடபகுதியில் உள்ள தொழில் முயற்சியாளர்களுக்கென 25 காட்சியறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

விவசாயம், உணவு பதனிடுதல், பொதியிடுதல், கட்டுமானத்துறை, மீன்பிடி, தகவல் தொழில்நுட்பம், சுற்றுலாத்துறை, மோட்டார் உபகரணங்கள், அழகுக்கலை, வங்கிச்சேவை, கல்வித்துறை ஆகியனவற்றை இந்தக் காட்சியறைகள் கொண்டுள்ளன. குறிப்பாக இயந்திர சாதனங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளதுடன் அந்த இயந்திரங்களை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பான முழுமையான விளக்கங்களும் வழங்கப்படவுள்ளன.

இந்த மாபெரும் கண்காட்சியினைப் பார்வையிடுவதன் மூலம் புதிய முதலீட்டுக்கான வழிவகைகளைக்கண்டு கொள்ள முடியும். அதன் மூலம் குடாநாட்டின் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் துறையினை மேலும் வளர்த்தெடுக்கக் கூடியதாக இருக்கும்.

அவை மட்டுமன்றி சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் முயற்சிகளுக்குத் தேவையான இயந்திர சாதனங்களையும் தொழில்நுட்ப அறிவினையும் பெற்றுக் கொள்ளக்கூடியதாகவும் இருக்கும்.

உலகின் எந்தப் பாகத்திலுமுள்ள இயந்திர சாதனங்கள் மற்றும் தொழில்நுட்ப அறிவினையும் இந்தக் கண்காட்சியூடாக யாழ்.குடாநாட்டு மக்களுக்கு வழங்கவுள்ளதாகவும் எனவே இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாது பயன்படுத்திக் கொள்ளுமாறும் யாழ்ப்பாண வர்த்தக கைத்தொழில் மன்றத் தலைவர் கே.பூரணச்சந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் இந்தக் கண்காட்சி மூலமாக ஏற்றுமதி செய்வதற்கான உற்பத்திப் பொருள்களை எவ்வாறு சிறந்த தரக் கட்டுப்பாட்டுடன் மேற்கொள்வது என்பது தொடர்பான வழிகாட்டல்களையும் ஏற்றுமதி நடைமுறைகளையும்அறிந்து கொள்ளமுடியும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தக் கண்காட்சியில் மேலும் ஒரு பயனுடைய அம்சமாகப் பல்வேறு தலைப்புகளில் கருத்தரங்குகளும் வழி காட்டல்களும் வழங்கப்படவுள்ளன. கண்காட்சி நடைபெறும் மூன்று நாள்களும் யாழ். பொது நூலகக் கேட்போர் கூடத்தில் பிற்பகல் வேளை யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தக கைத்தொழில் முயற்சியாளர்களுக்கென அந்தக் கருத்தரங்குகள் இடம் பெறவுள்ளன.

அதில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு 'வடமாகாணத்தில் வர்த்தகத்துக்கான சூழல் மற்றும் முதலீட்டுக்கான வாய்ப்புக்கள்' என்ற தலைப்பில் இடம் பெறவுள்ளன. இரண்டாம் நாளான சனிக்கிழமை இரண்டு அமர்வுகளாகக் கருத்தரங்குகள் இடம் பெறவுள்ளன. முதலாவது அமர்வு சிறிய நடுத்தரக் கைத்தொழில் முயற்சியாளர்களுக்குத் தேவையான சாத்தியமான முதலீட்டு வர்த்தக அபிவிருத்தி நிதிச் சேவைகள் என்ற தலைப்பிலும் இரண்டாவது அமர்வு நிறுவனங்களின் கூட்டமைப்பு மற்றும் முதலீடு சம்பந்தமான வரையறைகள் என்ற தலைப்பிலும் இடம்பெறவுள்ளன. மூன்றாம் நாளான ஞாயிற்றுக்கிழமை உற்பத்திப் பொருள்களின் இறுதிநிலைகளும் பொதி செய்தல் முறைகளும் என்ற தலைப்பிலும் கருத்தரங்கு இடம் பெறவுள்ளன. தென் பகுதி மற்றும் இந்தியாவைச் சேர்ந்த வளவாளர்கள் இந்தச் கருத்தரங்குகளை நடத்தவுள்ளனர்.

கண்காட்சியினை மேலும் செழுமைப் படுத்துவதாக தென்னிலங்கையின் முன்னணி இசைக் குழுவினர் வழங்கும் இன்னிசைக் கதம்ப நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. சிறுவர்களுக்கான களியாட்ட நிகழ்வுகளும் அனைத்து தரப்பினரையும் கவரும் வகையிலான பொழுது போக்கு அம்சங்களும் இடம்பெற ஏற்பாடாகியுள்ளன.

யாழ். பொது நூலகத்தில் இடம் பெறும் கருத்தரங்குகளுக்கு இலவச அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கண் காட்சியைக் காண்பதுக்கு 30ரூபா அற விடப்படுகிறது. பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களும் இலவச அனுமதியுடன் பார்வையிட முடியும். உயர் கல்வியுடன் தொடர்புடைய துறைசார்ந்த 15 இற்கும் மேற்பட்ட நிறுவனங்களின் காட்சிக் கூடங்கள் அங்குள்ளன. மாபெரும் இந்தக் கண்காட்சி மூலம் யாழ்.குடாநாட்டில் நலிவடைந்திருக்கும் கைத்தொழில் துறையினை மீளவும் மேம்படுத்தப் பேருதவியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**உமா**

புதுக்கடைத் திறப்பு விழா
நிகழும் மங்களகரமான
இன்று (20.01.2011)
வியாழக்கிழமை
முற்பகல் 11.09 முதல்
11.28 வரை உள்ள சுபவேளையில்
இல.39, பிரதான வீதி, நெல்லியடியில்
ஜமுனா ஸ்ரோர்ஸ்
எனும் பல்பொருள் வாணிப நிலையம்
புதிதாகத் திறக்கப்படவுள்ளது
என்பதனை வாடிக்கையாளர்களுக்கு
மகிழ்ச்சியுடன்
அறியத்தருகின்றோம்.
உரிமையாளர்.
தொ.பே.: 021 226 3970
(0065)

இலவச முக ஒப்பனை!
Nature's Secrets
உங்கள் யாழில் மீண்டும்!
நேச்சர்ஸ் சீக்ரெட்ஸ் அழகுக்கலை நிபுணர்களின் கைவரிசையில் இலவச முக ஒப்பனை!
வரும் 21 முதல் 23ம் திகதி வரை யாழ்ப்பாணம் துரையப்பா அரங்கில் நடக்கவிருக்கும், சர்வதேச வர்த்தக கண்காட்சியில் நேச்சர்ஸ் சீக்ரெட்ஸ் கண்காட்சி கூடாரத்திற்கு வருகை தரும் அன்பர்கள் அனைவரும் இலவச முக ஒப்பனையும், ஒப்பனை அழகுக்கலை சம்பந்தமான பல பயனுள்ள துப்புகளையும் பெற்றுக் கொள்ள ஓர் அரிய வாய்ப்பு.



காலம் :
தை மாதம் (January)
21 முதல் 23 வரை
இடம் :
யாழ்ப்பாணம் துரையப்பா அரங்கில்
கூடாரம் :
நேச்சர்ஸ் சீக்ரெட்ஸ்
(Stall No : 113-114)
நேச்சர்ஸ் சீக்ரெட்ஸ் - இயற்கையால் புத்துயிர் பெற்று உங்களுக்காக உருவாக்கப்பட்டது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# இந்தியா வழங்கும் உதவிகள் வெறும் கண்துடைப்பாக இருக்கவேண்டாம்

ஆழிப்பேரலை அழிவுகளாலும், கொடிய போரின் விளைவுகளாலும் இன்னோரன்ன துன்பங்களுக்குள்ளாகித் தவித்த மக்கள் இன்று இன்னொரு பேரழிவை எதிர்கொண்டு மீண்டுகொண்டிருக்கிறார்கள்.

பட்டகாலிலே படும் என்ற பழமொழிக்கு ஒப்ப இந்தப் பேரழிவு தமிழ்பேசும் மக்களைக் குறிப்பாக கிழக்கு மாகாணத்து மக்களையே பெரிதும் பாதித்திருக்கிறது.

இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உலக நாடுகள் பல உதவ முன்வந்திருக்கின்றன. அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் இதில் முன்னிற்கின்றன. பிரிட்டிஷ் முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸ் அவர்களே தனிப்பட்ட முறையில் இலங்கையில் மழைவெள்ளத்தால் அவதியுற்ற மக்களுக்கு கவலை தெரிவித்திருப்பதுடன் தமது நாடு இம் மக்களுக்காக உதவிகளை வழங்கும் என்பதாக அறிவித்திருந்தார்.

உலகில் போரின்ாலோ இயற்கை இடரினாலோ ஒருநாட்டில் பெருவாரியான மக்கள் பாதிக்கப்படும் போது உலக நாடுகள் உதவிக்குவருவது ஒன்றும் புதிய விடயமல்ல.

அந்த வகையில்தான் அண்டை நாடான இந்தியாவும் இடர்படும் இலங்கை மக்களுக்கு உதவுவதற்கு ஓடோடிவருகின்றது. ஆனால் உலகின் ஏனைய நாடுகள் வழங்கும் உதவிக்கும் இந்தியா வழங்கும் உதவிக்கும் நிறையவும் காரணகாரியங்கள் உண்டு.

அது அண்டை நாடாக இருப்பது மட்டுமல்ல இன மத கலாசாரங்களில், சமய சம்பிரதாய மற்றும் மொழிவழக்கு களிலும் நெருங்கிய உறவையும் ஒற்றுமையையும் கொண்டிருக்கின்றது. இலங்கையில் காணப்படும் பிரதான சமயங்களான பௌத்தம் மற்றும் இந்து மதங்கள் இந்தியப் பெரு நிலத்தில் தோன்றிய மகான்களால் அருளப்பட்டவை. இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ மார்க்கப் பெரியோர்களும் சிந்தனையாளர்களும் கூட அந்தப் பெரு நிலத்தின் வழியாகவே வந்திருப்பார்கள்.

எனவே இலங்கை மக்களுக்குக் குறிப்பாக இந்திய கரைக்கு மிக அண்மித்த வடக்கு - கிழக்குப் பிரதேச மக்களுக்கு ஏற்படும் இன்ப துன்பங்கள் - இடர்பாடுகள் அங்கே உடனுக்குடன் பிரதிபலிப்புகளை ஏற்படுத்துவது ஆச்சரியமில்லை.

அந்த வகையில் மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண மக்களுக்கு உடனடியாக இந்திய அரசு விமான மார்க்கமாக உதவிகளை அனுப்பியிருந்தது. இப்பொழுது மேலும் ஒருதொகை நிவாரணப் பொருள்களைக் கப்பல் மூலம் அனுப்ப விருப்பதாக இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் அசோக் கே. காந்த் அறிவித்திருக்கிறார். வரும் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வரவிருக்கும் இந்திய தூதுவர் அசோக் கே.காந்த் இங்கு நடைபெறவிருக்கும் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் கலந்துகொள்ளவிருப்பதுடன் யாழ். போதனாவைத்திய சாலைக்கு மருத்துவப்பொருள்கள் வழங்கும் நிகழ்விலும் பின்னர் நடைபெறும் இந்தியன் வங்கி திறப்புவிழாவிலும் கலந்து கொள்ளவிருக்கிறார்.

வட பகுதி மக்களுக்கு உதவுவதற்கென இந்தியத் தூதரகத்தின் கிளையொன்றை இந்திய அரசு ஏற்கனவே அமைத்துள்ளது. இந்தியா செல்லவிரும்பும் வடபகுதி மக்கள் இந்தக் கிளையின் ஊடாகவே விசா பெற்றுக்கொள்ளக்கூடிய வசதிகள் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது.

அண்மைக்காலத்தில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரச படைகளுக்குமிடையில் நடந்த போரின் பின்னர் அங்கு பாதிக்கப்பட்டு நிர்க்கதிக்குள்ளாகியிருந்த முல்லைத்தீவு மக்களுக்கென தமிழ் நாட்டு மக்கள் ஏராளமான அத்தியாவசியப் பொருள்களை தமிழ் நாடு அரசின் அனுசரணையுடன் அனுப்பியிருந்தார்கள் - இந்திய அரசினால் அனுப்பப்பட்டிருந்த அப்பொருகள் உரிய காலத்தில் பாதிக்கப்பட்ட மக் களைப் போய்ச்சேரவில்லை. அவைகள் பலவும் பழுதடைந்து போயிருக்கக் கூடும் - வெகுகாலத்துக்குப் பின்னரே அப்பொருள்கள் விநியோகிக்கப் பட்டதாக செய்திகள் வந்தன.

போரினால் வீடுகளை இழந்து நிர்க்கதிக்குள்ளாகியிருக்கும் இம் மக்களுக்கென 50ஆயிரம் வீடுகளைக் கட்டிக் கொடுக்க உறுதியளித்து அந்த முயற்சியிலும் இந்தியா இறங்கியிருக்கின்றது. இந்திய வெளியுறவு அமைச்சர் - எஸ்.எம்.கிருஷ்ணா யாழ்ப்பாணம் வந்து அத்திட்டத்தை ஆரம்பித்து வைத்துவிட்டுச் சென்றார்.

இவையெல்லாம் வரவேற்கப்பட வேண்டிய விடயங்கள் தான். மறுப்பதற்கில்லை. ஆனால் இலங்கை அரசு புலிகளுக்கெதிரான போரை நடத்துவதற்கும், புலிகளை முற்று முழுதாக அழித்தொழிப்பதற்கும் ஆயுதம், ஆலோசனை மற்றும் பல்வேறு வகை உதவிகளைப் புரிந்த இந்திய அரசின் இந்தவித உதவிகள் தமிழ் மக்களைப் பொறுத்தவரை, யானைப் பசிக்கு பொரி உருண்டையை வழங்கிய அளவிலேயே எடுத்துக்கொள்ளப்படும்.

ஆறு தசாப்த காலமாக இந்த நாட்டில் தமது உரிமைகளை நிலைநிறுத்திக் கொள்வதற்காகப் போராடிவரும் இந்த மக்களின் நியாயமான உரிமைகளை வென்றெடுப்பதற்கு இந்தியா உதவி புரிவதற்கு கடமைப்பட்டிருக்கின்றது. தீர்வுத்திட்டமொன்றை முன்வைப்பதற்கு இலங்கை ஆட்சியாளர்கள் பலவிதமான சாக்குப்போக்குகளைக் கூறி பின்னடித்து வருவது இந்திய அரசுக்குதெரியாதவிடயமல்ல.

போரில் உதவிகள் புரிந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் சாகவும், அங்கவீனர்களாகவும், வீடுவாசல்களை இழந்து ஓட்டாண்டிகளாக ஊர் ஊராகத் திரியவும் வழிசெய்த இந்தியா இந்த மக்களின் நியாயமான சட்ட ரீதியான உரிமைகளை வழங்கும் வகையில் இலங்கை அரசை நிர்ப்பந்திக்க முடியாமல் இருப்பது ஆச்சரியமாகும் - அந்தவகையில் ஆக்கபூர்வமான உதவி எதனையும் இந்தியா புரியுமானால் அதுவே இவர்களை திருப்தி செய்வதாகவும் நிம்மதி கொள்ளச் செய்வதாகவும் இருக்கும். அந்த அரசின் செயற்பாட்டால் உடல் - உளரீதியில் சொல்லொணாத் துன்பங்களுக்குள்ளான மக்களை ஆசுவாசப்படுத்துவதாக இருக்கும். மற்றப்படி ஏனைய எல்லா உதவிக்ளும் வெறும் கண்துடைப்பாகவே கருதப்படும் என்று சொல்லத் தேவையில்லை.

# உணவு தொடர்பாக ஆய்வு; புதிய படிவம் அறிமுகம்

வவுனியா, ஜன.20

உணவு கையாளும் நிலையங்களைப் பரிசோதனை செய்வதற்கும் அவற்றின் தரங்களை மதிப்பீடு செய்வதற்கும் புதிய படிவம் ஒன்றைத் தயாரித்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஊடாக அமுல்படுத்துவதற்கு சுகாதார போசாக்கு நலன்புரி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பான பரீட்சார்த்தப் படிவங்கள் சகல மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்புதிய படிவத்தின் பிரகாரம் உணவுச் சட்டம் மற்றும் உள்ளூராட்சித் துணைவிதிகளுக்கு அமைவாகப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரிகள் பரிசோதனைகளை மேற்கொண்டு புள்ளிகளை வழங்குவார்கள். இதன் அடிப்படையிலே உணவு தயாரித்தல் அல்லது உணவு விற்பனை செய்தல் சுகாதார விதிமுறைக்கு அமைவாக உள்ளதா என மிகவும் தெளிவாக அறிவதற்கு ஏற்ற வகையில் இப்படிவம் வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இப்படிவங்கள், உணவு தயாரித்து விற்பனை செய்யும் ஹோட்டல்கள், தேநீர்ச்சாலைகள், ஐஸ்கிறீம் மற்றும் குளிர்பானங்கள் உற்பத்தி செய்யும் இடங்கள், பேக்கறிகள், உணவுப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள், சுற்றுலா உணவு விடுதிகள், நடமாடித் திரிந்து உணவு கொண்டு விற்பனை செய்வோர் ஆகியோரின் சுகாதார நிலையை அறிவதற்கு மிகப் பொருத்தமாக அமையும் எனத் தெரிய வருகின்றது.

இந்தச் செயன்முறை இலங் கையில் உள்ள எல்லா மாவட் டங்களிலும் நடைமுறைப்படுத் தப்படவுள்ளதாகவும் தெரிவிக் கப்படுகின்றது. (க-501)

# ஆணைக்குழு செயற்பாடுகளில் இராணுவம் தலையிடாது

கொழும்பு, ஜன.20

நல்லிணக்க ஆணைக் குழுவின் செயற்பாடுகளில் இராணுவத்தினர் தலையிட மாட்டார்கள் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உபய மெதவல தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக் குழு இராணுவத்தினரின் அனுமதியின்றி அண்மையில் மன்னாரில் அதன் அமர்வை நடத்தியதால் இராணுவம் இதுதொடர்பில் கேள்வி எழுப்பியது என்று அனைத்துப் பல்கலைக்கழக ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் உதுல் பிரேமரட்ன கூறியிருந்தார். இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே பிரிகேடியர் மேற்கண்டவாறு கூறினார்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் செயற்பாடுகளில் மாத்திரமல்ல, எந்தவோர் ஆணைக்குழுவின் செயற்பாடுகளிலும் இராணுவத்தினர் தலையிடமாட்டார்கள்; தலையிட்டதுமில்லை.

நல்லிணக்க ஆணைக் குழு மன்னாரில் இராணுவ அனுமதி இன்றி அமர்வுகளை நடத்தியமை தொடர்பாக இராணுவத்தினர் கேள்வி எழுப்பினர் என்று கூறப்படுவதில் எதுவித உண்மையுமில்லை. அது எமக்குத் தேவையற்ற விடயம்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

(சி)

# சம்பந்தர் பாடிய தைப்பூசம்

இன்று தைப்பூசப் பெருநாளாகும். உழவுத் தொழிலை மேற்கொண்டு தமக்கும் பிறருக்குமாக நெல் விளைவித்து உதவும் உழவப் பெருமக்கள் இந்நாளைப் புனிதமானதொரு நாளாகக் கொண்டாடுவது வழக்கம்.

இருபத்தேழு நட்சத்திரங்களுள் பூசம் அல்லது புஷ்யம் எட்டாவதாகும். தைத்திங்களில் பூச நாள் நட்சத்திரம் வரும். பெரும்பாலும் நிறைமதி நாளாக இருக்கும். இதனைப் புண்ணிய நாளாக இந்துக்கள் கொண்டாடுவர்.

தேவர்களின் குருவாகிய பிருகஸ்பதி பூச நட்சத்திரத்தின் தேவதை என்பர். பிருகஸ்பதி அறிவின் தேவதை என இந்துக்கள் நம்புவதால் பூச நட்சத்திரத்தை வணங்கினால் பிருகஸ்பதியின் அருள் கிடைக்கும் என்பர். தைப்பூச நன்னாளில் புண்ணிய நதியில் நீராடினால் அதிக புண்ணியம் கிடைக்கும் என்பர்.

தைப்பூசம் ஒரு சுபதினமாகும். இன்றைய தினம் புதிதாய் விளைந்த தானியக் கதிர்களை வீட்டிற்குக் கொண்டு வருவர். இது புதிது எடுத்தல் எனப்படும். ஆதி சேடனும் வியாக்கிரபாதரும் காண இறைவன் இன்பத் திருநடனம் ஆடிய நாளாகவும் இது விளங்குகிறது. இதனால் இந்நாள் விசேடம் பெற்றது. இதனை மணிவாசகர் பதஞ்சலிக்கருளிய பரமநாடகம் என்று அருளியுள்ளார்.

பரமேஸ்வரி சிவராமலிங்கம்

பூச நட்சத்திரத்தை வட மொழியில் திஷ்யம் என அழைப்பர். திஷ்யம் என்பது தைசம் எனவரும். தைசம் என்பது தை என மருவி நின்றது.

தைப்பூசத்தின் சிறப்பினை உணர்த்தும் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் தேவாரம் இது.

மைப்பூசு மொண்கணமட நல்லார்
மாமயிலைத் கைப்பூசு நீற்றான் கபாலீச்
சரமமர்ந்தான் நெய்ப்பூசு மொண்புழுக்
கல் நேரிழையார் கொண்டாடும் தைப்
பூசங் காணதே போதியோ பூம்பாவாய்

# உன்னைப்போல் அயலவனையும் நேசி

அன்பின் வடிவமான தெய்வத்தை ஒருவன் எவ்வாறு கண்டுகொள்ள முடியும். இந்த உலகில் அன்னை, தந்தை ,சகோதரன், மனைவி, நண்பர்கள்,சுற்றத்தினர் ஆகியோர் வெளிப்படுத்தியவாறான பல்வேறு வடிவங்களை அன்பு ஏற்றுக்கொள்கிறது. இத்தகைய உலகியல் அன்பில் நீ சுயநலத்தையும் சுயலாபத்தையுமே காண்கிறாய். ஆனால் தெய்வீக அன்பு சுயநலமற்றது.

இறைவன் எல்லோரையும் நேசிப்பதைப் போல நீயும் எல்லோரையும் நேசிக்க முயற்சி செய்ய வேண்டும். பகவத் கீதையில் மனவாம்ஸோ ஜீவலோக ஜீவ பூதஸ்ஸ நாதனாக அனைவரும் தெய்வீகப் பொறிகள் என்பது இதன் பொருள். ஆகவே இறைவன் உன்னை நேசிப்பது போலவே நீயும் மற்றவர்கள் எல்லோரையும் நேசித்து அவர்களுக்கு மகிழ்ச்சி கொடுக்க வேண்டும். எல்லாவற்றுக்குள்ளும் ஒரே தெய்வம் இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இந்த உண்மையைப் புரிந்துகொண்டு இந்த சத்யத்தில் நம்பிக்கையை வளர்த்துக் கொண்டால் ஒவ்வொருவரையும் இவனால் நேசிக்க முடியும். இன்று இத்தகைய அன்பைக் காணமுடிவதில்லை என்றால் இறைவனுடைய வாக்கில் மனிதனுடைய வாக்கில் மனிதனுக்கு நம்பிக்கை இல்லை என்றுதான் பொருள்.



(நன்றி:-தெய்வீகம் மலரும் பொழுது)

சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதி அகலிப்பு 90% நிறைவு

கோப்பாய், ஜன.20

யாழ்-பருத்தித்துறை வீதி அகலிப்புப் பணிகள் நெல்லியடியிலிருந்து கோப்பாய் பிரதேச செயலகம் வரையான பகுதிகளில் 90 வீதமான வரையில் நிறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனை அடுத்து இந்த வீதியூடான போக்குவரத்துக்கள் இலகுபடுத்தப்பட்டுள்ளதுடன் நேரவிரயமும் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் போக்குவரத்தில் ஏற்பட்ட சிரமங்கள் இலகு படுத்தப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தொடக்கம் உலர்காலப் பருவநிலை காணப்படுவதால் வீதியில் இடப்பட்ட தார் உருகிக் கற்கள் வெளிக் கிழம்பி ஆங்காங்கே வீதிகள் சிதை வடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (201-72)

## யாழ்ப்பாணத்தில் கண்ணிவெடிகள் அகற்றப் பணியாளர் பற்றாக்குறை

### நிதியுதவிகள் கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம், ஜன.20

யாழ்.மாவட்டத்தில் கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்கு ஆளணிப் பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதன் காரணமாக அந்தச் செயற்பாடுகளைத் துரிதப்படுத்த முடியாதுள்ளதாகச் சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இருந்து அறிய முடிந்தது.

யாழ் மாவட்டத்தில் கண்ணிவெடி அகற்றும் செயற்பாட்டில் தற்போது 500 ஊழியர்கள் வரையே செயற்பட்டுக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவ மனிதநேயக் கண்ணி வெடி அகற்றும் பிரிவு, டனிஸ் மிதிவெடி அகற்றும் பிரிவு ஹலோட்ரஸ்ட் ஆகிய மூன்று கண்ணிவெடி அகற்றும் நிறு வனங் களைச் சேர்ந்த 500 ஊழியர்கள் வரையிலேயே களத்தில் கண்ணிவெடி அகற்றல் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர்.

இருப்பினும் இந்த ஊழியர்களின் எண்ணிக்கை யாழ் மாவட்டத்திலுள்ள கண்ணிவெடிகளை அகற்றுவதற்குப் போதாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நிறுவனங்கள் ஊழியர்களை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு நிதியினைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்களுக்கான நிதிகளை வழங்கும் நாடுகள் நிதியை வழங்குவதற்குப் பின்னடிப்பதாலேயே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது.

இலங்கை அரசு மீள் குடியமர்வு தொடர்பில் அவசரப்படத் தேவையில்லை எனத் தெரிவித்ததன் காரணமாக உதவி வழங்கும் நாடுகள் இந் நிறுவனங்களுக்கானநிதியைப் பெருமளவு குறைத்துவிட்டன. இதனால் இந்த நிறுவனங்கள் தமது ஊழியர்களை அதிகரிக்க முடியாதநிலை காணப் படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (15)

## மாதாந்த உதவி கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுள்ளன

கொடிகாமம், ஜன.20

தபாலகங்கள் மூலம் வழமையாக மாதாந்தம் வழங்கப்படும் பொதுசன மாதாந்த உதவிப்பணக் கொடுப்பனவுகள் சில பயனாளிகளுக்கு இந்த வருடம் தொடக்கம் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரிப் பிரதேச செயலக சமூகசேவைத் திணைக்களம் மூலம் வழங்கப்பட்டு வந்த கொடுப்பனவுப் பட்டியலில் இருந்து பயனாளிகள் சிலரின் பெயர்கள் இந்த வருடம் நீக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக வரணி, கொடிகாமம் தபாலகங்களில் இதுவரை உதவிக் கொடுப்பனவுகளைப் பெற்று வந்த பயனாளிகள் பலருக்கு இந்த நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (201-122)

## முன்னுரிமைஅடிப்படையில் அரை நிரந்தர வீடுகள்

வலி. வடக்கில் அண்மையில் மீளக்குடியமர பாதுகாப்புப் படையினரால் அனுமதிக்கப்பட்ட மூன்று கிராம அலுவலர் பிரிவுகளில் உடனடியாக மீளக் குடியேறுபவர்களுக்கு, முன்னுரிமை அடிப்படையில் அரை நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இதற்கான சகல ஒழுங்குகளையும் வலி.வடக்குப் பிரதேச செயலர் மேற்கொண்டுள்ளார். வலி.வடக்கில் கண்ணி வெடிகள் அகற்றப்பட்டதாகச் சோதனை மேற்கொள்ளப்பட்டு அண்மையில் சான்றிதழ் வழங்கப்பட்ட இளவாலை வடமேற்கு, இளவாலை வடக்கு,வித்தகபுரம் ஆகிய பகுதிகளில் முறையே 221, 222, 223 ஆகிய கிராம உத்தியோகத்தர் பீரிவுகளில் இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர். இந்த விடயம் தொடர்பாகச் சம்பந்தப்பட்ட குடியிருப்பாளர்களுக்கும் பிரதேச செயலரால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட மேற்படி இடங்களில் தாமதமின்றி உடனடியாக மீளக் குடியேற முன்வருபவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் அகதிகளுக்கான ஐ.நா நிறுவனத்தின் நிதியுதவியுடன் ஒவ்வொருவீடும் ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியில் அமைக்கப்படவுள்ளன. (201-115)

### திறமைக்குப்பரிசு....



ஊக்குவிப்பு: புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குகிறார். (72)

## பாடசாலைக்கு நீரிறைக்கும் மோட்டர்

கொடிகாமம், ஜன.20

வரணி, இயற்றாலை அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு மேற்படி பாடசாலையின் பழைய மாணவர் ஒருவர் நீரிறைக்கும் மின்சார மோட்டர் ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

தற்போது ஜேர்மனியில் வசிப்பவரும் தாவளை இயற்றாலையை வசிப்பிடமாகக் கொண்டவருமான கணபதிப்பிள்ளை தவராசவேல் என்பவரே இந்த அன்பளிப்பை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (201-122)

## கிழக்கில் வெள்ளம் பாதித்த மக்களுக்கு தெல்லிப்பழை இளைஞர்கள் உதவி

வலி. வடக்கு, ஜன. 20

கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கவெனத் தெல்லிப்பழைப் பிரதேச பூமா விளையாட்டுக் கழகம் சேகரித்த பொருள்கள் கிழக்கு பல்கலைக் கழக மாணவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

மேற்படி விளையாட்டுக் கழகம் தாம் சேகரித்த பொருள்களைத் தெல்லிப்பழை பிரதேச செயலாளரிடம் கையளித்தது. இவ்வாறு கையளிக்கப்பட்ட பொருள்களே கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

கடந்தவாரம் கிழக்கு மாகாணத்தில் பெய்த மழையைத் தொடர்ந்து ஏற்பட்டவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தெல்லிப்பழை பூமா விளையாட்டுக் கழகம் தாம் சேகரித்த பொருள்களை நேற்றுக் காலை 9.45 மணியளவில் வலி. வடக்கு பிரதேச செயலாளரிடம் கிழக்கு மாகாணத்துக்கு அனுப்பி வைப்பதற் காக கையளித்தது. இதனையடுத்து பொருள்களைப் பெற்றுக் கொண்ட பிரதேச செயலாளர் குறிப்பிட்ட பொருள்களை உடனடியாக கிழக்கு பல்கலைக் கழக மாணவர்களிடம் கையளித்துள்ளார்.

இந்தப் பொருள்களில் பால்மா, பிஸ்கட் வகைகள் மற்றும் குடிதண்ணீர் சவர்க்காரம் என பல்வேறு பொருள்கள் அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (201-86)

## போரால் பாதிப்புற்றோருக்கு நட்ட ஈட்டுக் கொடுப்பனவு

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கடந்த சனிக்கிழமை தைப் பொங்கல் தினத்தன்று நட்ட ஈட்டுக்கு கொடுப்பன வுக்கான காசோலைகள் வழங்கப்பட்டன.

கொடுப்பனவுகள் யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் வைத்து வழங்கப்பட்டன. கடந்த கால யுத்தம் காரணமாகக் குடாநாட்டில் ஏற்பட்ட சொத்தழிவுகள், உடல் நலப் பாதிப்புக்கள் மற்றும் மரணங்கள் போன்றவற்றால் பாதிக்கப்பட்டோருக்கு இந்த நட்ட ஈட்டுக் கொடுப்பனவுகள் புனர்வாழ்வு அதிகார சபையால் வழங்கப்பட்டன. இறப்பு மற்றும் உடற் பாதிப்பு ஏற்பட்ட பொதுமக்களுக்கான காசோலைகளை சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திர சிறி கஜதீர மற்றும் அமைச்சர் டியூ குணசேகர மேடையில் வைத்து வழங்கினார்கள்.

அரச ஊழியர்கள் மற்றும் இளைப்பாறியோருக்கரன காசோலைகள் புனர்வாழ்வு அதிகாரசபை உத்தியோகத்தர்க ளால் நேரடியாக வழங்கப்பட்டன. (201-122)

## 'கவரிங்' நகைகளையும் விட்டு வைக்காத திருடர்

சண்டிலிப்பாய், ஜன.20

திருடர்களின் தொல்லை நாளுக்குநாள் அதிகரித்துள்ளதால் 'கவரிங்' நகைகளையும் வீடுகளில் வைக்க முடியாமல் மக்கள் திண்டாடுகின்றனர்.

பட்டப்பகல் வீட்டில் எவரும் இல்லாத சமயம் பார்த்து உள்ளே சென்ற திருடன் அங்கு வைக்கப்பட்டிருந்த 'கவரிங்' நகைகளைத் தங்கநகைகள் என்று நினைத்துத் திருடிச் சென்றுள்ளான்.

இந்தச்சம்பவம் மானிப்பாய் பொலிஸ் பகுதியிலுள்ள கட்டுடை என்னும் இடத்தில் இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் கூறப்படுவதாவது,

ஏற்கனவே தாய் தந்தையரை இழந்த நிலையில் தனிமையில் வாழ்ந்து வந்த இளம் பெண் சம்பவதினம் வீட்டைப் பூட்டி விட்டு வெளியே சென்றுள்ளார். பெண் வெளியே செல்வதை அவதானித்த திருடன் சமையலறை வழியாக வீட்டுக்குள் இறங்கி அங்கே வைக்கப்பட்டிருந்த 'கவரிங்' நகைகளை அசல் தங்கநகைகள் என்று நினைத்துத் திருடிச் சென்றுள்ளான்.

இந்தத் திருட்டுக் குறித்து மேற்படி பெண் மானிப்பாய் பொலிஸில் செய்துள்ள முறைப்பாட்டைத் தொடர்ந்து கவரிங் நகைகளைத் திருடியவரைக் கண்டு பிடிப்பதில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை கோப்பாய் மத்தி, வடக்கு ஆகிய பகுதிகளில் திருடர்களின் தொல்லை மீண்டும் தலை தூக்கியுள்ளதாகப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த திங்கள்கிழமை இரவு கோப்பாய் மத்திப் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றினுள் உள்நுழைந்த திருடர்கள், வீட்டிலுள்ளோர் விழிப்படைந்து கூக்குரலிட்டும் தொலைபேசி மூலம் அயலவர்களுக்கு அறிவித்ததும் அயலவர்கள் ஒன்று கூடவும் திருட்டு முயற்சியைக் கைவிட்டு விட்டுத் தப்பியோடி விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் கோப்பாய் வடக்குப் பகுதியில் கடந்த சனிக்கிழமை ஒழுங்கை ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்த பெண்மணியின் 2 பவுண் எடையுள்ள தங்கச்சங்கிலி மோட்டார் சைக்கிளில் வந்த திருடர்களால் அபகரித்துச் செல்லப்பட்டது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், குறித்த பெண்மணி சத்தமிடாதவாறு அவரின் வாயை மூடி சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பியோடி விட்டதாகவும்

குறித்த பெண்மணி வன்னிப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து வந்து மேற்குறிப்பிட்ட பிரதேசத்தில் வசித்து வருவதாகவும் கூறப்பட்டது.

மேற்படி திருட்டுச் சம்பவம் பகல் நேரத்தில் நடைபெற்றுள்ளது.

இந்தத் திருட்டுக் களை அடுத்து இந்தப் பிர தேசத்தில் உள்ள மக்கள் எச்சரிக்கையுடன் நடமாடி வருகின்றனர். (த-72-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். ஆஸ்பத்திரி புதிய கட்டடத்துக்கு அமைச்சர் மைத்திரிபால அடிக்கல்

ஜப்பான் அரசின் நிதியுதவியுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அமைக்கப்பட இருக்கும் மூன்று மாடிக்கட்டடத்துக்கான அடிக்கல் நடும் விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதனைத் திறந்து வைப்பதற்காக சுகாதார சேவைகள் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்.

2900 மில்லியன் ரூபா செலவில் இந்த மூன்றுமாடிக் கட்டடம் அமைய இருக்கின்றது. இதற்கான நிதியுதவியை ஜெய்க்கா நிறுவனத்தின் ஊடாக ஜப்பான் அரசு வழங்கியுள்ளது.

இந்தக் கட்டடத்தினுள் கதிரியக்கப்பிரிவு, ஆய்வுகூடம், அதிதீவிர சிகிச்சைப்பிரிவு என்பன அமைக்கப்பட இருக்கின்றன. அத்துடன் இவற்றுக்கான உபகரணங்களும் ஜப்பானிய அரசாலேயே வழங்கப்படவுள்ளன.

இந்தக் கட்டடத்துக்கான அடிக்கல்லை சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நட்டு வைக்கவுள்ளார். இந்த நிகழ்வில் ஜப்பானிய தூதுவர் மற்றும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மற்றும் சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளைஅமைச்சரின் வருகையை முன்னிட்டு நேற்று யாழ்.போதனா வைத்திய சாலை வளாகத்தை சுத்திகரிக்கும் பணியில் பணியாளர்கள் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். (த-15)

# கரவெட்டி பிரதேச மக்களின் உதவிப் பொருள்கள் கிழக்கே

வடமராட்சி, ஜன.20

கிழக்கு மாகாணத்தில் அண்மையில் தொடர்ந்து பெய்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கவென கரவெட்டி, பிரதேச செயலகத்தால் நிவாரணப்பொருள்கள் சேகரிப்பட்டு வருகின்றன.

அவ்வாறு சேகரிக்கப்பட்ட முதலாம் கட்ட நிவாரணப் பொருள்கள் இன்று வியாழக்கிழமை மட்டக்களப்புக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளன.

இதேவேளை மேற்படி பாதிக்கப்பட்ட மக்களுக்காக யாழ். மாவட்டச் செயலகத்தின் அனுமதியுடன் கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன் தலைமையில் கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத் தியோகத்தர்கள் ஒன்றிணைந்து கிராமம் கிராமகச் சென்று நிவாரணப் பொருள்களைச் சேகரித்தனர்.

இதுவரை சேகரிக்கப்பட்ட பத்து லட்சம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருள்கள் பிரதேச செயலகத்திலிருந்து இன்று காலை லொறிமூலம் மட்டக்களப்புக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளன.

இந்த நிவாரணப் பொருள்கள் நாளை வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு அரச அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(ஒ-201-236-310)

# இந்திய அரசின் மருத்துவ உதவி

யாழ்ப்பாணம்,ஜன.20

இந்திய அரசால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு 120 மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற உள்ளது.

சத்திர சிகிச்சைக்கூடம், அதி தீவிர சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றுக்கான உபகரணங்களே கையளிக்கப்படவுள்ளன. இதில் அதி நவீன வைத்திய உபகரணங்களையே இந்திய அரசு வழங்கவுள்ளது.

இந்த நவீன உபகரணங்களின் பெறுமதி 120 மில்லியன் ரூபா எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி உபகரணங்கள் நிகழ்வில் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, யாழ்மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோர் கலந்து கொள்வர். (201-15)

**ஒளிமயமான எதிர்காலம்...**



வாழ்த்துக்கள்: முன்பள்ளிகளில் பயின்று பாடசாலைகளில் தரம் 1 இல் இணைந்து கொண்ட மாணவர்களுக்கான பிரிவுபசார விழா காரைநகர் பிரதேச முன்பள்ளிகளின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயத்தில் இடம்பெற்றது. காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் திருமதி அ.விஜயகுமார் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கிறார்.

# சளியால் பீடிப்போர் தொகை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன.20

யாழ்.குடாநாட்டில் சளி நோயால் பீடிக்கப்படுவோரின் எண்ணிக்கை தினம் தினம் அதிகரித்துவருவதாக சுகாதார பகுதியினர் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக சுகாதாரப் பகுதியினர் மேலும் தெரிவிக்கையில்:

தற்போது நிலவும் காலநிலை வேறுபாட்டினாலேயே இந்தநோய் ஏற்படுகிறது. அந்தவகையில் நிலவும் வரும் கடும் குளிரால் சளி நோய் மக்களைப் பீடித்துள்ளதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சளியின் தாக்கத்தினால் மக்கள் காய்ச்சல் மற்றும் தடிமன், தலைவலி போன்ற நோய்க்கு இலக்காகி வருகின்றனர்.

இதேவேளை யாழ்.போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் இந்த நோய்க்கு இலக்காகிச் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக் கையும் அதிகரித்துக் காணப்படுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(201-26)

# ஆசிரியர்களின் சம்பள உயர்வுக்கு நடவடிக்கை

## புதிய படிவங்கள் வந்தன

ஆசிரியர்களுக்கான வருடாந்த சம்பள உயர்வுக்கு சமர்ப்பிக்கப்படும் படிவம் இந்த வருடம் தொடக்கம் பல்வேறுபட்ட புதிய தகவல்களை உள்ளடக்கியதாக மறுசீரமைப்புச் செய்யப்பட்டு கல்விக்கோட்டவாரியாக பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இரண்டு பக்கங்களைக் கொண்ட இந்தப் படிவமும் அதனுடன் இணைத்து அனுப்ப வேண்டிய இணைப்புகளுக்கு அதிபர்களால் கோட்டக்கல்வி அலுவலகங்ளுக்கு சமர்ப்பிக்கப் பட்டு கல்விக்கோட்டங்களுக்கு ஊடாக வலயக்கல்விப் பணிமனை விடய உத்தியோகத்தரின் குறிப்புடன் வலயக் கல்விப் பணிப்பாளர் கணக்காளரைச் சென்றடைய வேண்டும்.

புதிய சம்பள ஏற்றப்படிவத்தில் குறித்த ஆசிரியரின் சுய விவரம், கடமைகளின் விவரம் உள்ளடங்கலாக ஏனைய விடயங்கள் உள்ளடங்கலாக 20 இற்கு மேற்பட்ட விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அத்துடன் லீவு விவரம் 8-100 படிவத்தில் அதிபரின் அத்தாட்சிப்படுத்தலுடன் நேரசூசி அதிபரின் கையொப்பத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட ஆசிரியர் கற்பித்த மாணவர்களின் பொதுப்பரீட்சை அடைவுமட்ட வீதம் என்பனவும் உரிய முறையில் குறிப்பிடப்படல் வேண்டும்.

இதுவரை காலமும் பயன்படுத்தப்பட்டுவந்த வருடாந்த சம்பள ஏற்றப் படிவத்தில் பெயர், பாடசாலை லீவு விவரங்கள் மட்டும் இடம்பெற்றிருந்தன. ஆசிரியர்களின் சம்பள ஏற்றங்கள் உரிய முறையில் ஆண்டு தோறும் ஏற்றப்படுவது அதிகரிப்பதில்லை. சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் தமது சுய முயற்சியின் பேரில் படிவத்தை நிரப்பி அதிபர்க ளுக்கு சமர்பிக்கின்ற நிலையிலேயே சம்பள ஏற்றங்கள் காலம் தாழ்த்தியே னும் போடப் பட்டது. (201-11)

# பருத்தித்துறையில் 35,635 பேருக்கு 3 மாதங்களில் சிகிச்சை

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் கடந்த மூன்று மாதங்களில் மட்டும் வெளி நோயாளர் பிரிவில் 35 ஆயிரத்து 635 பேர் சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளனர் என்று வைத்திய சாலை அத்தியட்சகர் தெரிவித்துள்ளார். இதேகாலப்பகுதியில் 3,965 பேர் விடுதிகளில் சிகிச்சை பெற்றுள்ளனர் என்றும் 328 குழந்தைகள் பிறந்துள்ளன என்றும் அவர் கூறியுள்ளார். (ஒ-319)

# கட்டைவேலி சேகரப் பிரிவால் கிழக்கு மக்களுக்கு உதவிகள்

வடமாராட்சி, ஜன. 20

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் பருத்தித்துறை, கட்டைவேலி சேகரப் பிரிவு, கிழக்கு மாகாணத்தில் அண்மையில் பெய்த மழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கவுள்ளது.

இந்த மக்களுக்கு வழங்குவதற்காக இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருள்களை மெதடிஸ்த திருச்சபையின் கட்டைவேலி சேகர முகாமைக் குரு அருட் திரு கிறிஸ்துகுமார் தங்கராசா தலைமையிலான தொண்டர்கள் மட்டக்களப்புக்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

இந்தப் பொருள்கள் மட்டக்களப்பு மெதடிஸ்த திருச்சபை மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (201-[illegible])

# விவரம் திரட்டும் படையினர்

யாழ். மாவட்டத்தில் துப்பாக்கிச் சூடுகள் மீண்டும் ஆரம்பித்துள்ளதைத் தொடர்ந்து பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் இடம் பெற்றது போல பொலிஸாரும் இராணுவத்தினரும் வீடுவீடாகச் சென்று வீட்டில் வசிப்பவர்களின் விவரங்களைத் திரட்டி வருகின்றனர்.

கடந்த சில மாதங்களாக யாழ். மாவட்டத்தில் பல இடங்களில் இரவு, பகல் என்ற வேறுபாடின்றி துப்பாக்கி முனையில் [illegible] என்ற [illegible] பெற்று வருகின்றன. இந்தச் சம்பவங்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எந்தவிதமான தொடர்புகளும் இல்லையென்று பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கடந்த திங்கட்கிழமை இரவு மானிப்பாயில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் அந்தணப் பெண் ஒருவர் காயமடைந்ததைத் தொடர்ந்து, பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கை மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் தாவடிச் சந்தியில் குவிக்கப்பட்ட இராணுவத்தினரும் பொலிஸாரும் பல குழுக்களாகப் பிரிந்து தாவடி, கொக்குவில் பகுதிகளிலுள்ள வீடுகளுக்குச் சென்று வீட்டில் வசிப்பவர்களின் விவரங்களைச் சேகரிப்பதில் ஈடுபட்டனர்.

இந்த நடவடிக்கை மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியுள்ளது. இதேவேளை வலி. கிழக்கு பிரதேசத்தில் இராணுவத்தினின் ரோந்து மற்றும் சோதனை நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. வீடுகளுக்கு முன்பாக இரவில் மின்சார குமிழ்களை ஒளிர விடுமாறு இராணுவத்தினர் மக்களுக்கு அறிவுறுத்தியும் வருகின்றனர். (த-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருவெள்ளம் காரணமாக போக்குவரத்துப் பாதிப்பு

முல்லைத்தீவு, ஜன.20

தொடர்ந்து பெய்துவரும் பெருமழை காரணமாக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த சில கிராம மக்களின் போக்குவரத்துக்கள் தடைப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மூன்றுமுறிப்பு, கொம்பு வைத்த குளம், இளமருதங்குளம், ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களும், மன்னார் மாவட்டத்தில் வலையன்கட்டு, முள்ளிக்குளம் பகுதி மக்களும் போக்குவரத்துக்கள் தடைப்பட்டுள்ள நிலையில் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

அத்துடன் முல்லைத்தீவில் மாந்தை கிழக்குப் பிரதேச எல்லைக்குட்பட்ட துணுக்காயில் இருந்து வவுனியா பூவரசங் குளம் வரை செல்லும் பிரதான வீதியை அண்டிய கிராம மக்களின் போக்குவரத்துக்களும் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக பனங் காமம் குளம், வீருப்பிராயர் குளம், இளமருதங்குளம், மூன்று முறிப் புக்குளம், கொம்புவைத்த குளம் ஆகிய சிறு குளங்கள் வான் பாய்வதனாலும், காட்டாற்று வெள்ள நீர் அதிகளவில் பிரதான வீதியைக் குறுக்கறுத்துப் பாய்வதனாலும் வாகனங்கள் எதிலும் இந்தப்பகுதி மக்கள் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

இதன் காரணமாகத் தினமும் வெளியே சென்றுவரும் பாடசாலை மாணவர்களும் பொது மக்களும் பெரும் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

இதைவிடப் பறங்கியாறு பெருக்கெடுத்துப் பாய்வதால் வலையன்கட்டு, முள்ளிக்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்களின் போக்குவரத்துக்களிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளன. இதே போன்று நட்டாங்கண்டல், சிறாட்டிக் குளம் வீதியைக் குறுக்கறுத்துப் பறங்கியாறு பாய்வதால் சிறாட்டிக்குளம் பகுதிக்கான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதியில் இயங்கும் ஆரம்பப் பாடசாலை இயங்க முடியாத நிலை தோன்றியுள்ளது.

தமது அடிப்படைத் தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்ய முடியாத அவல நிலையில் தாம் இருப்பதாக இந்தப் பகுதி மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர். (க-6)

### விடிவு கிடைக்குமா?...



ஆதரவற்ற நிலையில்: முல்லைத்தீவு செம்மலையில் இயங்கி வந்த முன்பள்ளியொன்று போரின்போது சேதமடைந்து புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது. (555)

# மாட்டிறைச்சி விலை நிர்ணயம்

பூநகரி, ஜன.20

பூநகரிப் பிரதேச சபையினால் மாட்டிறைச்சிக்கான விற்பனை விலை அறிவிக்கப்பட்டுள்ளன.

கடந்த 12 ஆம் திகதி பூநகரிப் பிரதேச சபையின் இரணைதீவு உப- அலுவலகத்தில் பூநகரிப் பிரதேச சபைக்குட்பட்ட மாட்டிறைச்சி விற்பனையாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் இந்த விலைகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் எலும்பில்லாத தனி மாட்டிறைச்சி ஒரு கிலோ 320 ரூபாவாகவும், எலும்புடனான இறைச்சி 280 ரூபாவாகவும், ஈரல் 400 ரூபாவாகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டன.

மாட்டிறைச்சிக் கடைகளுக்கு வெளியே இறைச்சியை விற்பனை செய்வது குற்றச்செயல் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பிரதேச செயலர், கால்நடை வைத்திய அதிகாரி ஆகியோரின் அனுமதி பெற்ற பின்னரே மாடுகளைக் கொல்களத்துக்கு விற்பனை செய்யலாம்.

இந்த நடைமுறைகள் நேற்றைய தினம் முதல் அமுலுக்கு வந்துள்ளதால் இதனை உரியவர்கள் உரியவாறு நடைமுறைப்படுத்த வேண்டும். அத்துடன் இதனை மீறுவோர்மீது பிரதேச சபைச் சட்டத்திற்கமைவாக நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் பூநகரிப் பிரதேச சபைச் செயலாளர் கி.துரைசிங்கம் அறியத் தந்துள்ளார். (க)

# ஒட்டுசுட்டான் பிரதேச சபையை தனியாக இயக்க கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன.20

ஒட்டுசுட்டான் பிரதேசசபையைத் தனியாக அமைக்க வேண்டுமென இப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்போது புதுக்குடியிருப்புப் பிரதேச சபையுடனேயே ஒட்டுசுட்டான் பிரதேச சபையும் இணைந்து செயற்பட்டு வருகின்றது. இதனால் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கிடைக்கின்ற வருமானங்கள் இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்திக்குப் பயன்படுவதில்லையென்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதன் விளைவாக ஒட்டுசுட்டான் பிரதேசபையைத் தனித்து இயங்கச் செய்வதற்கான கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. ஆனால் இதுவரை இக்கோரிக்கைகள் செயலுருவம் பெறவில்லை.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 27 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளன. எனவே ஒட்டுசுட்டான் பிரதேச சபையை நடப்பு ஆண்டிலாவது அமைத்துத் தமது பிரதேசத்தின் வளர்ச்சிக்கு உதவுமாறு பிரதேச மக்கள் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-500)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

கமலாச்சி இராசதுரை

மலர்வு
29.10.1942

உதிர்வு
31.01.2010

திதி: பிரதமை (20.01.2011)


பாசம் வைத்து எங்களைப் பண்புடனே
வாழ வைத்து, பாவி அவன் காலனின்
அழைப்பை ஏற்று பாதியில் எம்மை
தவிக்க விட்டு பிரிந்தது ஏனோ அம்மா?
நீங்கள் வாழ்ந்திட்ட காலங்களை,
அல்லும் பகலும் விழித்திருந்து எமை
வளர்த்த நேரங்களை எல்லாம்
எண்ணி எம் கண்கள் பனிக்கின்றன
ஓராண்டு கழிந்தாலும் அம்மா
தங்களின் பாச நினைவுகள்
காலத்தால் அழியாது
கனவிலும் உம் நினைவே – நீங்கள்
விண்ணுலகு சென்றாலும் விலகாது
உம் நினைவு எம் மனதை விட்டு.

உங்கள்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
கணவர், பிள்ளைகள்,
[illegible]
[illegible]

ஒஸ்கா லேன்,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

உலகின் முதற்தர ஜெனரேட்டர்கள் உற்பத்தியாளர்களிடமிருந்து
இலங்கையில் முதற்தரமான ஜெனரேட்டர்

Cummins® Power Generation



தொழிநுட்ப துறையில் நிபுணத்துவம் பெற்றோர்



சிறந்த ஒப்பீட்டு விலை

நம்பகமானது. நீடித்துழைக்கக்கூடிய, உண்மையிலேயே நீண்ட ஆயுள் கொண்டது

7.5 - 3325 கிவொ அளவுகளில் ஜெனரேட்டர்கள் | தன்னியக்கமாய் மாறும் ஸ்விட்சுகள் | ஜெனிவின் கியுமின்

Cummins® tpl

trade promoters (pvt) limited

Cummins அதிகாரமுடைய ஏக விநியோகஸ்தர்கள்

தலைமையகம், உதிரிப்பாகங்கள் மற்றும் திருத்த வேலைத்தளம்
கியுமின் எக்கிரடிடெட் சேர்விஸ் சென்டர
272/25, சுதர்சன மாவத்தை மாலபே ஸ்ரீ லங்கா

> 2000 வாடிக்கையாளர்கள் | 24 மணிநேர சேவை

T: 011 2413002, 2413132 E: sales@etpl.lk W: etpl.lk and cumminspower.com

யாழ்ப்பாண முகவர் : வரையறுக்கப்பட்ட நியு லங்கா ட்ரேடர்ஸ் தனியார் நிறுவனம் 222 - 226 ஸ்டென்லி வீதி யாழ்ப்பாணம
T: 021 2222838 M: 0777 222238 E: newlanke@sltnet.lk

யாழ் சர்வதேச சந்தையில் 231 மற்றும் 232ம் இலக்க தொகுதிக்கடைகளை நாடுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணுக்காய் பிரதேசத்தில் யானைகள் அட்டகாசம்

முல்லைத்தீவு, ஜன.20

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய்ப் பிரதேசத்தில் யானைகளின் அட்ட காசத்தால் தம்மால் செய்கை பண்ணப்பட்ட பயிர்களுக்கு அழிவும் தமது உயிர்களுக்கு ஆபத்தும் ஏற்பட்டுள்ளதாகப் பிரதேச மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

துணுக்காய்ப் பிரதேசத்தில் உயிலங்குளம், வேட்டையடைப்பு, தென்னியன்குளம் ஆகிய பகுதிகளிலேயே காட்டுயானைகளின் அட்டகாசம் என்றுமில்லாதவாறு அதிகரித்துக் காணப்படுகின்றது.

கிளை கிளையாக வரும் காட்டுயானைகள் இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள நெற்பயிர்களைத் தினமும் பெருமளவில் அழித்து வருகின்றன. குறிப்பாகத் தென்னியன்குளத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கையில் சுமார் அறுபது ஏக்கர் வரையான பயிர்கள் இந்தக் காட்டுயானைகளால் அழிக்கப்பட்டுள்ளன. இதைவிட கிராமங்களின் குடியிருப்புக்களில் காணப்படும் பயன்தரு மரங்கள், சிறுதானியப் பயிர்கள் என்பனவற்றையும் இவை அழித்து வருகின்றன.

அத்துடன் அவசர தேவைகளுக்கென இரவு வேளையில் செல்லும் மக்களைப் பிரதான வீதியில் வைத்து யானைகள் துரத்திய சம்பவமும் நிகழ்ந்துள்ளது.

இவற்றைவிடப் பரிதாபகரமான சம்பவம் ஒன்றும் கடந்த மாதம் இந்தப் பகுதியில் நிகழ்ந்துள்ளது. பகல் வேளையில் துணுக்காய் வேட்டையடைப்புக் கிராமத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான விஜயராசா என்பவர் அவரது வீட்டுக்கு அருகில் வைத்து காட்டு யானையால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

இதனால் மீள்குடியமர்ந்த மக்கள் பெரும் பயத்துடனேயே தமது பொழுதைக் கழித்து வருகின்றனர். (க-6)

# வவுனியா வைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச்சை ஆரம்பம்

வவுனியா, ஜன.20

வவுனியா பொது வைத்தியசாலையில் கடந்த மாதம் தொடக்கம் மாதத்தின் இரண்டாவது செவ்வாய்க்கிழமைகளில் புற்றுநோய் சிகிச்சை வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சை வைத்திய நிபுணர் கே.ஜெயக்குமார் இந்தச் சிகிச்சையை வழங்கி வருகின்றார்.

வவுனியா மாவட்டத்தில் தற்போது பலர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் கொழும்பு மகரகம வைத்தியசாலைக்குச் சென்று பல்வேறு சிரமங்களுடன் சிகிச்சை பெற வேண்டிய நிலையில் உள்ளனர்.

இதனைக் கருத்தில் கொண்டு வவுனியா பொது வைத்தியசாலையின் அத்தியட்சகர் மேற்கொண்ட நடவடிக்கையால் மாதத்தில் ஒரு தடவை புற்று நோய்க்கான சிகிச்சை வவுனியாவில் இடம் பெற்று வருகின்றது.

தற்போது வவுனியாவில் புற்றுநோயின் தாக்கம் காணப்படுவதால் இந்தச் சிகிச்சையில் பல புற்றுநோயாளர்கள் கலந்து கொண்டு உரிய ஆலோசனைகளையும் சிகிச்சையையும் பெற்றுச் செல்கின்றனர்.

இதேவேளை கிளிநொச்சி வைத்தியசாலையில் மாதத்தின் மூன்றாவது செவ்வாய்க்கிழமைகளில் புற்றுநோய்க்கான சிகிச்சை இதே வைத்திய நிபுணரால் வழங்கப்பட்டு வருகின்றது. (க-501)

# கண்டாவளையில் வாழ்வாதார உதவி

கிளிநெர்ச்சி, ஜன.20

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 16 பயனாளிகளுக்கு டென்டார்க் அகதிகள் பேரவையினால் (டி.ஆர்.சி.) தையல் இயந்திரங்கள் வழங்கப் பட்டுள்ளன.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தின் ஊரியான், கண்டாவளை, முரசுமோட்டை, பெரியகுளம் ஆகிய கிராமங்களில் மீள்குடியமர்ந்த மக்களின் வாழ்வாதாரச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை டி.ஆர்.சி. நிறுவனம் முன்னெடுத்து வருகின்றது. இதனடிப்படையில் கண்டாவளைக் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட இருபயனாளிகளுக்கும் ஊரியான் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 14 பயனாளிகளுக்கும் தலா ஒவ்வொரு தையல் இயந்திரங்களும் அதற்கான உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இதில் 15 பயனாளிகளுக்குத் தலா 43 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களும், ஒரு பயனாளிகளுக்கு 53 ஆயிரம் ரூபா பெறுமதியான மின்சாரத்தில் இயங்கும் தையல் இயந்திரமும் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (க-6)

## குறுக்கறுக்கும் போட்டி...



நல்ல ஓட்டம்: முல்லைத்தீவில் இடம்பெற்ற கிராமங்களைக் குறுக்கறுத்தோடும் போட்டியில் கலந்து கொண்ட வீரர்கள் இருவர் ஓடிக் கொண்டிருக்கின்றனர்.

# ஆசிரிய ஆலோசகர் விபத்தில் படுகாயம்

மன்னார்,ஜன.20

பம்பைமடு றோ.க.த.பாடசாலையில் நேற்று நடைபெற்ற கால்கோள் விழாவிற்குப் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வதற்காக மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஆசிரிய ஆலோசகர் ஒருவர் விபத்துக்குள்ளாகிப் படுகாயமடைந்துள்ளார்.

மன்னார் - மாந்தை வீதியால் நேற்றுக் காலை 8 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மடுக் கல்வி வலயத்தைச் சேர்ந்த கிறிஸ்தவப் பாட ஆசிரிய ஆலோசகர் எஸ். செல்ரன் (வயது-58) என்பவரே படுகாயமடைந்து மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் கால்கோள் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வதற்காக மாந்தை வீதியால் சென்று கொண்டிருந்தபோது பன்றிகள் குறுக்கே வந்து போது 'பிரேக்' போட்டதால் தூக்கி எறியப்பட்ட நிலையில் கழுத்துப் பகுதியில் படுகாயமடைந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (க-9)

# தனியார் பஸ்களில் கட்டண வேறுபாடு

முல்லைத்தீவு, ஜன.20

யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்குச் சேவையிலீடுபடும் தனியார் பேருந்துகளுக்கு கட்டணங்கள் வரையறுக்கப்படவில்லையாவென இவற்றில் பயணிக்கும் பிரயாணிகள் கேள்வி எழுப்புகின்றனர்.

இந்தத் தனியார் பேருந்துகளில் தினமும் மாறுபட்ட வகையில் கட்டணங்கள் அறவிடப்பட்டு வருகின்றன. ஆனால் இதுபற்றிப் பிரயாணிகள் வினவியபோதும் உரியவர்கள் சரிவரப் பதிலளிப்பதில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் முல்லைத்தீவு செல்லும் பேருந்துகளில் பயணிப்போர் மாங்குளம் வரையும் பிரயாணத்தை மேற்கொண்டால் அவர்களுக்கு அமருவதற்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. மாறாக மாங்குளம் வரையும் நின்று கொண்டே பயணிக்க வேண்டும். மாங்குளத்துக்கு அப்பால் செல்பவர்கள் மட்டுமே அமர்ந்து கொண்டு பயணிக்க முடியும். சில சமயங்களில் மாங்குளம் வரையும் செல்பவர்கள் அமர்ந்து விட்டால் உடனடியாக எழுப்பி நிற்கவிடப்படுகின்றனர். இதனால் மாங்குளம் வரையும் பயணிக்கும் ஆசிரியர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், ஆண், பெண் வேறுபாடின்றிப் பொதுமக்கள் எனப் பலரும் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுக்கின்றனர். மேலும் பேருந்து நடத்துநர்களில் சிலர் பிரயாணிகளிடம் மரியாதைக் குறைவாக நடப்பதையும் அவதானிக்க முடிகின்றது. இதனால் இந்தப் பேருந்துகளில் பயணிப்போர் மன உளைச்சல்களுக்கும் ஆளாகின்றனர்.

எனவே இந்த நிலை மாறிப் பயணிகள் வசதியான முறையிலும் சரியான கட்டணத்தைச் செலுத்தியும் தமது பயணத்தைத் தொடர்வதற்கு உரியவர்கள் உதவ வேண்டுமென்பதே யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிப் பிரதேசங்களுக்குப் பயணம் செய்வோரின் வேண்டுகோள் ஆகும். (க-500)

# மல்லாவியில் வங்கிச் சேவை விஸ்தரிப்பு

இலங்கை வங்கியின் மல்லாவி விரிவாக்கல் கிளையில் 'ஒன்லைன்' மற்றும் தன்னியக்கப் பணப்பரிவத்தனைச் சேவைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. இந்தச் சேவைகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் இலங்கை வங்கியின் வட மாகாணப் பொதுமுகாமையாளர் கே.ஈ.டி. சுமணசிறி தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன. (க-313)

# விஸ்வகீர்த்தி விருது

கிளிநொச்சி,ஜன.20

கிளிநொச்சி மாவட்ட தென்னை அபிவிருத்தி அலுவலர் ஜெ.சத்தியேந்திரன் 'விஸ்வகீர்த்தி' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

சமாதான நீதிவான்களின் மனித உரிமைகள் அமைப்பினர் இவரது சேவையைப் பாராட்டி சமூக சேவைக்கான 'வீஸ்வகீர்த்தி' எனும் கௌரவ விருதினை வழங்கியுள்ளனர்.

கடந்த 11 ஆம் திகதி கொழும்பு பத்தரமுல்ல வோட்டர் எட்ஜ் ஹோட்டலில் நிகழ்ந்த சமாதான நீதிவான்களின் மனித உரிமைகள் அமைப்பின் ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவில் இந்த விருது சத்தியேந்திரனுக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இந்த விருதினைப் பெறுவதற்கு யாழ்.மாவட்டத்திலிருந்து இவர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-207)

# நீரிழிவு தினப் போட்டி வெற்றியாளர்கள்

வவுனியா, ஜன.20

கடந்த ஆண்டு நீரிழிவு நோய்த் தினத்தையொட்டி வவுனியாவில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்கள் வழங்கும் வைபவம் எதிர்வரும் இன்று நடைபெறவுள்ளது.

வவுனியா மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் தொற்றா நோய்த் தடுப்புப் பிரிவினரால் கடந்த வருடம் சர்வதேச நீரிழிவு நோய்த் [illegible] நடத்தப்பட்டது.

இதில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் வைபவம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறும்.

பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், சுகாதார நிறுவனங்களில் பணிபுரிவோர் என மூன்று பிரிவுகளாக இந்தப் போட்டி நடைபெற்றது. இதில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கும் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளதாக வவுனியா மாவட்ட தொற்றா நோய்த் தடுப்பு அதிகாரி மருத்துவர் எஸ்.சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்தப் பரிசளிப்புவிழா நிகழ்வுக்கு வவுனியா மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் மு. மகேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கிக் கௌரவிப்பாரென்றும் தெரிவிக்கப்பட்டது. (க-501)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழிப்புடன் இருக்க எச்சரிக்கை

கற்குவாரிகளில் வெடி வைத்துத் தகர்க்கப்பட்டு எஞ்சியுள்ள பாறைகளில் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறு வெடிப்புகள் ஏற்பட்டிருப்பதால் அவை எந்நேரமும் சரியக் கூடுமெனப் புவியியல் ஆராய்ச்சித் திணைக்களம் அறிவித்துள்ளது.

எனவே அத்தகைய பிரதேசங்களில் வாழும் மக்களை எச்சரிக்கையுடன் இருக்குமாறு புவியியல் ஆராய்ச்சித் திணைக்களத்தின் நிபுணர் பேராசிரியர் கபில தசநாயக்க எச்சரிக்கை விடுத்துள்ளார். கண்டி, கெட்டம்பே பகுதியில் ஏழு பேர் உயிரிழந்ததற்குக் கற்பாறைகளின் சரிவே காரணம் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். கற்குவாரிகள் நீண்ட காலமாகப் பயன்படுத்தப்படாமல் இருந்தாலும், அதிக மழை காரணமாகவும் இத்தகைய அனர்த்தங்கள் தொடரலாம் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ளி)

## நான்கு மாவட்டங்களில் மண்சரிவு; தேசிய கட்டுமான நிறுவனம் தகவல்

கண்டி, ஜன.20

நாட்டில் கடந்த சில நாள்களாக நிலவிய சீரற்ற கால நிலை காரணமாக நான்கு மாவட்டங்களில் சுமார் 650 மண்சரிவுச் சம்பவங்கள் குறித்து அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தேசிய கட்டுமான நிறுவனம் தெரிவித்துள்ளது.

பிரதேச செயலாளர்கள் ஊடக இந்தத் தகவல் திரட்டப்பட்டன என அந்த நிறுவனத்தின் மண்சரிவுக்குப் பொறுப்பான அதிகாரி ஆர்.எம். எஸ். பண்டார தெரிவித்தார்.

மேலும் கண்டி, நுவரெலியா, மாத்தளை மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களில் தொடர்ந்தும் தகவல்கள் திரட்டப்பட்டு வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மண்சரிவு ஏற்பட்ட, மண்சரிவு ஏற்படும் அபாயமுள்ள பகுதிகள் குறித்து ஆராயப்பட்டு வருகின்றது. இது வரையில் 170 பிரதேசங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்றும் பண்டார தெரிவித்துள்ளார். (ளி)

## துப்பாக்கிகள் கண்டெடுப்பு

களுத்துறை, பதுரெலிய பகுதியில் கடந்த இரண்டு நாள்களாகப் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 15 சட்ட விரோதத் துப்பாக்கிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் துப்பாக்கிகள் வன விலங்குகளை வேட்டையாடுவதற்குப் பயன்படுத்தப்பட்டனவா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ளி)

## வைத்தியரின் உதாசீனத்தால் குழந்தை பரிதாபச்சாவு

பிபிலவத்தைப் பிரதேசத்தில் அண்மையில் வைத்தியரின் கவனயீனத்தால் மூன்றரை வயதுக் குழந்தை ஒன்று மரணமானதாகக் கூறப்படும் சம்பவத்தைக் கண்டித்து பிரதேசவாசிகள் போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

கடந்த 4 ஆம்திகதி பிபில வத்தையிலுள்ள மருந்தகம் ஒன்றின் முன் சுமார் ஒருமணித்தியாலயமாக நடைபெற்ற இந்தக் கண்டனக் கூட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட கிராம வாசிகள் கலந்து கொண்டனர்.

இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

சுகவீனமுற்ற மேற்படி குழந்தை பிபிலவத்த மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இம் மருத்துவமனையில் பணிபுரியும் வைத்தியருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. எனினும் அதிக மழை காரணமாகத் தன்னால் வரமுடியாது என, குறிப்பிட்ட வைத்தியர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கூறி அரை மணித்தியாலயத்தில் குழந்தை மரணமாகியுள்ளது. வைத்தியரின் உதாசீனத்தாலேயே இந்த மரணம் இடம்பெற்றுள்ளது எனக் குழந்தையின் பெற்றோர் சந்திரசேகர குற்றம் சாட்டியுள்ளார்.

இந்த வைத்தியரை உடனடியாக இடமாற்றம் செய்ய வேண்டுமெனக் கோரியே ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. (204)

## மனநோயால் பீடிக்கப்பட்டிருந்த பெண் கொத்மலை ஓயாவில் சடலமாக மீட்பு

நுவரெலியா, ஜன.20

கொத்மலை ஓயா ஆற்றின் பெயார்வெல் தோட்டக் கரையோரத்திலிருந்து நேற்று முன்தினம் பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நண்பகல் 12.30 மணியளவில் சடலம் மீட்கப்பட்டது என லிந்துலைப் பொலிஸார் தெரிவித்தனர். அக்கரப்பத்தனை ஆட்லோ தோட்டத்தைச் சேர்ந்த - மனநோயால் பீடிக்கப்பட்டிருந்த செபஸ்ரியன் ஞானசுந்தரி (வயது - 35) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலம் லிந்துலை வைத்தியசாலையின் பிரேத அறையில், வைக்கப்பட்டுள்ளது.

மனநோயால் பாதிக்கப்பட்ட இவர் கொத்மலை ஓயா ஆற்றங் கரைக்குச் சென்றபோது ஆற்றில் விழுந்திருக்கலாமென்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை லிந்துலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ளி)

## கண்டியில் 9 பாடசாலைகளில் மண்சரிவு ஏற்படும் அபாயம்

கண்டி, ஜன.20

கண்டி மாவட்டத்திலுள்ள ஒன்பது பாடசாலைகள் மண்சரிவு அபாயத்தை எதிர் கொண்டுள்ளன எனப் புவியியல் கட்டட ஆய்வு மையத்தைச் சேர்ந்த எம்.டி.ஐ.பி.எச். விஜேவிக்ரம தெரிவித்துள்ளார்.

ஹந்தானை தமிழ் வித்தியாலயம், கடுகண்ணாவ குருக்குத்தல முஸ்லிம் மகாவித்தியாலயம், வித்தியார்த்த கல்லூரி, தர்மராஜ கல்லூரி, மகாமாயா கல்லூரி, ஹில்ஆட் கல்லூரி, ஹோத்தமி மகளிர் கல்லூரி, பேராதனை புஷ்பதான கல்லூரி ஆகிய பாடசாலைகளே இவ்வாறு மண்சரிவு அபாயத்தை எதிர்கொண்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு வைத்தியசாலையில் நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

மட்டக்களப்பு, ஜன.20

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் பின்னர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வரும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் கே. முருகானந்தன் தெரிவித்துள்ளார்.

பங்கசுத் தொற்று, காய்ச்சல், ஆஸ்துமா, இருமல், கண் நோய்கள், சுவாசப்பை நோய்கள் ஆகியவற்றுக்காகச் சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

கையிருப்பிலுள்ள மருந்துப் பொருள்களைக் கொண்டு எம்மால் நோயாளர்களைச் சமாளிக்க முடியும்.

எனினும் அவசரத் தேவையின் போது பயன்படுத்துவதற்காகப் பல்வேறு வகையான எதிர்ப்பு மருந்துகள் மேலும் தேவைப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாந்திபேதி, வயிற்றோட்டம், கொலரா ஆகிய நோய்களுக்கு அண்மையில் எவரும் சிகிச்சை பெறவில்லை.

இவ்வாறான தொற்று நோய்கள் சில காலத்திற்குப் பின்னர் தான் பரவும். இன்னும் ஒன்று அல்லது இரண்டு வாரங்களில் இத்தகைய நோயாளிகள் வரக்கூடும் என்றும் டாக்டர் முருகானந்தன் மேலும் தெரிவித்துள்ளார்.

முறையான தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் டெங்கு நோய் பரவும் வாய்ப்பும் உள்ளது என்றும் அவர் அச்சம் தெரிவித்துள்ளார். (204-21)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானம்

மட்டக்களப்பு, ஜன. 20

கிழக்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர நிதியுதவியை வழங்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்துள்ளது என அவ் ஒன்றியத்தின் சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் மனிதாபிமான உதவிகளுக்கான உயர் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிணக்க இரண்டு மில்லியன் யூரோக்களை ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு வழங்கவுள்ளது என்றும் இந்த நிதி சர்வதேச முகவர் நிலையங்களினூடாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

கிழக்கில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பாடசாலை மாணவர்களுக்கு உதவியளிக்க இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் முன்வந்துள்ளது.

வெள்ளத்தால் பாடசாலை மாணவர்கள் தங்களது பாடசாலை நூல்கள், அப்பியாசப் புத்தங்கள், சீருடைகள், பாதணிகள் மற்றும் பல உபகரணங்களை இழந்துள்ளனர். இந்நிலையில் அவர்களுக்கு உதவியளிக்கும் திட்டத்தின் முதற்கட்டமாகப் பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசப் புத்தகங்கள் வழங்கப்படவுள்ளன என்று இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (204)

## நிவாரணப் பணியில் கோணேஸ்வரர் ஆலயம்

திருகோணமலை மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு அவதியுறும் மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகளில் கோணேஸ்வர ஆலயப் பரிபாலன சபையின் கல்விச் சமூகப் பணிச்சபை ஈடுபட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் மூதூர், வெருகல் பிரதேசசபைச் செயலாளர் பிரிவுகளில் உள்ள மக்களுக்கு குறிப்பாகக் குழந்தைகளுக்குத் தேவையான பால்மா, தேயிலை, சீனி, பிஸ்கட், பனடோல் ஆகிய அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய 400 பொதிகள் திருகோணமலைத்துறைமுக ஏறுதுறையிலிருந்து கப்பலில் மூதூருக்குக் கொண்டு செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மூதூரிலிருந்து வெருகல் செல்லும் தரைப்பாதைகள் சீரற்று இருப்பதால் பொருள்களைக் கொண்டு செல்வதற்காகக் குறித்த பிரதேசச் செயலாளர்களோடு தொடர்பு கொண்டு தாம் நடவடிக்கை எடுத்துள்ளார் எனவும் பரிபாலன சபையின் செயலாளர் க.அருள்சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

### மனிதாபிமானம்...




வழங்கல்:ஏறாவூர்ப் பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக கொழும்பு, கொச்சிக்கடை ஜும்மா பள்ளிவாசல் நிர்வாக சபையினரால் சேகரிக்கப் பட்ட பணத்தின் மூலம் பெறப்பட்ட உலர் உணவுப் பொருள்கள் ஏறாவூர் தாய்மண் சமூக விழிப்புணர்வு மையத்திடம் ஒப்படைக்கப்பட்டன. இந்தப் பொருள்களைப் பாதிக் கப்பட்ட மக்களுக்கு அந்த அமைப்பின் பொருளாளர் வி.றிபாய்தீன் வழங்குகின்றார். அருகில்அமைப்பின் பொதுச் செயலாளர் எஸ்.ஏ.கலீல் காணப்படுகின்றார்.

## இறங்குதுறை நிர்மாணப் பணிகள் அட்டாளைச் சேனையில் பூர்த்தி

மட்டக்களப்பு,ஜன20

விவசாய அபவிருத்திக்கான சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்ட அட்டாளைச் சேனை இறங்குதுறை நிர்மாணப் பணிகள் நிறைவுபெற்றுள்ளன.

இலங்கை கடற்றொழில் நீரியல் வளங்கள் அமைச்சினதும் - மீன்பிடி, துறைமுகக் கூட்டுத்தாபனத்தினதும் மேற்பார்வையின் கீழ் ஐக்கிய நாடுகள் திட்ட அமுலாக்கல் ஸ்தாபனத்தினால் மேற்படி திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

ஒரு கோடியே 80 லட்சம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட மேற்படி இறங்குதுறையில் மீனவர்கள் ஓய்வு மண்டபம், மீனவர்களின் பொருள்களைப் பாதுகாத்துவைப்பதற்கான அறைகள் உள்ளிட்ட பல வசதிகள் உள்ளன.

இந்த இறங்குதுறையை அண்மித்ததாக மீனவர்களின் படகுகளுக்குத் தேவையான எரிபொருள் நிரப்பு நிலையமொன்றும் அமைக்கப்பூட்டுள்ளமை குறிப்படத்தக்கது. (204)

# நிவாரணம் கோரி பிரதி அமைச்சரின் வாகனம் முற்றுகை

மட்டக்களப்பு,ஜன.20

கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு பயணித்த மீள்குடியேற்றப் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனை வழிமறித்த வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள், தமக்கு நிவாரணப் பொருள்கள் வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வெள்ளத்தினால் பாதிப்புக்குள்ளான கிழக்கு பல்கலைக் கழகத்தைப் பார்வையிட்டு விட்டு திரும்பிய மீள்குடியேற்றப் பிரதியமைச்சரிடம், பல்கலைக்கழக வாயிலில் கூடிய பொதுமக்கள் தமக்கு நிவாரணம் வழங்குவதற்கான உடனடி நடவடிக்கையை எடுக்கவேண்டுமெனக் கோரினர்.

செங்கலடிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கொம்மாதுறை மேற்கு, வந்தாறுமூலை மேற்கு மற்றும் கிழக்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களே இவ்வாறு கோரிக்கை விடுத்தனர்.

வெள்ளத்தில் அதிகளவு பாதிக்கப்பட்டுள்ள எங்களின் நிலைமை குறித்து எவரும் கவனத்தில் கொள்ளவில்லை யெனவும் பிரதியமைச்சரிடம் பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பகுதிகளில் சுமார் 600 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்வதாக மக்கள் தெரிவித்தனர்.

இந்த மக்கள் விவசாயத் தொழிலையே நம்பியுள்ளதாகவும்,இதுவரை தமக்கு உணவு கூடக் கிடைக்காத நிலைமை காணப்படுவதாகவும் குறிப்பிட்டனர்.

இதற்குப் பதிலளித்த மீள்குடியேற்றப் பிரதியமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரன், நிவாரணப் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

இந்த நிவாரணப் பொருள்கள் அனைவருக்கும் கிடைக்க வழி செய்வதாகவும் உறுதியளித்தார்.

அத்துடன் செங்கலடிப் பிரதேச செயலாளருடன் தொடர்பு கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்குமாறும் விநாயகமூர்த்தி முரளிதரன் உத்தரவிட்டார். (204)

## 10,250 ஏக்கர் நெல் வெள்ளத்தால் கிண்ணியாவில் பாதிப்பு

வெள்ள அனர்த்தத்தினால் கிண்ணியாவில் சுமார் 10,250 ஏக்கர் நெற்ப் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அடை மழையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் இந்தப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

வெள்ளப் பெருக்கால் தரை வழிப்போக்குவரத்தும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. இவர்களுக்கான உணவு விநியோகம் இயந்திரப் படகுகள் மூலமே மேற்கொள்ளப்படுகிறது. (எி)

## திருகோணமலை மாவட்டத்தில் குளங்கள் திறப்பு; மக்கள் அவதி

திருகோணமலை மாவட்டத்தில் சகல குளங்களும் திறந்து விடப்பட்டுள்ளன. சில குளங்கள் உடைப்பு எடுத்துள்ளன. இவற்றால் மாவட்டத்தின் பல பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

மூதூர்- நீலாபொல அணைக்கட்டும் உடைப்பெடுத்துள்ளது. இதனால் பல கிராமங்கள் வெள்ளக் காடாகக் காட்சியளிக்கின்றன.

வானாறு, திவுல்கெல்வெவ, பேரமடு, களுஉள்பத்த குளங்கள் உட்பட மற்றும் சில குளங்களும் உடைப்பெடுத்துள்ளன. வீடுகளுக்குள் நீர் புகுந்துள்ளதால் மக்கள் வெளியேறியுள்ளனர்.

அல்லை - கந்தளாய், மூதூர் - கிண்ணியா வீதிகளுக்கூடான போக்குவரத்து தொடர்ந்தும் தடைப்பட்டுள்ளது. திருகோணமலையிலிருந்து மூதூர், சேருவில,மூதூர் கிழக்கு, [illegible] பற்று, தோப்பூர் ஆகிய பிரதேசங்களுக்கான போக்குவரத்துத் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளன. (எி)

# மீளக்குடியமர்ந்த கிராம மக்கள் அடிப்படை வசதிகளின்றி அவதி

திருகோணமலை,ஜன20

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கல்லடி வெட்டுவான், மீள்குடியமர்ந்த கிராம மக்கள் அடிப்படை வசதிகள் இன்றித் தாங்கள் சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர் எனத் தெரிவிக்கின்றனர்.

1990ஆம் ஆண்டு தலை தூக்கிய அசாதாரண சூழ்நிலை யால் அங்கிருந்து வெளியேறிய இக்கிராம மக்கள் தற்பொழுது மீள்குடியமர்ந்த செய்யப்பட்டுள்ளனர்.இங்கு மீள்குடியமர்ந்த இம்மக்களுக்கு யுனிசெவ் நிறுவனத்தால் 12 தற்காலிகக் கொட்டில்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

சேவாலங்கா நிறுவனத்தால் 13 தற்காலிகக் கொட்டில்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. 35 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இக்கொட்டில்களை எதிர்பார்த்தவண்ணமுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரைஇருகிணறுகளும் 7 மலசல கூடங்களும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இவை போதுமானவையாக இல்லை என்றும் இவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இக்கிராமத்திலிருந்து வேறு இடங்களுக்குச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகளும் ஏற்படுத்தப்படவில்லையென மக்கள் தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமரின் கருத்துக்கு ஹெல உறுமய கண்டனம்

கொழும்பு, ஜன. 20

இலங்கையில் அனைத்து சமயங்களும் ஒன்றே. எந்தவொரு சமயத்திற்கும் முன்னுரிமை இல்லையென பிரதமர் டி.எம். ஜயரத்ன தெரிவித்திருப்பது அவர் வகிக்கும் பதவிக்கும் அரசமைப்புக்கும் முரணானது என்று ஜாதிக ஹெல உறுமய குற்றஞ் சாட்டுகின்றது.

ஜாதிக ஹெல உறுமயவின் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது.

ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் ஒமல்பே சோபித தேரர் மேற்கண்டவாறு குற்றஞ் சாட்டியுள்ளார்.

## பௌத்தமே முக்கிய மதமாம்

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பிரதமர் பதவியேற்கும்போது அரசமைப்புக்கு ஏற்ப செயற்படுவார் என குறிப்பிட்டுள்ள நிலையில் அவரது இந்தக் கருத்து அரசமைப்பை மீறுவதாக அமைந்துள்ளது.

அரசமைப்பில் பௌத்த மதத்துக்கே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறிருக்கும்போது பிரதமர் அரசமைப்புக்கு கட்டுப்பட்டு நடப்பேன் என சத்தியப் பிரமாணம் செய்து விட்டு, அரியலமைப்பை மீறும் வகையில் இக்கருத்தை வெளியிட்டுள்ளார்.

பௌத்த சமயம் தொடர்பில் இலங்கையில் பேசுவது மதவாதமல்ல.

வத்திக்கானில் கிறிஸ்தவ சமயம் தொடர்பிலும், நேபாளத்தில் இந்து சமயம் தொடர்பிலும் பேசுவது மதவாதமல்ல.

பிரதமர் சில சக்திகளுக்கு அடிபணிந்து விட்டாரா என்ற சந்தேகம் இதன்மூலமாக எழுகிறது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னால் மன்னார் மறை மாவட்ட ஆயர் வண.இராயப்பு ஜோசப் தெரிவித்த கருத்துக்களுடன் பிரதமரின் கருத்துக்கள் ஒத்துப்போகின்றன.

அரந்தலாவில் பிக்குகள் கொலை செய்யப்பட்டபோதும், தலதா மாளிகை மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டபோதும், கொழும்பிலுள்ள கதிரேசன் கோவிலில் நடைபெற்ற உற்சவத்தில் சிங்களவர்கள் தேங்காய் உடைத்தனர் என தெரிவித்துள்ளார்.

பௌத்தமதம் அன்பையே போதிக்கின்றது - இப்படி அவர் தெரிவித்துள்ளார். (சி)

# புகையிலைச் செய்கைக்குத் தடை

கொழும்பு, ஜன.20

எதிர்காலத்தில் நாட்டில் புகையிலைச் செய்கைக்கு தடை விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

உணவு வகைகளை உற்பத்தி செய்வதில் விவசாயிகளின் கவனத்தைத் திருப்புவதன் நோக்கமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனடிப்படையில் புகையிலைச் செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு வழங்கப்படும் உர மானியத்தையும் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார். விவசாயிகள் புகையிலைச் செய்கையை நிறுத்திவிட்டு உணவு உற்பத்தியில் கவனம் செலுத்த வேண்டும் - என்று அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார். (சி)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு கனேடிய அரசு அனுதாபம்

கொழும்பு, ஜன. 20

இலங்கையில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்த, உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு கனேடிய அரசு அனுதாபம் தெரிவித்துள்ளது. இலங்கையில் ஏற்பட்ட வெள்ள நிலை குறித்து கவலையடைவதாக கனேடிய வெளிவிவகார அமைச்சர் லோரன்ஸ் கெனொன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தில் கனேடிய நாட்டுப் பிரஜைகள் எவரும் சிக்குண்டிருந்தால் இலங்கையிலுள்ள கனேடிய உயர்ஸ்தானிகராலய இலக்கமான +00(94-11) 52262-32 என்ற இலக்கத்துக்கோ அல்லது sos@international.ge.ca என்ற மின் அஞ்சல் முகவரியினூடாகவே தொடர்புகொண்டு தகவல் அளிக்கமுடியும் என்றும் அவர் அறிவித்துள்ளார். (சி)

## உற்சவம்....



களனி ராஜமகாவிகாரையின் வருடாந்தப் பெரஹெர நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் ரணில் விக்கிரசிங்கவும் கலந்துகொண்டுள்ளார்.

# இந்த வருடத்தில் டெங்கு நோயாளர் எண்ணிக்கை 63

கொழும்பு, ஜன. 20

இந்த வருடத்தில் கொழும்பில் மட்டும் 63 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று கொழும்பு மாவட்டத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட சுகாதார அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மத்திய கொழும்பிலிருந்து மட்டும் 21 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட் டுள்ளனர் என்று அவர் தெரிவித்துள்ளார். நாட்டில் தற்போது பெய்துவரும் அடைமழை காரணமாக டெங்குநோய் பரவும் அபாயம் அதிகரித்துள்ளது என தெரிவித்துள்ளார். (சி)

# வவுனியா முகாம் சிறுவர் ஆடைத் தொழிற்சாலைக்கு

கொழும்பு, ஜன. 20

கொழும்பில் உள்ள ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றுவதற்கென மெனிக்பாம் முகாமிலிருந்து இளம்பெண்களும் சிறுமியர்களும் தமது விருப்பத்திற்கு மாறாக ஏற்றி அனுப்பி வைக்கப்படுகின்றனர் என பெற்றோர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

- இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக அவர் மேலும் அவர் தெரிவித் தவை வருமாறு -

கடந்த ஞாயிற்றுக்கிழமை 18 பேரும் திங்கள்கிழமை 30 பேரும் இவ்வாறு ஏற்றி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என பெற்றோர்கள் என்னிடம் முறையிட்டுள்ளார்கள்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அனுப்பி வைக்கப்பட்டவர்களில் 18 பேர் பெண் பிள்ளைகள். இவர்களில் 5 பேர் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் ஆகிய இடங்களில் உள்ள ஆதரவற்ற சிறுவர்களுக்கான விடுதிகளில் தங்கியிருந்து பாடசாலைகளில் கல்வி கற்று வருகின்றார்கள். தைப்பொங்கலுக்காகப் பெற்றோரிடம் மெனிக் பாமுக்கு வந்திருந்த வேளையிலேயே இவர்கள் முகாம் பொறுப்பதிகாரிகளால் பலவந்தமாக ஆடைத் தொழிற்சாலையில் வேலை செய்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று கடந்த திங்கள் கிழமையும் 30 பேர் இவ்வாறு முகாம் பொறுப்பதிகாரியால் ஆடைத்தொழிற்சாலைக்கு விருப்பத்திற்கு மாறாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என அந்தப் பிள்ளைகளின் பெற்றோர்கள் என்னிடம் முறையிட்டுள்ளார்கள். (சி)

# தாய்லாந்து யுவதிகளை மிரட்டி சொகுசு ஜீப், பணம் கொள்ளை

கொழும்பு, ஜன. 20

தாய்லாந்து யுவதிகள் மூவர் பயணித்துக்கொண்டிருந்த பெறுமதி வாய்ந்த சொகுசு ஜீப் ஒன்று கல்கிஸையில் வைத்துக் கடத்தப்பட்டுள்ளது. அத்துடன், அவர்களிடம் இருந்த பெருந்தொகைப் பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளது.

இந்த யுவதிகள் மூவரும் கல்கிஸையிலிருக்கும் மசாஜ் நிலையமொன்றில் பணியாற்றுபவர்கள் என்று கூறப்படுகின்றது. அவர்கள் தமது பணி முடிந்து வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த போதே அவர்கள் பயணித்த ஜீப் கடத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, யுவதிகளிடமிருந்து மூன்று லட்சம் ரூபாவுக்கு அதிகமான பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளது. கடத்தப்பட்ட சொகுசு ஜீப்பின் பெறுமதி சுமார் 80 லட்சம் ரூபாவுக்கும் அதிகம் என்று தெரிய வருகின்றது. (சி)

# கடும் குளிரால் மீனவர் மரணம்

கடலுக்குச் சென்ற மீனவர் ஒருவர் கடும்குளிரால் மரணமாகியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தெவிநுவர வெலகொட வாசியான எஸ்.விமலசேன எனும்( 42 வயது )நபரே இவ்வாறு மரணமாகியுள்ளார்.

ஐந்து மீனவர்களுடன் கடந்த 8 ஆம் திகதி புறப்பட்டு தெவிநுவர துறைமுகத்திலிருந்து 70 கடல் மைல்கள் தூரத்தில் தரித்திருந்த போதே இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. (சி)

# தமிழர்களின் பிரச்சினை தொடர்பாக சிங்களவர் குரல் கொடுக்கவேண்டும்

கொழும்பு, ஜன. 20

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஒவ்வொரு சிங்கள மக்களும் அச்சமின்றிக் குரல் கொடுக்க முன்வரவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

சேர். பொன் அருணாசலத்தின் 150 வது ஜனன தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித் தவை வருமாறு -

ஆங்கிலேயர் ஆட்சியின் போது 1910 ஆம் ஆண்டுகளிலேயே சேர். பொன் அருணாசலம் சிங்கள மக்களுக்காக குரல் எழுப்பியவர். சிங்கள மகாபோயா விடுமுறைப் பிரகடனம் அவரது முயற்சியால் கிடைத்தவொரு வெற்றியாகும். அதற்கு மேலாக அவர் சிங்கள - தமிழ் இன நல்லுறவுக்கும் பாடுபட்டார்.

அன்று அவர் சிங்கள மக்களுக்காக குரல் கொடுத்ததை நினைவுபடுத்தும் விதத்தில் நான் இன்று தமிழ் மக்களுக்காக அச்சமின்றிக் குரல் கொடுத்து வருகின்றேன். என்னைப் போலவே ஏனைய சிங்கள மக்களும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அச்சமின்றிக் குரல் கொடுக்க முன்வர வேண்டும்.

அதற்கு மேலாக இலங்கையில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடையே இன நல்லுறவு கட்டியெழுப்பப்படுவதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்பட வேண்டும்- இப்படி அவர் தெரிவித்துள்ளார். (சி)

# தமிழ்க் கூட்டமைப்புக்கு எதிரான பியசேனவின் மனு விசாரணைக்கு

கொழும்பு, ஜன. 20

தனது நாடாளுமன்ற உறுப்புரிமையை நீக்குவது தொடர்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீர்மானத்துக்கு ஆட்சேபனை தெரிவித்து, அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான பொடியப்பு பியசேனவினால் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனு எதிர்வரும் 24ஆம், 25 ஆம் திகதிகளில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

அண்மையில் அரசினால் நாடாளுமன்றில் சமர்பிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்ட 18 ஆவது அரசியலமைப்புச் சீர்திருத்தத்திற்கு ஆதரவளித்து அரசுப் பக்கம் தாவியதால் பொடியப்பு பியசேன எம்.பியின் நாடாளுமன்ற உறுப்புரிமையை நீக்கவும், அவரது கட்சி உறுப்புரிமையை நீக்கவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர் அரசியல் பீடத்தால் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டமைப்பின் தீர்மானத்தை ஆட்சேபித்த பியசேன மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்திருந்தார். அந்த மனு மீதான பரிசீலனை மூவரடங்கிய நீதியரசர்கள் குழுவினால் நேற்று முன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றில் இடம்பெற்றது. (சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



கலாவித்தகர் நாகரட்ணம் மாதவன் எழுதிய 'தண்ணுமைத் தண்ணொலி' நூல் வெளியீட்டு நிகழ்வு யாழ். இந்துக் கல்லூரி குமார சுவாமி மண்டபத்தில் நேற்று நடை பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக் கழகக் கலைப் பீடாதிபதி பேராசிரியர் நா. ஞானக்குமரன் நூலை வெளியிட்டு வைக்க முதற் பிரதியை இசை ஞானதிலகம் உ.இராதா கிருஷ்ணன் பெற்றுக் கொள்கிறார். நூலாசிரியரும் உள்ளார். (9)

# வலுவிழந்தோர் பணியில் வாழ்வகம்

சுன்னாகம்,ஜன.20

மற்றவர்களால் பரிதாபத்துக் குரியவர்களாக, அனுதாபத்துக்கு உரியவர்களாகப் பார்க்கப்பட்ட விழிப்புல வலுவிழந்த மாணவர்களைச் சமூகத்தில் தலை நிமிர்ந்து வாழக்கூடிய வல்லமையுடையவர்களாக மாற்றிய பெரும் பணியை வாழ்வகம் ஆற்றி வந்துள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன்.

சுன்னாகம் விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகத்தின் நிறுவுநர் உதய நாள் மற்றும் பரிசளிக்கு விழா என்பன அண்மையில் இடம் பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வாழ்வகத் தலைவர் ஆ.ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் மேலும் கூறியதாவது:

எத்தனையோ ஆலயங்கள் உயர்ந்த கோபுரங்களுடன்இருக்கின்றன. ஆனால், அங்குள்ளவர்களின் சிந்தனைகள் தாழ்வாக உள்ளன. ஆனால், சில ஆலயங்கள் சிறியனவாக இருப்பினும் அவற்றின் மூர்த்திகரத்தால் கீர்த்தியால் பலரை ஈர்த்துக் கொள்கின்றன. அது போலவே விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகமும் கீர்த்தி மிக்க ஆலயமாக, கல்விச்சாலையாக விளங்குகின்றது.

இந்த பிரதேசத்தின் விழிப்புல வலுவிழந்த விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கு வழிகாட்டும் முதன்மை நிறுவனமாக இது விளங்குகின்றது.

இதற்குத் அர்ப்பணித்து அம்மையார் இந்த நிறுவனத்தைக் கட்டியெழுப்பியுள்ளார். வாழ்வகத்தின் இந்தச்சிறப்புக்காக நாம் அனைவரும் பெருமைப்பட வேண்டும். - என்றார்.

இந்த நிகழ்வில் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் உரையாற்றுகையில்:

இன்று கல்வியியலாளர்கள் விசேட தேவையுடையோருக்கான கல்வியில்அதிககவனமெடுத்துச் செயற்படுகின்றனர். ஆனால் எவருமே கவனமெடுக்காத 1988 ஆம் ஆண்டில் வாழ்வகம் என்ற நிறுவனத்தை ஆரம்பித்து எத்தனையோ சவால்கள் மத்தியில் அதனை வளர்த்தெடுத்து இன்று பலரை நன்னிலைப் படுத்திய பணியினை அன்னை அன்னலட்சுமி அம்மா செய்துள்ளார். இவரது அர்ப்பணிப்பான சேவையும் முன்னுதாரணமான வாழ்க்கையும்பாடநூல்களில்இடம் பெற வேண்டும்.

எதிர்கால இளம் சந்தியினரிடம் இத்தகைய சேவையாளர்கள் பற்றிய விழிப்புணர்வு ஊட்டப்பட வேண்டும். இலங்கையில் ஏனைய பகுதிகளில் உள்ளது போன்று எமது பிரதேசத்தில் விசேட தேவையுடையோருக்கான நிறுவனங்களுக்கு உதவிகள் கிடைப்பதில்லை.

இவ்வாறு உதவிகள் அற்ற நிலையிலே அர்ப்பணிப்புடன் சேவையாற்றுவதன் மூலமே இத்தகைய நிறுவனங்கள் விசேட தேவையுடையோரைவழிப்படுத்தி நல்ல ஆற்றலுடையவர்களாக மாற்றி வருகின்றன. இங்குள்ள நல்லிதயம்படைத்தவர்கள் விசேட தேவையுடை யோருக்கான நிறுவனங்களுக்கு உதவிகளையும் ஆதரவினையும் நல்கி அவற்றின் சேவைகளை நிறைவாக்க உதவ வேண்டும்.-என்றார். (ம-38)

# பிள்ளைகளின் வெற்றி பெற்றோரிடம்

அச்சுவேலி, ஜன.20

பெற்றோர் செலுத்தும் கவனமும் கவனிப்பும் பிள்ளைகளின் அடைவுமட்டத்தில் தெரியும்.

இவ்வாறு கூறினார் யாழ். கல்வி வலயத்தின் ஓய்வு பெற்ற ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சுவாமிநாதன்.

அச்சுவேலி மத்திய கல்லூரியில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களையும் கற்பித்த ஆசிரியர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரி அதிபர் வே. அரசகேசரி தலைமையில் நடைபெற்றன.

விழாவில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்:

ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள் மாணவர்களின் எழுத்தறிவு விருத்தியிலும் கணித அறிவு விருத்தியிலும் கூடியகவனம்செலுத்தவேண்டும். ஆரம்பப் பிரிவில் புகட்டும் கணித எழுத்து அறிவு கனிஷ்ட இடை நிலை பிரிவுகளில் மாணவர்கள் கல்வியறிவைப் பெற்றுக் கொள்வதற்கு உதவுகின்றது.

புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்குக் கொடுக்கப்படும் அழுத்தம் மாணவர்களின் வயது,தரநிலைக்கு மேலதிகம். இதனால் தரம் 5 இல் செலுத்தும் அக்கறையும் கவனிப்பும்தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதில்லை. இந்த வகையில் பெற்றோர் தமது கடமைப் பொறுப்பில் இருந்து தவறிவிடுகின்றனர். இதனால் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்தவர்கள் பலர் உயர் கல்வியில் தவறிவிடுகின்றனர். இதேவேளை, உயர் கல்வியில் பிரகாசிக்கும் மாணவர்களின் 35 வீதத்துக்கு மேற்பட்டவர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி அடையாதவர்களாவார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளில் சித்தி, புலமைப்பரிசில் பெறுவதற்கான தகுதி இது இரண்டும் சமுதாயத்தில் வேறுபடுத்தி உணரப் படுவது இல்லை. பெற்றோருக்கும் தகுந்தமுறையிலான கருத்து விளக்கம் ஏற்படவேண்டும்.

சித்தி என்பது இரண்டு பாடங்களிலும் 80 இற்கு மேற்பட்ட புள்ளியைப் பெறுவதாகும். புலமைப்பரிசில் தகைமை என்பது மாவட்ட நிலைக்கு ஏற்ப வெளியிடப்படும் வெட்டுப் புள்ளியாகும். எனவே பரீட்சையில் சித்தியடைவதற்கும் புலமைப்பரிசில்பெறுவதற்கான தகைமை பெறுவதற்கும் இடையே வேறுபாடுகள் உண்டு. இதனைக் கருத்தில் கொண்டு மாணவர்களின் பெறுபேறுகளை மதிப்பீடு செய்ய வேண்டும்.

தரம்5புலமைப்பரிசில் பரீட்சையில் புலமைப்பரிசில்பெறுவதற்கு தகுதி பெற்றவர்கள் எல்லோரும் உயர்கல்வியில்பிரகாசிக்கவில்லை உயர்கல்வியில் பிரகாசிப்பவர்களில் 35 வீதத்துக்கு மேற்பட்டவர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையாதவர்களே. - என்றார். (ம-11)

## சண்டிலிப்பாயில் கைத்திறன் பயிற்சிகள்

யாழ்ப்பாணம், ஜன. 20

வட மாகாணக் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இடம் பெறவுள்ள தையல் வேலையும் கைத்திறனும் பயிற்சி நெறிக்குப் பயிலுனர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 24ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன. இந்தப் பயிற்சி நெறி 6 மாத கால முழு நேரப் பயிற்சியாக இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பயிற்சி வகுப்பு பண்டத்தரிப்பு தொழிற் பயிற்சி நிலைய கட்டடத்தில் இடம்பெறவுள்ளது.

விண்ணப்பங்களை கிராம உத்தியோகத்தர்களிடமோ அல்லது மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களிடமோ பெற்றுக் கொள்ளுமாறும் அதனைப் பூர்த்தி செய்து பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ம)

## ஊவா மாகாணத்தில் ம.ம.முன்னணி தனித்துப் போட்டி

கொழும்பு, ஜன.20

பண்டாரவளை மாநகரசபை உட்பட பதுளை மாவட்டத்திலுள்ள 13 உள்ளூராட்சி சபைகளிலும், மொனராகலை மாவட்டத்திலுள்ள மொனராகலைப் பிரதேச சபையிலும் மலையக மக்கள் முன்னணி தனித்துப் போட்டியிடும். நாட்டில் ஏனைய உள்ளூராட்சி சபைகளில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன்இணைந்து வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடும் என்று மலையகமக்கள்முன்னணியின் ஊவா மாகாணசபை உறுப்பினர் ஏ.அரவிந்தகுமார் நேற்றுத் தெரிவித்தார்.

ஊவா மாகாணத்திலுள்ள 14 பிரதேச சபைகளில் ரிதிபாலியத்த பிரதேசசபை தவிர்ந்த ஏனைய 13 பிரதேச சபைகளிலும் போட்டியிடத் தீர்மானித்துள்ளது என அவர் மேலும் கூறினார்.

"பதுளை மாவட்டத்திலுடும்ம, மொனராகலை மாவட்டத்திலும் தனித்துப் போட்டியிட மலையக மக்கள்முன்னணி தீர்மானித்துள்ளது. அத்துடன் இம் மாவட்டங்களில் (ஊவா மாகாணத்தில்) மலையக மக்கள் முன்னணி மண்வெட்டிச் சின்னத்தில் போட்டியிடும். - என்றார்.

# உலகப் பெருமஞ்சம் காணும் இணுவில் கந்தன்

இற்றைக்கு ஒரு நூற்றாண்டு காலத்திற்கு முன்பே இணுவைப் பெரிய சந்நியாசியார் என அழைக்கப்படும் சுப்பிரமணியம் என்னும் இயற்பெயர் கொண்ட அருளாளரால் அமைக்கப்பட்டது இந்தத் திருமஞ்சம். கந்தப் பெருமானின் அருளில் திளைத்து மணிமந்திரவைத்தியம் மூலம் அடியார்களின் பிணிபல நீக்கிய இப்பெரியார் தனது குலதெய்வமாம் இணுவைக் கந்தப் பெருமானுக்கோர் திருமஞ்சம் அமைக்க திடசங்கற்பம் பூண்டார். அவரது காலம் 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். அடியவரின் வேண்டுகோளுக்கிணங்க மெய்யன்பர்களால் முற்றியமரங்கள் பலவும் தறிக்கப்பட்டுக் குவிக்கப் பட்டன. ஏற்ற சிற்பாசாரியார்களைத் தேட முற்பட்ட போது எம்பெருமான் கனவில் தோன்றி மஞ்சம் செய்வதற்கான சிற்பவல்லு நர்கள் தமிழகத்தில் இருந்து ஊர்காவற்றுறை துறைத் முகத்தை குறித்த தினத்தில் வந்தடைவார்கள். அழைத்து வா எனப் பணித்தருளினார்.

குறித்த தினத்தில் சந்நியாசியார் துறைமுகத்தை அடையவும் அங்கே குழுமிநின்ற தமிழகத்து சிற்பிகள் இவரைக் கண்டதும் தாங்கள் தானே அன்று நம் இல்லம் வந்து இங்கு வருமாறு கூறியிருந்தீர்கள்தங்களது வேண்டுகோளின் படி வந்துள்ளோம் எனக் கூறினார்கள். சந்நியாசியார் வியந்தார். தான் ஆலயச் சூழலைவிட்டுஎங்கேயும்செல்லவில்லை அங்கு தமிழகம் சென்றது தனதுருவில் எம்பெருமானே என உணர்ந்து கொண்டார்.

குறித்த நாளிலே வேலைகள் ஆரம்பமாகின, அடியவர்களின் பெரும் உதவியுடனும் தூய மனத்தவர்களது ஆத்மசிந்தைப் பலத்துடனும் திருமஞ்ச வேலைகள் துரிதமாக நிறைவேறத் தொடங்கின. இந்த இடம் இ[illegible] காரணப் பெயர் [illegible] படுவதோடு மட்டும் நில்லாது மஞ்சத்தின் பிதா பெரிய சந்நியாசியாரின் அடக்கக் கோயிலான அருணகிரிநாத சுப்பிரமணி சுவாமி கோயில் என்னும் திருநாமம் கொண்ட வணக்கத்தலத்தையும் தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றது.

இந்த இடத்தில் நின்றும் ஆலய முற்றத்தை நோக்கி இழுத்து வரப்பட்ட பாதை இன்று மானிப்பாய் - இணுவில் வீதியாகத் திகழ்கின்றது. இத் திருமஞ்சம் போன்ற அமைப்பை நாம் எங்கேயும் காணமுடியாது. 40 அடி உயரம் கொண்ட இந்தத் திருமஞ்சம் கண்கவர் வேலைப்பாடுகள் கொண்ட சிற்பங்களைத் தன்னத்தே தாங்கி நிற்கின்றது.

மா.ந.பரமேஸ்வரன்

செதுக்கப்பட்ட சிற்பங்கள் ஒவ்வொன்றும் புராண இதிகாசக் கதைகளைத் தன் [illegible] கொண்டு காட்சி தருகின்றன. திருமஞ்சத்தில் சண்முகப் பெருமான் அருட்காட்சி தந்து அடியவர்களுக்கு வரமளிப்பது இவ்வாலயத்தின் மகோற்சவத்தின் 12 ஆவது நாளிலும் தைப்பூசத் தினத்திலும் ஆகும். இது சண்முகப் பெருமானும் தனிச்சிறப்பு வாய்ந்த திருவுருவம். இதுவும் எங்கும் காணமுடியாத ஒன்றே. தான் எப்படி அமையப் போகிறேன் எங்கே அமையப்போகிறேன் என்பதை எல்லாம் சின்னையர் என்னும் பிராமண உத்தமருக்குக் கனவிலே உணர்த்தி அதற்கமைய வண்ணார் பண்ணையில் ஸ்தபதி வீட்டில் அமைந்த திருவுருவே இன்று நாம்காணும் சண்முகப்பெருமான். சண்முகப் பெருமானைத் தன்னகத்தே தாங்கித் தைப்பூசத் தினத்தில் இத் திருமஞ்சம் பவனி வருவது கண்கொள்ளாக் காட்சியாகும். தைப்பூசத்தினமான இன்று எழுந்தருள இருப்பதை கண்டு இன்புற்று அருள் பெறுவோமாக.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள்

தருவது வித்தியா

• உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
சேமிப்பு அதிகரிக்கும் நாள். உறவினர்கள் தொடர்பாக அனுகூலமான செய்திகளைக் கேட்கலாம். தொட்ட காரியம் துளிர் விட்டு வளரும் நாள். எதிலும் நிதானமுடன் செயல்படுவீர்கள். உடன் பிறப்புக்கள் மூலம் முக்கிய காரியம் ஒன்றை முடித்துக் கொள்வீர்கள். சில பொருள்களை குறைந்த விலைக்கு வாங்க நேரிடலாம்.

**இடபம்:**
பண விவகாரங்களில் கவனமாகச் செயற்பட வேண்டிய நாள். சுயநலமாக செயற்படும் நண்பர்களை அடையாளம் கண்டு ஒதுங்கிக் கொள்வீர்கள். போட்டி, எதிர்ப்புகளால் மன உளைச்சல் உண்டாகலாம். உங்களைச் சந்திக்க வருவதாகச் சொன்ன ஒருவர் வராமல் போகலாம். பொழுது போக்கு உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும்.

**மிதுனம்:**
பழைய நண்பர் ஒருவர் மூலம் புதிய நண்பரின் அறிமுகம் கிடைக்கலாம். அவசர செலவுகளை சமாளிக்க வாங்கிய கடனை திருப்பிக் கொடுக்கலாம். குடும்ப உறுப்பினர் ஒருவர் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து உங்களுக்கு எரிச்சல் உண்டாக்கலாம். பெண்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம்.

**கடகம்:**
விழிப்புடன் செயற்பட்டு எதிலும் வெற்றி காண வேண்டிய நாள். குடும்பப் பெரியவர்கள் உங்களுக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவர். வீட்டுக்குத் தேவையான பொருள்களை கணிசமாக வாங்கிக் கொடுப்பீர்கள். எதிர்ப்புகள், போட்டிகள் அதிகரிக்கும். குடும்ப உறுப்பினரிடமோ, சக ஊழியர்களிடமோ உங்களின் கோபத்தைக் காட்டலாம்.

**சிங்கம்:**
லாபகரமான பணவரவுகளைப் பெறும் நாள். கடிதங்கள் மூலம் நல்ல செய்திகள் வந்து சேரலாம். மருத்துவர்களுக்கு வருமானம் அதிகரிக்கும். உறவினர்களுக்குள் ஏற்பட்ட பிரச்சினைகளை சமரசமாகப் பேசித் தீர்ப்பீர்கள். சில வேலைகளை தாமதமாகத் தொடங்கி னாலும், சரியான நேரத்திற்கு முடிப்பீர்கள். அலைச்சல் குறைந்து ஓய்வு எடுக்கலாம்.

**கன்னி:**
நாள் முழுவதும் ஓய்வில்லாமல் பரபரப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி சந்தோஷம் அதிகரிக்கும். சொந்த வேலைகளை விட்டு விட்டு உறவினர்களுக்காக அலைய நேரிடலாம். சிலர் உங்களை நம்பி பணப் பொறுப்புகளை ஒப்படைக்கலாம். குழப்பத்தில் இருக் கும் சிலருக்கு நல்ல யோசனை சொல்வீர்கள். அனுகூலமான நாள்.

**துலாம்:**
திட்டமிட்ட ஒன்று நடக்கவில்லை என்றாலும் திட்டமிடாத ஒன்று நடக்கும் நாள். உத்தியோகத்தர்கள் சக ஊழியர்களிடம் முன்வைத்த கோரிக்கை கள் நிறைவேறும். பிள்ளைகள் பொறுப்பாக செயற்பட்டு பெருமை சேர்ப்பர். வர்த்தகர்கள் வியாபார ரீதியாக திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம்.

**விருச்சிகம்:**
கடனாக வாங்கிய பணத்தை அவசரமாக திருப்பிக் கொடுக்க நேரிடும். உங்களின் திறமையை மற்றவர்கள் மறைக்க முற்படலாம். வழக்கமான பணிகளைச் செய்யும் போது, அடிக்கடி குறுக்கிடு நிகழலாம். எங்காவது அவசரமாக புறப்படும் நேரத்தில், யாரா வது தங்கள் பிரச்சினைகளைச் சொல்லி எரிச்சல் உண்டாக்க லாம்.

**தனுசு:**
உங்களை வசை பாடியவர்களே பாராட்டும் நாள். ஒன்றுக்கு மேற்பட்ட வேலை இருந்தாலும் அனைத்தையும் திட்டமிட்டு சரியான நேரத்திற்கு முடிப்பீர்கள். உறவினர்கள் மத்தியில் உங்களுக்கு முக்கியத்துவம் கூடும். நண்பர்களுடன் சேர்ந்து கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். மற்றவர்கள் யோசனை கேட்டு சிலவற்றில் மாற்றம் செய்வீர்கள்.

**மகரம்:**
எதிர்பார்த்த பணவரவுகள் எளிதில் வரலாம். புதிய வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்கலாம். வழக்கு விவகாரங்களில் திருப்பங்களைக் காணலாம். மாமன், மைத்துனர்கள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். உங்களின் பிரச்சினை ஒன்றைப் பற்றி மற்றவர்களிடம் ஆலோசிப்பீர்கள். குடும்பத்தில் அமைதி குடிகொள்ளும்.

**கும்பம்:**
எதிர்காலம் பற்றிய கவலைகள் அதிகரிக்கும். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களின் உதவிகள் நாடி வரலாம். நீங்கள் செல்லும் இடத்தில் உறவினர் அல்லது நண்பர் ஒருவரைப் பார்க்கலாம். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிட கணிசமான பணம் செலவிடலாம்.

**மீனம்:**
அடுக்கடுக்காக குவியும் வேலைகளால் அவதிப்படலாம். வீடு, மனை வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. சிலருடன் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டாலும், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் நடந்து கொள்வீர்கள். உறவினர் ஒருவர் தங்களின் வேலை ஒன்றை உங்களை நம்பி ஒப்படைக்கலாம்.

# இன்றும் தொடரும் படுகொலைகள்...! கொலைகாரர்....?

**2006** ஆம் ஆண்டு ஏ-9 வீதி மூடப்பட்ட பின்னர் கொலைகள் மலிந்திருந்த யாழ்ப்பாணத்தில் ஒருநாள்...

**காலை**

சனஞ் சந்தடிமிக்க கல்வியங்காட்டுச் சந்தைக்கு அருகிலுள்ள 'பெற்றோல் செற்' வழமை போல அதில் ''பெற்றோல் இல்லை'' என்று காட்போட்டில் சோக்கட்டியால் எழுதித் தொங்க விடப்பட்டிருந்தது. பெற்றோல் இருக்கிறதா? என்று வந்தவர்கள் சிலர் கேட்டுத் திரும்பினர். அவர்கள் முகங்களில் கவலையும் ஏமாற்றமுமே மிஞ்சியது.

திடீரெனச் 'சட சட'' வென்ற சத்தம் காதுகளைக் கிழித்தது. துப்பாக்கி வேட்டு, பார்த்துக் கொண்டிருக்க 25 வயதுமிக்க ஒரு இளைஞனின் உயிர் ஆவியாகி மேல் நோக்கி பறக்கிறது. மோட்டார் சைக்கிளில் வந்து சுட்டவர்கள் ஹெல் மெட் அணிந்திருந்தார்கள். அன்றைய கூலிக்கான பணியை முடித்த நிம்மதியுடன் விரைந்து மறைந்தார்கள் .

ஓர் உயிர் அங்கு பறிக்கப்பட்டது. சுற்றி நின்றவர்கள் அதை வேடிக்கை, விடுப்பு- பார்த்துக் கொண்டு நின்றார்கள். இறந்து வீழ்ந்த இளைஞன் மேல் வெள்ளைத் துணி ஒன்று போர்த்தப்பட்டது. அவ்வழியே போனவர்கள் வீழ்ந்து கிடந்த மனிதனை வேடிக்கை பார்த்தபடி நகர்ந்தார்கள்.

விடுப்புப் பார்த்தவர்களில் சிலர் ''முந்தி அவர்கள் 'ஸ்ரைக்' செய்யேக்க றோட்டில் நிண்டு ரயர் எரிச்சவனாம்'' ''அவர்களுக்காண்டி தினத்துக்கு ஊருக்க கொடி கட்டினவனாம். அதுதான் மற்றப் பார்ட்டி வந்து போட்டுட்டுது'' என்றனர்.

**இரவு**

காலை எப்போது விடியும் என்ற ஏக்கத்தால் இரவு யுகங்களாக நீண்டது. மின்சாரம் நிறுத்தப்பட்டுவிட்டது. செல்லிடப் பேசிகளில் தொடர்பு எல்லையும் அறுந்துவிட்டது.



தூரத்தே நாய்களின் குரைப்புத்தான் வருவதை முன்னறிவித்தது. வாகனங்களின் இரைச்சல்கள் கேட்டன. எந்த வீட்டில் என்ன நடக்கப்போகிறதோ? மனது பதைபதைக்கிறது.

திருநெல்வேலிப் பகுதியிலுள்ள பேக்கரிக்கு முன்னால் அந்த வெள்ளை வானின் சத்தம் நிறுத்தப்பட்டது. பக்கத்து வீட்டுக்காரருக்குப் போன உயிர் திரும்பி வந்தது. அவர்கள் அவர் வீட்டுக்கு வரவில்லை.

வெளியில் நால்வர் துப்பாக்கியுடன் நடமாடிக் கொண்டிருக்கின்றனர். உள்ளே சென்றவர்கள் தாம் தேடிவந்தவரின் பெயரை அதட்டினர்; மிரட்டினர்; உருட்டினர் (பெரும்பாலும் தாம் கடத்தப்படுவோம் என்ற அச்சத்தில் பலர் மனித உரிமை ஆணைக்குழுவிலும் சரணடைந்திருந்தனர். வேறு சிலர் மாற்றிடங்களில் ஒளிந்து கொண்டனர். அவ்வாறு சரணடைந்தவர்கள் மற்றும் மாற்றிடங்களில் ஒளிந்து கொண்டவர்களெல்லாம் எவ்வாறு தெரிந்து கொண்டார்கள். அதொன்றும் சிதம்பர இரகசியமல்ல- முன்னர் கைக்குண்டெறிந்தவர்கள், ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள், வீதிகளில் ரயர் எரித்தவர்கள் எல்லாம் இவ்வாறு தம்மைப் பாதுகாக்க முனைந்தார்கள்)

பேக்கரியில் வேலை செய்தவனை பாண்போறணைக்குள் போட்டு விடுவோம் என மிரட்டல் அவர்களுக்கு வெற்றியைத் தேடித்தந்தது. தேடிவந்த நபர் எங்கிருக்கிறார் என்பதை அந்த ஊழியர் சொல்லி....முடிப்பதற்குள் வான் புறப்பட்டுப் போயிருந்தது. கொலை செய்வதில் அவர்களுக்கு அவ்வளவு அவசரம். மறுநாள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் ஒரு பதிவு அதிகமானது; கடத்தப்பட்டார் என்று.

2006, 2007, 2008 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் யாழ்ப்பாணத்துக்குப் பரிசளிக்கப்பட்ட இயல்பு வாழ்க்கை இது.

பலாலி வீதி முதற்கொண்டு முக்கியமான வீதிகள் பலவற்றிலும் 10 மீற்றர் தூரத்துக்கு ஏன் அதைவிட நெருக்கமாகவே இராணுவத்தினர் நின்று கொண்டிருந்தனர். அவர்களின் வாகனங்கள் போனால் அவர்களின் பாதுகாப் புக்காக மக்களை மறிப்பார்கள். ஆனால் மக்களின் பாதுகாப்புக்காக நிலை கொண்டிருப்பதாகத் தெரிவிப்பார்கள். மக்களும் வாழாவிருந்தனர். அவர்களுக்காகவே வாழ்வதாக மேடையில் முழங்கும் அரசியல்வாதிகளும் சும்மா இருந்தனர். கூட்டமைப்பினர் நாடாளுமன்றில் குரல் எழுப்பியதுடன் பணியை முடித்துக் கொண்டனர். ''வாயைத் திறக்கக் கூடாது'' என்பது எழுதப்படாத விதியாக இருந்தது.

இவ்வாறு இராணுவ மயப்படுத்தப்பட்டிருந்த குடாநாட்டினுள் கொலைகளுக்கும் கடத்தல்களுக்கும் புலிகளே காரணமாக(?) இருந்தார்கள் என்று ஆணித்தரமாகக் கூறப்பட்டது. ஒவ்வொரு சம்பவமும் இடம்பெற்றவுடன் பத்திரிகைகள் குறிப்பாகக் குடாநாட்டுப் பத்திரிகைகளால் இராணுவப் பாதுகாப்புக்கு மத்தியில் இவ்வாறு செய்பவர்கள் யார்? என்ற கேள்வியை மட்டுமே எழுப்ப முடிந்தது.

அன்று ஒவ்வொரு சம்பவங்களும் இடம் பெறும்போது இதை இவர்கள்தான் செய்தார்கள் என்று எண்ணிய மனங்கள் காதை அப்படியே பூட்டி வைத்திருந்தன. ஏனெனில் அவை மௌனிக்கப்பட வைக்கப்பட்டிருந்தன.

அந்த மௌனிக்கப்பட்ட உண்மைகளை

இர
மய
குட
கட
கார
என்
கூறு
சம்
குட
இர
மத்
செ
கே

யெல்
லீக்ஸ்
படுகெ
வர்கள்
பரிமா
உண்
குறித்
யாதவ
நட்ட


அ
காலப்
சம்பவ
போது
தொட
செய்தி
தான்
என ம
விக்கி
எழுத்
வெளி

அ
ஒவ்
பாதிக்
கதறி
செய்ய
கட்டி
சொல்
துடிக்
நிம்ம

அ
தராசி
காலின்
டாம்
அவர்
உண்
விழி
கிரமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ம்
# ...!
# ?



**இராணுவ மயப்படுத்தப்பட்டிருந்த குடாநாட்டினுள் கொலைகளுக்கும் கடத்தல்களுக்கும் புலிகளே காரணமாக இருந்தார்கள் என்று ஆணித்தரமாகக் கூறப்பட்டது. ஒவ்வொரு சம்பவமும் இடம்பெற்றவுடன் குடாநாட்டுப் பத்திரிகைகளால் இராணுவப் பாதுகாப்புக்கு மத்தியில் இவ்வாறு செய்பவர்கள் யார்? என்ற கேள்வியை மட்டுமே எழுப்ப முடிந்தது.**

யெல்லாம் உறுதிப்படுத்துவது போல ''விக்கிலீக்ஸ்'' சில ரகசியங்களைக் கசியவிட்டது. படுகொலைகள், கடத்தல்களுக்குப் பொறுப்பானவர்கள் யார்? என்று அமெரிக்க அதிகாரிகள் பரிமாறிய செய்திகள் வெளியே வந்து வீழ்ந்தன. உண்மையைக் கண்டு அதிர்ந்தவர்கள்; அது குறித்து மக்களுக்கு விளக்கம் சொல்ல முடியாதவர்கள், அதை மறைக்க 1000 கோடிக்கு நட்டஈடு கேட்கிறார்கள்.

அன்றைற காலப்பகுதிகளில் ஒவ்வொரு சம்பவங்களும் இடம்பெறும் போது அந்தச் சம்பவங்கள் தொடர்பில் இவர்கள்தான் செய்தி ருப்பார்கள். இவர்கள் தான் செய்திருக்க வேண் டும் என மக்கள் எண்ணியவற்றை ''விக்கிலீக்ஸ்'' உறுதிப்படுத்தி எழுத்து மூல ஆவணமாக வெளியிட்டுள்ளது.

அந்தச் சம்பவங்கள் ஒவ்வொன்றினாலும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கதறியழுத போது, யார் பக்கத்தால் செய்யப்பட்டதோ என்ற அச்சத்தில் அவர்களைக் கட்டியணைத்து ஆறுதல் கூடச் சொல்லாதவர்களுக்கு இப்போது நெஞ்சு துடிக்கிறது. பாதிக்கப்பட்டவர்களின் மனங்களில் நிம்மதிப் பெருமூச்சு.

அவர்கள் விட்ட சாபங்கள் உண்மையின் தராசில் உரியவர்களை நிறுத்தி வைத்துள்ளது. காலில் விழுந்து பெற்றோர் கதறியழக் கூட வேண்டாம் என்று கெஞ்சி நிற்க ஈவு இரக்கமின்றி அவர்கள் பிள்ளைகளைக் கொன்றவர்கள் உண்மை அம்பலத்துக்கு வந்ததால் வழியற்று விழி பிதுங்கி நிற்கிறார்கள். தாம் செய்த அக்கிரமங்களையும் ஒரு போதும் வெளிவராது என்று துணிந்திருந்தவர்களுக்குப் பேரிடி கொடுத்தது 'விக்கிலீக்ஸ்'.

அதுமட்டுமல்ல வெளியே தெரியாது அவர் கள் செய்த அக்கிரமங்களும் அசிங்கங்களையும் கூட 'விக்கிலீக்ஸ்' வெளிப்படுத்தியது. பொறுக்க முடியாதவர்கள் தங்கள் மானத்துக்கு நஷ்டம் ஏற்பட்டதாகச் சொல்கிறார்கள்.

தமது உறவுகள் கொல்லப்பட்ட போதும் நடுவீதியில் நாய் போல் சுடப்பட்ட போதும் உரிமைகள் ஏதுமின்றி நசுக்கப்பட்ட போதும் முள்ளிவாய்க்காலில் நெருக்கிக் கொல்லப்பட்ட போதும் முட்கம்பி வேலிகளுக்குள் மூன்று லட்சத்துக்கும் மேல் மக்கள் கொல்லப்பட்ட போதும் போகாத இவர்களது மானம் 'விக்கிலீக்ஸ்' வெளியிட்ட ஆதாரத்தால் போய் விட்டதாம்.

''....(இவர்கள்) தமிழ் இனக்குழுமத்தின் மத்தியிலிருந்தே வந்தவர்களாக இருந்தபோதும் ஏனைய தமிழர்களுக்கு எதிராகவே இவர்களால் அனைத்துக்குற்றங்களும் அனைத்துச் சமயங்களிலும் நிகழ்த்தப்பட்டன.

## தில்லாலங்கடி

என்று அமெரிக்க தூதுவராக இருந்தவரும் பின்னர் அந்த நாட்டின் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பாக இருந்தவருமான ரொபேட் ஓ பிளேக் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது எவ்வளவு பொருத்தம்.

இன்று மீண்டும் துப்பாக்கிச் சூடுகள் தொடங்கிவிட்டன. கொலைகளும் காயங்களும் மலிந்து விட்டன.

இவற்றுக்குப் பாதாள உலகக் குழுக்களும்



முன்னாள் போராளிகளும் காரணம் என்று இவர்கள் முழங்குகிறார்கள். ஆனால் அவர்கள் யாரும் காரணம் அல்லர் என்று அடித்துச் சொல்கிறார்கள் பொலிஸார். ஆனால் காரணகர்த்தாக்களை அடையாளம் காட்ட அரசியல் அவர்களுக்கு அனுமதி தரவில்லை. ரொபேட் ஓ பிளேக்கின் வார்த்தைகள் எவ்வளவு அர்த்தம் நிறைந்தவை என்பது இப்போது மீண்டும் நிரூபணம்.

இனி இவர்கள் வாக்கு வேண்டி உங்கள் வீடுகளுக்கு வருவார்கள், வாக்கிட்ட அடையாளத்துக்காக நாவல் மையிடப்படும் உங்கள் ஆட்காட்டி விரலை அவர்கள் முகங்களுக்கு நேரே நீட்டிக் கேளுங்கள் நீதி! நீ யார் உரிமைக்காகப் போராடுகி[illegible]று.

# விருந்து



பந்திக்கு முந்துகின்ற ஆசாமிகள் நம்மில் பலபேர் உள்ளர். அப்படி முந்துவது கூடத் தப்பு இல்லை. ஆனால் அப்படி ஒரு விருந்திலே முதல் ஆளாக உட்கார்ந்து சாப்பிட்டால் கூட வெளியில் வரும் போது ''என்ன பெரிய விருந்து வைத்துவிட்டான்! சாம்பாரிலே உப்பு இல்லை, இரசத்திலே காரம் இல்லை'' என்று குறை சொல்லிக் கொண்டே போவது சரி இல்லை, நாகரிகமும் இல்லை.

திருமணப் பத்திரிகையிலே என்ன பெயர் போடப்பட்டிருக்கிறது? ''என் பெண்ணுக்கும் இன்னார் பையனுக்கும் கல்யாணம். எல்லோரும் குடும்பத்தோடு வந்து மணமக்களை ஆசீர்வதிக்கவேண்டும்'' என்றுதான் போடப்பட்டிருக்கும். குடும்பத்தோடு வந்து விருந்து சாப்பிட்டுவிட்டு சாப்பாடு எப்படியிருக்கிறது? என்று அபிப்பிராயம் சொல்லி விட்டுப் போங்கள் என்றா போடப்பட்டிருக்கு?

ஒருவரது வீட்டில் நடக்கும் விசேடத்துக்குப் போனால் எவ்வளவோ சௌகரியங்கள் நமக்கு ஏற்படலாம். ஏராளனமான கூட்டம் வந்திருக்கும். எல்லோரையும் அவர்கள் வந்து தனித்தனியாகக் கவனிக்கமுடியாது.

நாம்தான் சமாளித்து வாழ்த்த வேண்டியவர்களை வாழ்த்தி விட்டு வந்து சேரவேண்டும்.

அதைவிட்டுவிட்டு ''திருமண அழைப்பிதழ் கொடுத்தார்களே என்று போனேன்; கவனிப்பே சரியில்லை'' என்று புலம்பிக் கொண்டிருக்கக் கூடாது. ஒரு விருந்துக்குப் போனால் அங்கே எப்படி நடக்கவேண்டும் என்றுகூட அனுபவசாலிகள் சில விவரங்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்தக் காலத்திலே திருமணம், பிறந்தநாள் என்றெல்லாம் எதற்காக நடக்கின்றன தெரியுமா? மனித உறவுகளை வளர்ப்பதற்கும் பலப்படுத்துவதற்கும்தான்.

ஒரு விருந்து விசேடத்துக்குப் போனால் அமைதியாகப் பொறுமையாகப் போய் உட்கார வேண்டும். அடிச்சுப் பிடித்துக் கொண்டு முதல் இடத்தைப் பிடிக்கப் போறேன் என்று நிற்கக் கூடாது. முதற்பந்தி நடந்து கொண்டிருந்தால் அது முடிந்து இலை எடுத்துச் சுத்தம் செய்த பிறகுதான் போய் உட்காரவேண்டும். அதுதான் நாகரிகம்.

இலை எடுக்கிறதற்கு முன்னரே அங்கே போய் உட்கார்ந்தால் நன்றாக இருக்காது. சாப்பிட்டுவிட்டு உட்கார்ந்திருக்கிறீர்களா? சாப்பிடுவதற்கு உட்கார்ந்து இருக்கிறீர்களா? என்று பார்ப்பவர்களுக்குச் சந்தேகம் வந்துவிடும்.

அதேபோல் இலையில் எல்லாச் சாப்பாட்டு வகைகளும் பரிமாறியதற்குப் பிறகு சாப்பிட ஆரம்பிக்க வேண்டும். ஒவ்வொன்றும் வைக்கும்போது நாம் எடுத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தால் எதை வைத்தோம், எதை வைக்கவில்லை எனப் பரிமாறினவரே குழப்பிப் போய்விடுவார்.

சாப்பிடும்போது உங்கள் சாப்பாட்டையே நீங்கள் கவனியுங்கள். அடுத்தவர்களின் இலையிலே என்ன இருக்கிறது...? பக்கத்திலே இருக்கிறவர் எதை அதிகமாகச் சாப்பிடுகிறார்? என்பதைக் கவனிக்கக் கூடாது. நமக்கெதற்கு இந்த வேலை.

எல்லோரும் சாப்பிட்டு முடிக்கிற வரைக்கும் பொறுமையாக இருக்கவேண்டும். நீங்கள் மட்டும் திடீரெனப் பாதியிலே எழுந்தால் பக்கத்திலிருக்கிறவர்களுக்குச் சங்கடமாக இருக்கும். பக்கத்திலே உள்ளவர் உங்களை எழுந்துபோகச் சொன்னால் போகலாம்.

விருந்துகளிலே சாப்பாட்டை வீணாக்குவது நாகரிகமாகப் போய்விட்டது. சாப்பாட்டிற்கே கஷ்டப்படுகின்ற பலபேர் இந்த உலகத்திலே இருக்கிறபோது சாப்பாட்டை வீணாக்குவது எவ்வளவு பெரிய மோசமான செயல் என்பதை நினைத்துப் பார்க்கவேண்டும்.

உணவு வகைகளையெல்லாம் பொதுவான ஓர் இடத்திலே வைத்துவிடுவார்கள். நமக்குத் தேவையானதை நாமாக எடுத்து ஒரு தட்டிலே போட்டுச் சாப்பிட வேண்டும். இதில் கூட சிலபேர் தேவைக்கு அதிகமாக எடுத்துப் போட்டு வீணாக்குகிறார்கள்.

சில சமயம் கடைசியாகச் சாப்பிடப் போறவர்களுக்கு எல்லா வகை உணவும் கிடைக்காமலே போகலாம். அதைப் பெரிதுபடுத்தக் கூடாது.

ஒரு பெரிய கல்யாண விருந்து நடந்து கொண்டிருந்தது. விருந்து மண்டபத்து வாசலில் ஒருவர் நின்று, வருகிறவர்களையெல்லாம் மிகவும் மரியாதையாக அனுப்பிக் கொண்டிருந்தார். எப்படித் தெரியுமா?

வருபவர்களின் கைகளைப் பிடித்து முத்தம் கொடுத்து அதற்கப்புறம் உள்ளே அனுப்பிக் கொண்டிருந்தார். சனக்கூட்டமெல்லாம் கலைந்த பிறகு அவரிடம் போய் ''ஐயா நானும் எவ்வளவோ விருந்துகளுக்குப் போயிருக்கிறேன். இருந்தாலும் இவ்வளவு மரியாதையாக, வருபவர்களின் கைக்கு முத்தம் கொடுத்து வரவேற்பதை இங்கேதான் பார்க்கிறேன்'' என்றேன்.

அதற்கு அவர் ''அட போங்கள் ஐயா, நான் முத்தம் கொடுக்கவில்லை; முந்தின பந்துக்குச் சாப்பிட்டவர்கள் அடுத்த பந்திக்கு வருகிறார்களா? என்று மோந்து பார்த்துக் கொண்டிருந்தேன்'' என்றார்.

கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளவல்கள் வட்டம் வாக்குச் சீட்டு

**காதலர் தினம் கொண்டாடுவது எமது காலாசாரத்துக்கு**

ஏற்றதொன்று ☐ ஏற்றதன்று ☐

பெயர்: ..................................................
முகவரி: ..................................................
..................................................
அடையாள அட்டை இல. ..................................................

உங்கள் தீர்ப்புக்களை 24.02.2011ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இந்த வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.




## குடாநாட்டு மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளில் முக்கிய பங்கு

### பாடசாலை

பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளை எட்ட வேண்டுமென்ற குறிக்கோளுடன் பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள், பிரத்தியேக வகுப்புகளென்று மாணவர்கள் அலைந்து திரிவது எமது குடாநாட்டில் வழக்கமாகிவிட்டதொன்று.

இவ்வாறு கல்வி கற்பதன் மூலம் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை மாணவர்களால் எட்ட முடிகின்றது என்பதை யாராலும் மறுக்கமுடியாது. இருந்தும் இவற்றில் பிரதான இடத்தை வகிப்பது பாடசாலைகள் என்பதே யதார்த்தம்.

பாடசாலைகளில் கற்பிக்கப்படும் பாடங்கள் ஒப்படைகள், செயற்றிட்டங்கள், ஆய்வுகூடக் கல்விகள் என்பன பாடவிதானத்தின்படி போதிக்கப் படுகின்றன. இதற்கு மேலாகக் கோட்டம், வலயம், மாகாணக் கல்வித் திணைக்களங்களின் உயர்மட்ட அதிகாரிகளின் மேற்பார்வையுடனும் ஆலோசனைகளுடனும் கற்பித்தல் நடவடிக்கைகள் நிர்வகிக்கப்படுகின்றன. ஆசிரியர்கள் துறைசார்ந்த கல்வியில் பட்டப் படிப்பை மேற்கொண்டவராகவோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் பயிற்சி நிலையங்களில் பயிற்றப்பட்டவராகவோ இருக்கின்றனர். இவ்வாறான கற்பித்தல் கட்டமைப்புக்களைத் தனியார் கல்வி நிலையங்கள் கொண்டிருப்பதில்லை.

தனியார் கல்விநிலையங்களை நாடாமல் பாடசாலைக் கல்வியை மட்டுமே பெற்ற பலர் குடாநாட்டில் நல்ல பெறுபேறுகளைப் பெற்றிருக்கிறார்கள். இதேபோல தனியார் கல்வி நிலையங்களில் மட்டும் கல்விகற்கும் முறைமை குடாநாட்டில் இல்லை.

சிறந்த பெறுபேறுகளைப் பெற ஊக்குவிக்கும் ஒரு சாதனமாக மட்டுமே தனியார் கல்வி நிலையங்களைக் கருதமுடியும். பரீட்சைப் பெறுபேறுகளில் முக்கியபங்கு வகிப்பது பாடசாலைகள் மட்டுமே தான்.

*சி.விநோஸ்,*
*புளியங்கூடல், ஊர்காவற்றுறை*

### தனியார் கல்வி நிலையம்

இன்றைய மாணவர்கள் தனியார் கல்வி நிலையத்தில் கல்வி கற்பதையே விரும்புகிறார்கள். இவ்வாறு இவர்கள் விரும்புவதற்குக் காரணம் இருக்கத்தான் செய்கின்றது. மாணவர்களிடையே பாடசாலை பற்றிய நம்பிக்கை இல்லாமை, ஆசிரியர்கள் அடிக்கடி விடுமுறைகளை எடுத்தல், பாடசாலைகளில் பாடத்திட்டங்கள் முழுமையாக முடிக்கப்படாமை போன்ற காரணங்களால் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்கின்றனர்.

ஆசிரியர்கள் பாடசாலைகளில் கற்பிப்பதை விட மிகவும் சிறந்த முறையில் தனியார் நிலையங்களில் கற்பிப்பது குறிப்பிடத்தக்கது.

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் நூறு வீதமானவர்கள் மேலதிக வகுப்புகளுக்குச் செல்வதாகத் தேசிய கல்வி ஆணைக் குழுவின் ஆய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.மேலதிக வகுப்புக்களுக்கு செல்வதாலேயேதான் முக்கிய பரீட்சைகளில் கூடுதலான மாணவர்கள் சித்தி அடைவதாகவும் மேலதிக வகுப்புக்களின் மூலம் மாணவர்களுக்கு அழுத்தம் வழங்கப்படுகிறது எனவும் தெரியவருகிறது.

கல்வியமைச்சு சென்றவருட இறுதியில் குறிப்பிட்டுள்ளதுடன் தனியார் வகுப்புக்களின் பக்கம் கல்வியமைச்சு கவனம் செலுத்தியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இதன்மூலம் பரீட்சைப் பெறுபேறுகளில் முக்கியபங்கு வகிப்பது தனியார் கல்வி நிலையமே ஆகும்.

*ந.யருசா, தரம்-11,*
*கிளி/ முழங்காவில் ம.வி. முழங்காவில்*

## நாய்

உன் விழி என்னைப் பார்த்ததும்
என் உடல் மெய்சிலிர்த்து நடுநடுங்கியது
பயத்தால் பதறியடித்து ஓடினேன்
திரும்பிப் பார்க்காமல்
நான்கு கால்கள் என்னைத்
துரத்துவதை மட்டும் உணர்ந்தேன்
அதிலும் என்ன அதிசயம் பார்
என் அரையடி கூட நீ இருக்கமாட்டாய்
ஓடமுடியாமல் மூச்சடக்கிக்
கீழே குனிந்தேன்
கல் எடுப்பதாய் நினைத்து
நீ திரும்பி ஓடினாய்.

*து.சுஜித்தா,*
*பிரம்படி லேன், கொக்குவில்.*

## இறுக்கம் நீக்கும் புன்னகை.....



(சென்றவாரத் தொடர்ச்சி)

அது இரக்கம், கனிவு ஆகிய நல்ல எண்ணங்கள் நிரம்பி வழியும் இதயத்திலிருந்து மலர்ந்த புன்னகையாக இருக்கும். அந்த மலர்ச்சி கண்களிலும் தெரியும். பார்ப்போரின் முகமும் மலரும்.

ஆனால் வளர்ந்த விதத்தால் அல்லது சூழ்நிலையால் சிலருக்கு புன்னகைப்பது கடினம். நல்லெண்ணம் படைத்தவர்களாக அவர்கள் இருந்தாலும் புன்னகைப்பது அவர்களுக்குப் பழக்கமில்லாமல் இருக்கலாம். உதாரணமாக, ஜப்பானிய ஆண்கள் எல்லா சந்தர்பங்களிலும் அடக்கமாக , அமைதியாக இருப்பதே வழக்கம். ஆகவே முன்பின் தெரியாதவர்களைப் பார்த்து புன்னகை செய்யும் பழக்கம் அவர்களில் அனேகருக்கு இல்லை. மற்ற நாடுகளைச் சேர்ந்தவர்களும் கூட இப்படி இருக்கலாம். கூச்ச சுபாவத்தால் புன்னகைக்கச் சிரமப்படுவோரும் உண்டு. ஆகவே ஒருவர் புன்னகைக்கவில்லை அல்லது அடிக்கடி புன்னகைக்கிறார் என்பதை வைத்து அவரை எடை போடக்கூடாது. ஒவ்வொருவரும் வித்தியாசமானவர்கள்.

அவர்களுடைய குணங்களும் வெவ்வேறு. அவர்கள் மற்றவர்களோடு பேசும் முறைகளும் வெவ்வேறு.

ஆனால்... ஓர் எச்சரிக்கை...நாம் பார்க்கும் போது புன்னகைக்கும் சிலரது புன்னகையில் போலித்தனம் இல்லாத புன்னகை இல்லை என்பது கசப்பான உண்மை. ஏமாற்றுப் பேர்வழிகளும் உள்ளதை உள்ளவாறு கூறாத வியாபாரிகளும் மிக அழகாகப் புன்னகை செய்வார்கள். புன்னகைத்து விட்டால் சந்தேகம் ஏற்படாது, நாம் மயங்கிவிடுவோம் என்பது அவர்களுக்குத் தெரியும்.

(வளரும்)

தொகுப்பு: மலீப்

## தேவை

உலகம்
ஊடக நிகழ்வுகளால் வாழ்கின்றது
ஊடகக் கல்வியால் நிமிர்கின்றது
ஊடக அறிவால் சுழல்கின்றது- எம்
தேசம் வளரத் தேவை
நேர்த்தியான ஊடகங்கள்

*து:சஜிதா,*
*சங்கானை.*

## விவாதமேடை

இளைய சமூகத்தின் விவாதத்திறனுக்குக் களம் அமைத்துக் கொடுப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே

**காதலர் தினம் கொண்டாடுவது எமது காலாசாரத்துக்கு ஏற்றது, ஏற்றதன்று**

என்ற விவாதத்துக்கு உங்கள் கருத்துக்களை முன்வைத்து மோதுங்கள். வெற்றியைத் தீர்மானிப்பதும் நீங்களே. வெற்றிபெறும் என நீங்கள் கருதும் அணிக்கு வாக்களிக்க முடியும். வெற்றி பெறும் அணிக்கு வாக்களித்தவர்களில் மூவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பரிசில் வழங்கப்படும். அத்துடன் சிறந்த விவாதம் அனுப்புவோரில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.

**இளைஞர், யுவதிகளே!**

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

*'இளவல்கள் வட்டம்',*
*'உதயன்',*
*361, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

பெயர் :- ..................................................
முகவரி :- ..................................................
..................................................
.................... ....................
திகதி கையொப்பம்

## காணாமல் போன கண்ணிமைகள்

இலை உதிரும் காலங்களில்
தழும்புகளை மட்டும் தனியே விட்டு
சருகாகிப் போன நினைவுகள் - எனும்
நெருடல்களிடையே
வாழ்ந்து கொள்கிறேன் - இந்தக்
காலங்களின் அச்சுக்கள்
தேய்ந்து சிதையும் வரை (.)
காற்றாகிப் போகிறேன் - என்
கனவுகளில் பிளந்த விரிசல்களிடையே
கண்ணீராய் கரைகிறேன்
நேற்றைய நிஜங்களின்
பொய்யான விடியல்களில்
காணாமல் போன என்
கண்களின் இமைகளை
இன்றைய அஸ்தமனங்களில்
கண்டு கொள்வதற்காக.....

*ஞா. தாரணி,*
*டச்சு வீதி, கோப்பாய்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைநிலைக் கல்வியைப் புகட்டும் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்

எழிலன்




(சென்றவாரத் தொடர்ச்சி)

உரும்பிராய்ப் பிரதேசத்தில் தரமிக்க இடைநிலைக் கல்வியை வழங்கும் பாடசாலைகளில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயமும் ஒன்றாகும்.

இந்தப் பாடசாலையின் மாணவர் மன்றம் மாணவர்களின் பல்வேறு ஆற்றல்களை வெளிக்கொணரும் வகையில் போட்டிகள் மற்றும் நிகழ்வுகளை நடத்துகின்றது.

கட்டட வசதிகளைப் பொறுத்த வரையில் கட்டடங்களில் பல, இப்பாடசாலையை அரசு சுவீகரிப்பதற்கு முன்னர் பாடசாலைப் பெற்றோர்கள்- ஆசிரியர் சங்க முயற்சியாலும் நலன் விரும்பிகளின் நன்கொடையினாலும் அமைக்கப்பட்டன.

மலேசியா, கோலாம்பூரில் வாழ்ந்து வந்த உரும்பிராய் அன்ப்ர் தம்பு குமாரசாமி விஞ்ஞான கூட மண்டபத்தை அமைத்துக் கொடுத்தார். பலவித அழகுக் காட்சிகள் பொருந்திய நாடக அரங்கைப் பாடசாலைப் பெற்றோர்-ஆசிரியர் சங்கத்தினர் நிர்மாணித்துக் கொடுத்தனர். கட்டடத்திருத்த வேலைகளில்செதியாகலிங் கம் கியூ.ஸி குடும்பத்தினர் அவ்வப்போது உதவிகளைப் புரிந்து வந்தனர்.

பாடசாலைச் சமூகத்தின் அயராத முயற்சியின் பலனாக அடித்தளமும் அதனோடு சேர்ந்த 2 மாடிக்களையும் உடைய கட்டடம் 2004 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இதன் பேறாக அலுவலகம், கணினி ஆய்வுகூடம் போன்றவை சிறப்பாக இயங்கக் கூடிய கட்டட வசதிகள் கிடைக்கப் பெற்றன.

இந்தப் பாடசால்லயில் தினசரி வழிபாட்டிற்கென பெற்றார்- ஆசிரியர் சங்கத் தலைவராக நீண்ட காலம் பணிபுரிந்த அ.இளையதம்பி பாலசுப்பிரமணியர் ஆலயத்தை அமைத்து உதவினார். இதன் மூலம் இந்து சமய நிகழ்வுகள் சிறப்புற முன்னெடுக்கப்படக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. வெள்ளிக்கிழமைகளில் கூட்டுப்பிரார்த்தனை, நால்வர் குருபூசை, நாவலர்,வள்ளுவர் குருபூசை, நவராத்திரி விழாக்கள் போன்றன சிறப்புற நடைபெறுகின்றன.

**இந்தப் பாடசாலையில் ஆலயத்தை அமைத்து இந்து சமய நிகழ்வுகள் சிறப்புற நடைபெறுவதற்கு பெற்றோர்– ஆசிரியர் சங்கம் அரும்பணி ஆற்றியுள்ளது.**

இந்தப் பாடசாலையின் அதிபர்கள் வரிசையில் ஆரம்பம் தொடக்கம் இன்று வரை பாடசாலையை உன்னத நிலைக்கு இட்டுச் சென்றவர்களாக மதிக்கப்படுகிறவர்கள் அ.கந்தையா, எஸ்.பொன்னுத்துரை, சு.குமாரசேகரம், வி.அரியநாயகம், சு.பஞ்சாச்சரம், திருமதி.எஸ்.பரஸ்கிரிநாதன், செல்வி.எ.சின்னத்தம்பி, அ.ஈஸ்வரநாதன், எஸ்.யோகராஜா, திருமதி.க.தியாகலிங்கம், என்.சிவகடாட்சம் ஆகியோர்கள் ஆவர். தற்போது அதிபர் மு.விக்னேஸ்வரன் தலைமையில் பாடசாலைக் கல்விசெயற்பாடுகள் பாடசாலைச் சமூகத்தின் சிறப்பான ஒத்துழைப்போடு முன்னெடுத்து வருவதோடு உரும்பிராய்ப் பிரதேசத்தின் கல்விக்குச் சிறந்த பங்களிப்பைத் தொடர்ந்து முன்னெடுக்க எல்லாம் வல்ல கற்பக விநாயகர் துணைபுரிந்தும் வருகிறார்.

(முற்றும்)




# ஸ்ரீ முருகன் மாதர் சி.க.வ.கூ.சங்கம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

மாதர் கூட்டுறவு அமைப்புகளின் முன்னோடியாக விளங்குவது நீர்வேலி ஸ்ரீ முருகன் மாதர் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம் ஆகும். இந்தச் சங்கம் 1958 ஆம் ஆண்டு ஜே/1456 ஆம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சங்கத்தின் செயற்பாட்டிற்கும் வழிப்படுத்தலுக்கும் உரியவராகத் திருமதி ருக்குமணி ஆனந்தவேலின் பங்களிப்பு முழுமையாகப் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.



350 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் உறுப்பினர்களின் நலனைக் கருத்தில் கொண்டு தனக்கென வங்கி ஒன்றையும் நடத்துகின்றது. வங்கியின் முகாமையாளராக செல்வி.சின்னத்துரை தயாதேவி கடமையாற்றி வருகின்றார். 12வீதம் வட்டிக்கு அங்கத்தவர்களுக்கு ஒரு லட்சம் ரூபா வரை இலகுகடன் வழங்கப்படுகின்றது. சங்கத்தின் கொடுக்கல், வாங்கல்கள் வங்கி ஊடாக மேற்கொள்ளப்படுவதோடு அங்கத்தவர்களின் சாதாரண சேமிப்பு, நிலையான சேமிப்பு, வயது முதிர்ந்தோர் வைப்பு, வயோதிபரின் மரணப் பாதுகாப்பு நிதியம், மாணவர்களுக்கான சேமிப்பு, சிறுவர்களுக்கான சேமிப்பு, மாணவர்களுக்கான சேமம் உள்ளிட்ட பல்வேறு நிதி முகாமைத்துவ சேவைகள் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சங்கத்தின் நிர்வாகக் குழுக்கூட்டம் வாரத்தோறும் சனிக்கிழமைகளில் நடைபெறும். அதேபோன்று மாதாத்தப் பொதுக்கூட்டம் பூரணை விடுமுறை நாளில் நடைபெறும். இதில் நிர்வாகிகளும் அங்கத்தவர்களும் நியமப்படுத்தப்பட்ட முறையில் கலந்துகொள்ளும் திறன் சங்கத்தின் மக்கள் மயப்படுத்தப்பட்ட செயற்பாட்டுத் திறனை வெளிப்படுத்தி நிற்கின்றது.


சங்கத்தின் பன்முகப்படுத்தப்பட்ட சேவைநிலையால் சங்க உறுப்பினர்களும் சங்கமும் உயர்வு பெற்று வருவது சகல தரப்பினராலும் பாராட்டப்படுகின்றது. சங்கத்தின் சேவை நிலை மேலும் வளம்பெற பிரதேசத்தில் கிடைக்கும் மூலப் பொருள்களைக் கொண்டு இயங்கும் நிரந்தரமான தொழிற்சாலைகளை நிறுவி மகளிர் தொழில் முயற்சியை மேலும் உறுதி செய்யவேண்டும்.

"கூட்டுறவே நாட்டுயர்வு"

(முற்றும்)

ஞான ஆதவன்

# அச்சுவேலி மத்திய கல்லூரி



வலி.கிழக்கின் கல்வி நிர்வாகப் பிரிவான "கோப்பாய் கோட்டக்கல்வி அலுவலர்" பிரிவில் உள்ள மூன்று '1சி' தரப் பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கையால், வளவசதியால் அமைவிடத்தால், காலத்தால், முந்தியது அச்சுவேலி மத்திய கல்லூரி. அச்சுவேலிக் கிராமத்தின் நடுவிடத்தில் யாழ்ப்பாணம்-அச்சுவேலிப் பிரதான வீதியில், சங்கானைவீதி சந்திக்கும் முச்சந்தியில், சந்திக்குக் கிழக்குப் பக்கமாகப் பிரதான வீதியோரத்தில் அமைந்துள்ளது. கல்லூரிக்கு நடுவில் தென்னிந்தியத் திருச்சபைத் தேவலாயமும் தேவலாயத்துக்கு வடக்குப் புறத்தில் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு (தரம் 1-5), தெற்குப் புறத்தில் கனிஷ்ட இடைநிலை, சிரேஷ்ட பிரிவுகள் (தரம் 6-13) என்பன அமைந்துள்ளன.

நூற்றாண்டு விழாவை நிறைவு செய்து இன்று 120 ஆவது ஆண்டில் கால் பதித்து உள்ளது. அச்சுவேலிப் பகுதிக்கும் அதனோடு இணைந்த அயல் கிராமங்களுக்கும் கல்வி நிழல்பரப்பி நீண்ட கல்விப் பாரம்பரியங்களைக் கொண்டதாக விளங்குகிறது. கல்லூரியில் தற்பொழுது ஆண்கள்/ பெண்கள் கலவன் என்ற நிலையில் ஆயிரம் மாணவர்களுக்கு மேல் கல்வி பயில்கின்றனர். கல்லூரியின் தற்போதைய அதிபராக வேலுப்பிள்ளை அரசகேசரி கடமையாற்றுகின்றார்.

நூற்றிஇருபதாவது ஆண்டில் கால்பதித்து உள்ள கல்லூரியின் வரலாற்றை மீள்நோக்கும் போது அதன் வளர்ச்சிப் படிநிலையைக் கண்டுகொள்ள முடிகின்றது. யாழ்ப்பாணத்தின் கல்வி வளர்ச்சியில் மிஷனரிமாரின் பங்களிப்பு காத்திரமானது. சமயத்தோடு இணைந்த நிலையில் கல்வி முன்னெடுப்புக்கள் முனைப்புடன் முன்னெடுக்கப்பட்டன. 1887ஆம் ஆண்டு அச்சுவேலி கோவில் பற்றில் ஈ.ஜே.வில்லியம் போதகர் தலைமையில் தேவாலயம் அமைக்கப்பட்டதோடு தேவாலய வளவில் தென்னிந்திய திருச்சபையின் அனுமதியுடன் 1892 ஆம் ஆண்டில் 'ஆண் கல்விக்கான அமைப்பு' ஒன்றும் அதை அடுத்து பெண்கள் கல்விக்கான அமைப்பும் ஆலயச்சூழலில் ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டதாகக் கூறப்படுகின்றது. ஆரம்பத்தில் அமெரிக்கன் தேவலாய மிஷனால் நிர்வகிக்கப்பட்ட ஆங்கிலப் பாடசாலையாக விளங்கியது.

அச்சுவேலி கோவில் பற்றில் உள்ளடங்கியிருந்த தொண்டமானாறு, வளலாய், இடைக்காடு, பத்தமேனி, நவகிரி, புத்தூர் கிராமங்ளை உள்ளடக்கிய பரந்த பிரதேச மாணவர்களும் அதனோடு அண்டிய கிராமங்களின் மாணவர்களும் இங்கு கல்வி பயில்வதற்கு வசதிகள் இருந்தன. ஆரம்பத்தில் திண்ணைப் பாடசாலையாக அதையடுத்து அமெரிக்கன் தேவாலய மிஷன் ஆங்கிலப் பாடசாலையாக அதன் பின்னர் கிறிஸ்தவக் கல்லூரியாக, பின்னர் மகாவித்தியாலயம் என்ற நாமங்களுடன் விளங்கிய கல்லூரி தற்பொழுது அச்சுவேலி மத்திய கல்லூரி என்ற பெயருடன் கல்விப் பணியை முன்னெடுத்து வருகின்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிற்போடப்பட்டுள்ளது

23.01.2011இல் நடைபெற இருந்த யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவரின் ஒன்றுகூடல், தவிர்க்க முடியாத காரணத்தினால் 06.02.2011 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் என்பதை அறியத் தருகின்றேன்.

புதிதாகச் சேர விரும்பும் அங்கத்தவர்கள் கல்லூரியில் தொடர்பு கொள்ளவும்.

சி.சிவகுமாரன்
செயலாளர்,
யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி, பழைய மாணவர் மன்றம்.

# தேவை

**கடற்கரையை அண்மித்த காணி. காரியாலய இடவசதி மற்றும் யாழ்ப்பாணத்தின் மத்தியில் அமைந்துள்ள காணி உடனடியாகத்தேவை.**

ஹோட்டல் செயற்றிட்டங்கள் மற்றும் காரியாலய இடவசதிக்கான கடற்கரைக்கு முகப்பாக அமையப்பெற்ற காணி மற்றும் யாழ் குடா நாட்டின் மத்தியில் அமையப்பெற்ற காணி ஆகியன உடனடியாக தேவைப்படுகின்றன. தங்களின் காணி பற்றிய விபரங்களை அறியத்தரவும். மேற்படி இடங்களை பார்வையிடும் பொருட்டு ஜனவரி 21ஆம் திகதி முதல் 23 வரை ஹோட்டல் 'டில்கோ' மற்றும் யாழ்ப்பாண சர்வதேச சந்தையில் இல.149 மற்றும் 150 இல் அமைந்துள்ள 'மெக்வூட்' காட்சியறையிலும் நாம் பிரசன்னமாயிருப்போம்.

தொடர்புகளுக்கு :
சுதீன் : 0778424248
வித்யா : 0774632726
தொலைநகல் : 0115338024
மின்அஞ்சல் : projects@mackwoods.com

## யாழ்ப்பாணம் - கோட்டை
## அருள்மிகு முனீஸ்வரர் தேவஸ்தான தைப்பூசத் திருவிழா - 2011

அன்புடையீர்,

நிகழும் விகிர்தி வருஷம் தைமாதம் வியாழக்கிழமை 6ஆம் நாள் (20.01.2011) முற்பகல் 11 மணிக்கு உருத்திரா அபிசேகத்துடன் பூஜை ஆரம்பமாகும்.

அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு விசேட பூசை நடைபெற்றுப் பின்னர் மகேஸ்வர பூசை (அன்னதானம்) நடைபெறும். எனவே இம்மங்களகரமான நிகழ்விற்கு தங்கள் குடும்ப சகிதம் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

சிறிலங்கா சிறைச்சாலை, யாழ்ப்பாணம். (109470) யாழ்.சிறைச்சாலை, அத்தியட்சகரும், உத்தியோகத்தர்களும்.

## 5ஆம் ஆண்டு நிறைவின் நினைவுகள்



**யோசப் கில்டா ஜெயராணி**

மலர்வு
18.01 .1957

மறைவு
20.01.2006

ஐந்தாவது பிள்ளையாக அழகுடன் மலர்ந்தாள்
ஐம்பதை எட்ட முதல் கொடிய நோயால் மறைந்தாள்
ஐம்புலன்களும் சோர்ந்து விட்டது உன் துயரமான பிரிவால்
ஐந்து ஆண்டுகள் உருண்டோடி மறைந்தாலும்
ஐயோ! உன் நினைவை எம் நெஞ்சம் மறைக்குமா? மறக்குமா?
ஆண்டவரில் உன் ஆன்மா அமைதிபெற ;
தினமும் வேண்டி நிற்கின்றோம்

நீங்காத நினைவுகளுடன்:
19/8, அடம்பன் வீதி, யாழ்ப்பாணம்.
தாயார், சகோதரங்கள், உற[illegible].

## புதிய இணையத்தளம்

கோப்பாய், ஜன.20

வலி.கிழக்குப்பிரதேச செயலகத்திற்கு புதிய இணையத்தளம் கடந்த தைப்பொங்கல் தினத்தன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

செயலகம் மூலமான தகவல்களை www.dskopy.lkஎன்ற இணையத்தள முகவரி மூலம் பெற்றுக்கொள்ளலாம். (ம-72)

## தைப்பூசத் திருவிழாக்கள்

வடமராட்சி, ஜன.20

பிரசித்திபெற்ற தொண்டைமனாறு செல்வச்சந்நிதி முருகன் கோயில் தைப்பூச உற்சவம் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் முழுவதும் விசேட அபிசேகமும் பூசைகளும் இடம்பெற்று சுவாமி வீதியுலா எழுந்தருள்வார். (ற-236)

* * *

வண்ணை, ஜன.20

அளவெட்டி மேற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் இன்று வியாழக்கிழமை தைப்பூசத் திருவிழா நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசை ஆரம்பமாகி 9 மணிக்கு சிறப்பு சமயச் சொற்பொழிவு இடம்பெறும்.

முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து ஸ்ரீமத்நாராயணனின் வீதியுலா நடைபெறும்.(ற-160)

* * *

யாழ். கோட்டை முனீஸ்வரர் தேவஸ்தான தைப்பூசத் திருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு உருத்திரா அபிஷேகத்துடன் ஆரம்பமாகும்.

அதனைத்தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு விசேட பூசை நடைபெற்று பின்னர் மகேஸ்வர பூசை நடைபெறும். (ற)

* * *

மீசாலையில் அமைந்துள்ள சத்திய ஞான சன்மார்க்க கோட்டத்தில் தைப்பூசத் திருவிழா இன்று வியாழக்கிழமை அதிகாலை 3 மணிக்கு சத்திய ஞானக் கோட்ட அகல் மண்டபத்தில் திருப்பள்ளி எழுச்சி, இறைபடைப்பின் இரகசியமும் நோக்கமும்- சத்விகாரம் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும். (ற-496-122)

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்யக்கூடிய வயது 40இற்கும் 50இற்கும் இடைப்பட்ட பெண் தேவை.
சம்பளம் ரூப 10,000/=
தொடர்பு: 077 1965666

## வேலைவாய்ப்பு

இலங்கையின் பிரபல்யமான தொலைத்தொடர்பாடல் கம்பனியின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரதிநிதிக்கான வெற்றிடம் உண்டு. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். உங்கள் தகைமையின் அடிப்படையில் [திறமை, அனுபவம்] சம்பளம், தரகுப் பணம் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0786000680

## தவறிவிட்டது

10ஆம் கட்டை, ஆவரங்கால் மேற்கு, புத்தூர் எனும் முகவரியைச் சேர்ந்த நவரட்ணராஜா அபிராம் என்பவரது தேசிய அடையாள அட்டை [892321965 V] செவிப்புலன் அற்றோர் அடையாள அட்டை [Deaf] என்பன (08.01.2011) அன்று நெல்லியடிக்கும் புத்தூருக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பி உதவவும். T.P.0718798971.

## TVகள் மலிவு விற்பனை

100 இற்கும் மேற்பட்ட Sony Wega Flat TG 21-16,500/=, 21Q,-13,000=, AR25 "22,000/= AR29" - 26,000/= DTS அம்பிளி பயர்கள், JBL Box வகைகள், ரேடியோக்கள் (RX), DVD, VCR மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0771393670 இ.மகேஸ்வரன் [அப்பளக் கோம்பனி], சீனிப்புளியடி [ஆரம்ப பாடசாலை அருகில்], கே.கே.எஸ். வீதி, இணுவில்.

## வேலை வாய்ப்பு

கீழ்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் இருபாலாரிடமிருந்தும் எதிர்பார்க்கப்படுகின்றது.

கணக்குப் பதிவாளர் -02
இருப்புப் பதிவாளர் -02

வயது எல்லை 40 இற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். திருப்திகரமான சம்பளம் வழங்கப்படும்.

நேர்முகத் தேர்வு நேரடியாக 22.01.2011 நிறுவனத்தில் மு.ப. 10 மணி முதல் இடம் பெறும். (முன் அனுபவம் விரும்பத்தக்கது)

Alfiqar Suppliers இல.289, [illegible] வீதி, (கலட்டிச் சந்தி), யாழ்ப்பாணம்.
T.P. 0215100700 (சி/875004)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியை திருமதி கலைவாணி சிவானந்தன் அவர்களின் தந்தை அமரர் **விஸ்வநாதன் நடராசா** அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குவதோடுஅமரரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.
(109471)

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் அந்தோனிப்பர்னாந்து செபமாலை முத்து
[பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ்.பல்கலைக்கழகம்]
மலர்வு: 23.06.1949
உதிர்வு: 20.01.2008

பப்பா!
ஆண்டாண்டு மறைந்து சென்றாலும்
நீங்கள் எம்மோடு வாழ்ந்த
பசுமையான நினைவுகள்
என்றென்றும் எம் மனதில் நிறைந்திருக்கும்.

இல.15/ 1 புதுவீதி, கோய்யாத்தோட்டம். (109294)
என்றும் உங்கள் நினைவில்:
குடும்பத்தினர்.

விண்ணக
பேரின்ப வாழ்வில்
## முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
28 . 04 . 1929

மறைவு
20 . 01 . 2010

**அமரர் பிலிப் ஜோசப் பெனடிக்ற்**
(ஓய்வுபெற்ற புகையிரத சிரேஷ்ட பாதுகாவலர்)

"கிறிஸ்துவோடு இறந்தோமாயின் அவரோடு வாழ்வோம் என்பதே நம் விசுவாசம்"

அன்புத் தந்தையே! தெய்வமே!
உங்களைப் பிரிந்து ஓராண்டு சென்றாலும்
ஓயாது தவிக்கின்றோம் ஆண்டுகள் பல ஓடிக்கழிந்தாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எம்மை விட்டு நீங்கா!

236, கண்டி வீதி, யாழ்ப்பாணம். (109493)
என்றும் நினைவுடன்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
1961 ★ 12 ★ 04

உதிர்வு
2010 ★ 01 ★ 31

**திருமதி றணீத்தா தெட்சணாமூர்த்தி**
திதி: அபரபக்க பிரதமை (20-01-2011)

ஆண்டொன்று ஓடி மறைந்தாலும் - உம் நினைவு
எம் நெஞ்சில் அலைமோதுகிறது
ஒரு நொடிப்பொழுதில் - எமையெல்லாம்
தவிக்கவிட்டுச் சென்றதேனம்மா !
கண்ணிமைத்தபோதெல்லாம் - கண்முன்னே
உம் சிரித்த முகம்தானம்மா
"அம்மம்மா" என்று அழைக்கும் அதிஷ்டம்
ஆஷாக்குட்டிக்கும் கிடைக்கவில்லையம்மா
கள்ளமில்லா உன் அரவணைப்பின்றி
உன் சொந்தங்கள் உயிரற்ற ஜடமாகிவிட்டதம்மா
நீ இல்லா சொர்ணகிரியும் - உன் முற்றத்து
ரோஜா மலரும் உனக்காக
ஏங்கித் தவிக்குதம்மா.

என்றும் உம் நினைவில் வாழும்:
"சொர்ணகிரி"
50/2,கே.கே.எஸ்.வீதி,
கொக்குவில். (109259)
கணவர், பிள்ளைகள், மருமகன், பேர்த்தி, சகோதரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளின் கதவுகளைத் திறந்தவன்



**8**

யூலியன் அசாஞ்சே பற்றிய ஒரு விறு விறு தொடர்

அசாஞ்சே ஒருபுறம் ஹக்கிங் கச்சேரி நடத்திக்கொண்டிருந்தாலும், மறுபுறத்தில் சிறுவயதில் இழந்துவிட்ட குடும்பப் பாசத்துக்காகத் தொடர்ந்தும் ஏங்கிக்கொண்டேயிருந்தான். மெல்போர்ண் பல்கலைக்கழகத்தில் கணினித்துறையில் பயின்று கொண்டிருந்தபோது, யூலியனின் காதல் ஓர்மோன்கள் துள்ளிக்குதித்து விளையாடின. விளைவு? காதலி ஒருவரின் அன்புக்கு அடிமையாகவேண்டிய நிலை யூலியனுக்கு வந்தது. ஒருபுறம் கணினி மூலமான சாமர்த்திய இணைய உள்நுழைவுகளை நிகழ்த்திக்கொண்டே காதல் உலகிலும் யூலியன் 17 வயது முதல் சஞ்சரிக்கத் தொடங்கினான்.

தன்னுடைய ஹக்கிங் நடவடிக்கைகளுக்கு வசதியாகவும், காதலியின் அன்பினில் முழுமையாக நனைவதற்காகவும் தனிவீட்டினில் யூலியன் வசிக்கத் தொடங்கினார். யூலியனுக்கும் அவரது காதலிக்கும் இடையிலான அன்பின் விளைவாக அவர்களுக்கு டானியல் என்ற ஆண் குழந்தையும் கிடைத்தது. ஆனாலும் விதி மீண்டும் யூலியனின் வாழ்வில் விளையாடியது. தன் காதலியையும் மகனையும் யூலியன் பிரியுமளவுக்குக் குடும்பத்தில் சச்சரவுகள் தோன்றின. தமது குழந்தையின் நல்வாழ்வுக்காக விவாகரத்துவரை செல்லாமல் யூலியன் தம்பதிகள் மனமொத்துப் பிரிந்து செல்ல முடிவெடுத்தனர். விழிநீர் கசிந்தொழுக, தன் துணையையும் குழந்தையையும் யூலியன் பிரிந்து சென்றான். வேறு பெண்களோடும் யூலியனுக்குத் தொடர்புகள் இருந்தமையாலேயே அவர்களது குடும்ப வாழ்வு விரிசலடைந்து. வெகு விரைவிலேயே பிரிய வேண்டிய சூழல் உருவானதாக யூலியனது நண்பர்கள் கூறுகின்றனர். யூலியன் விட்ட இந்தத் தவறுகள் இன்னமும் அவனைப் பின்தொடர்கின்றன. யாரலும் அசைக்க முடியாத யூலியனை இந்தப் பலவீனமே எதிரிகளின் வலைகளில் அவனை மாட்டியும் விடுகின்றது.

யூலியன் தன் வாழ்வில் வாங்கிய இந்த மரண அடியால் மிக அதிகமாகவே நிலைகுலைந்து போனான். எதிலும் பற்றில்லாதவன் போல் நடந்து கொண்டான். இதனால் தன்னுடைய பாதுகாப்பு விடயத்திலும் அலட்சியமாகவே யூலியன் நடந்து கொண்டான். மதுபானசாலைகளிலேயே தன்னுடை முழுநேரத்தையும் செலவிட்டான். யூலியனைப் பார்க்க வேண்டுமானால் நகரில் உள்ள பிரபலமான மதுபானசாலைக்குப் போனாலே போதும் என்ற அளவுக்கு நிலைமை கட்டுமீறிப் போனது. இதைவிட்டால் யூலியனை வீழ்த்த வேறு சந்தர்ப்பம் கிடையாது என்பதை உணர்ந்து கொண்ட அவுஸ்திரேலியப் பொலிஸ் அசாஞ்சே மீது எதாவது பயங்கரமான வழக்கொன்றைத் தொடுப்பதற்கு ஆயத்தமானது. அதை விடவும் அவுஸ்திரேலியாவில் தம் இருப்புக்கு அசாஞ்சே ஆப்பு வைத்துவிட்ட ஆத்திரத்தில் நோர்டெல் நிறுவனமும் யூலியனைப் பழி வாங்கத் துடித்துக் கொண்டிருந்தது. மூன்று தடவைகள் யூலியனைக் கொல்வதற்கான முயற்சிகள் நடத்தப்பட்டன. இதற்கு அவுஸ்திரேலியப் பொலிஸாரின் மறைமுக ஆதரவும் இருந்தது. அத்துடன் கொலையாளிகளுக்கு ஆதரவாக யூலியனின் நடமாட்டத்தை வேவு பார்த்துச் சொல்லும் நடவடிக்கையையும் பொலிஸ் செய்து கொடுத்தது.

ஆனாலும் அதிர்ஷ்டவசமாக யூலியனுக்கு வைத்த குறியில் வேறு நபர்களே மாட்டிக்கொண்டனர். தன் மீதான கொலை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்களில் - அதற்குச் சற்று முன்னர்தான் அந்த இடங்களில் இருந்து - யூலியன் வெளியேறியிருந்தான். அது தன் மீதான தாக்குதலை முன் கூட்டியே அறிந்ததால் அல்ல. மாறாக எல்லை மீறிய போதை காரணமாக அந்த இடங்களில் இருந்தவர்களால் அவன் அப்புறப்படுத்தப்பட்டிருந்தான். ஆயினும் மூன்றாவது முயற்சியாக யூலியன் மீது செயற்கையான கார் விபத்து ஒன்று செட்டப் செய்யப்பட்ட போது, அதில் யூலியனின் நண்பன் ஒருவன் பரிதாபமாக உயிரிழந்தான் .

இந்த மரணம் யூலியன் மீளவும் தன்னிலைக்குத் திரும்ப வழிவகுத்தது. தன்னால் பிறர் உயிரிழப்பதை யூலியன் விரும்பியதில்லை. அதனால் அதிகாரத்தின் மீதுள்ளவர்கள் மீது அவனது ஆத்திரம் திரும்பியது.

குடும்பம் என்ற உறவுநிலை கடைசிவரைக்கும் எட்டாக்கனியாக மாறிப் போனதாலும் அவுஸ்திரேலியப் பொலிஸாரின் தொடர்ச்சியான கண்காணிப்பாலும் , தாக்குதல்களாலும் நாட்டைவிட்டு வெளியேறும் முடிவுக்கு யூலியன் வந்தான். அத்துடன் இதுவரையும் தான் விளையாட்டுத் தனமாகக் கையில் எடுத்திருந்த ஹக்கிங் நடவடிக்கைகளை, உலக மக்களின் கண்களுக்குத் தெரியாமல் இருளில் நடந்து மறைந்த அக்கிரமங்களை வெளிப்படுத்தும் ஆயுதமாக மாற்றவும் யூலியன் முடிவெடுத்திருந்தான்.

ஹக்கிங் செய்வதற்கு போது இணையங்களில் மறைந்து கிடந்த பயங்கரங்களும் நண்பனின் மறைவுமே யூலியனை மாற்றியிருந்தன.எனவே தன் எண்ண அலைகளை ஒத்த நபர்களைக் கண்டறியவும், பாதுகாப்பை உறுதி செய்யவும் யூலியன் அவுஸ்திரேலியாவை விட்டுப் பிரிந்து செல்ல ஏற்பாடானது. ஆனாலும் எந்த நாட்டுக்குச் செல்வதென யூலியனால் தீர்மானிக்க முடியவில்லை. இதனால் முதலில் ஒரு நாடோடி போன்று தன்னைப்போல இணையங்களின் இருள் கதவைத் திறக்க முனையும் எண்ணம் கொண்டவர்களைக் கண்டறிய எல்லா நாடுகளுக்கும் சுற்றுலாப் பயணியாக யூலியன் புறப்பட்டான்.

அந்தப் பயணமே உலகில் பல நாடுகள் புரிந்த அக்கிரமங்களை துகிலுரிக்க முதற் படியாக அமையப் போகின்றது என்பதை யூலியன் கூட அப்போதைக்கு அறிந்திருக்கவில்லை.

*(திரைகள் இன்னும் திறக்கும்)*

ஒளண்யன்


# அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோயில்
## உலகப் பெருமஞ்சத் திருவிழா

இன்று வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு வசந்த மண்டபப்பூசை இடம்பெற்று 6.45 மணிக்கு ஆயிரக்கணக்கான மின்சாரதீபங்களால் அலங்கரிக்கப்பட்ட நூற்றாண்டுப் பழைமை வாய்ந்த உலகப் பெருமஞ்சத்தில் முருகப் பெருமான் வீதிவலம் வரும் நிகழ்வும் விசேட மேளக் கச்சேரியும் இடம்பெறும்.

உலகின் எல்லாப்பாகத்திலுமிருந்து உலகப் பெருமஞ்சக் காட்சியை w.w.w.Inuvil kanthan, w.w.w sivan tv.com ஆகியவற்றின் நேரலையூடாக இரவு 6.30 மணி தொடக்கம் இரவு 9 மணிவரை பார்வையிடலாம். யாழ்.குடாநாட்டு அனைத்துப் பகுதிகளிலுமிருந்தும் பக்தர்கள் கலந்துகொள்ள விசேட பஸ்சேவைகள் இடம்பெறும். முருகப்பெருமான் அடியார்கள் அனைவரும் வந்து முருகனின் அருளைப் பெறுவீராக!



## விளம்பர அனுசரணை

**செ.சிற்சபேசன்** மணல், தூண் வகை, தரமான கொங்கிறீட் கல் போன்றவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவிலிருந்து எடுக்கப்பட்ட பூப்புனித, திருமண அழைப்பிதழ்கள், குங்குமச் சிமிழ்கள் ஆகியவற்றை மலிவாகப் பெற்றிட **கஜசங்கவி பிறிண்டர்ஸ்** 237, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

சொக்கட்டான் பந்தல், மணவறைக் கதிரைகளைப் பெற்றிட **குமார் பந்தல்,** இணுவில் மேற்கு.

ஓடு, செங்கல், சீற், சிமெந்து அனைத்தையும் பெற்றிட **ஆனந்தா கட்டடப் பொருள் விற்பனை நிலையம்** கே.கே.எஸ்.றோட், இணுவில்.

திருமண அழைப்பிதழ் காட்சியகம் **Mathy Colours அன் பிறிண்டர்ஸ்** முருகேசர் லேன், நல்லூர்.

(சி/57499920


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இஸ்ரேலின் ஆளும் தொழிலாளர் கட்சியின் முக்கிய தலைவரும், இராணுவ அமைச்சருமான ஈகூட் பராக் விலகியதையடுத்து, பிரதமர் பெஞ்சமின்நெட்டன்யாகூ (நடுவில்), தலைநகர் ஜெருசலேமில் அவசர அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு வருகிறார்.. (த)

# அணு ஆயுதம் தயாரிக்கும் வடகொரியாவுக்கு அழிவு

சியோல், ஜன. 20

''அரிய இயற்கை வளங்களைத் தனது அணு ஆயுதத் தயாரிப்புக்காக வடகொரியா தொடர்ந்து பயன்படுத்தி வந்தால் சீக்கிரம் அது அழிந்துவிடும்'' என்று தென்கொரியா உயரதிகாரி ஒருவர் எச்சரித்துள்ளார்.

தென்கொரியாவின் இயான் பியாங் தீவின் மீதான வடகொரியாத் தாக்குதலுக்குப் பின்னர் தென்கொரியப் பிரதமரிலிருந்து பல உயரதிகாரிகள் கடுமையான வார்த்தைகளைப் பிரயோகம் செய்துள்ளனர்.

எனினும், வடகொரியாவின் அழிவு குறித்து எவரும் வெளிப்படையாகக் கருத்துக் கூற வில்லை.

வடகொரிய அணு ஆயுதத் தயாரிப்புக் குறித்த ஆறு நாடுகள் பேச்சுகளில், தென்கொரியா தரப்பில் முக்கிய பேச்சாளராகப் பணியாற்றியவரும், தற்போது தென்கொரியாவின் தேசிய பாதுகாப்பு மற்றும் வெளியுறவு விவகாரங்களில் ஆலோசகராக இருப்பவருமான சுன் யுங் வூ அமெரிக்க இணையதளம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில்,

''இராணுவச் செலவுகளால் ஏற்படும் சுமையை அவர்களால் நீண்டகாலம் தாங்க முடியாது. ஏற்கனவே அங்கு வறுமை உள்ளது. அவர்கள் பெருமிதமாக நினைக்கும் இராணுவ வலிமை, அணு ஆயுதங்கள், இரசாயன ஆயுதங்கள் ஆகியவையே அவர்களின் அழிவுக்கு குறுக்கு வழியாக அமைந்துவிடும்'' என்று தெரிவித்துள்ளார்.

கடந்த 1990களில் இயற்கைப் பேரிடர்கள், தவறான நிர்வாகம் ஆகியவற்றால் வடகொரியப் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டது. (த)

# மியன்மார் பொருளாதாரத் தடையை உடன் நீக்குக

லொம்பாக்,ஜன. 20

''மியன்மார் மீதான பொருளாதாரத் தடைகள் கைவிடப்பட வேண்டும்'' என்று 'ஆசியான்' அமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் கூறியுள்ளனர்.

தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பான 'ஆசியான்' அமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை இந்தோனேசியாவின் லொம்பாக் தீவில் நடந்தது.

இதில் மியன்மாரின் ஜனநாயகம், தென்சீனக் கடலில் சீனாவுக்கும் பிற நாடுகளுக்கு மிடையில் நிலவிவரும் எல்லைப் பிரச்சினைகள் ஆகியவை முக்கிய விவாதப் பொருள்களாக எடுத்துக்கொள்ளப்பட்டன.

மியன்மார் மீது அமெரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து உள்ளிட்ட பல நாடுகள் பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. இதுகுறித்தும் இக்கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டது.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய மியன்மார் வெளியுறவு அமைச்சர் மார்டி நட்டலேகவா, ''மியன்மார் மீது சில நாடுகள் விதித்துள்ள பொருளாதாரத் தடைகளை உடனடியாக அல்லது விரைவில் நீக்க வேண்டும்.

தேர்தல் நடந்தமை, சூகியின் விடுதலை ஆகியவற்றுக்குப் பின்னும் இத்தடைகள் நீடிக்க வேண்டுமா என்பது குறித்து அந்நாடுகள் மறுபடியும் ஆலோசனை செய்யவேண்டும். அந்நாட்டில் வெளிப்படையான சாதகமான பேச்சுக்கள் நடக்க வேண்டும் என வலியுறுத்துகிறோம்'' என்றார். (த)

# பாகிஸ்தான் நடிகை மீது வழக்கு

லாகூர், ஜன. 20

இந்திய தொலைக்காட்சியின் பிக்பொஸ் ரியாலிட்டி ஷோவில் பங்கேற்ற பாகிஸ்தான் நடிகை வீணா மாலிக் மீது லாகூர் உயர் நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வீணா மாலிக் பிக்பொஸ் நிகழ்ச்சியின்போது இஸ்லாமிய நெறிமுறைகளுக்கு மாறான செயல்களைசெய்துள்ளார் எனக் கூறி கூடுதல் மாவட்ட செஷன் நீதிமன்றத்தில் லாகூரைச் சேர்ந்த மியான் முகமது இக்பால் என்பவர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சியில் வீணாமாலிக்கின்நெறிமுறையில்லாத செயல்களைப் பாகிஸ்தான் ஊடகங்கள் வெளியிட்டன. அவருக்கு எதிராகப் பொலிஸார் வழக்குப் பதிவுசெய்ய வேண்டும் என இக்பால் தனது மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

இதுதொடர்பான வாதங்களைக் கேட்ட பின்னர் இது குறித்து ஜனவரி 24ஆம் திகதிக்குள் கருத்துத் தெரிவிக்குமாறு ஷாலிமர் பொலிஸ்நிலையத் தலைவருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது. (த)

அறிவித்தல்
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி

அன்னதான சபையின் தைப்பூச அன்னதானம்





அம்பிகை அடியார்களே!
இன்று (20.01.2011)
வியாழக்கிழமை
நடைபெறவிருக்கும் தைப்பூசப் பெருவிழாவினை முன்னிட்டு அம்பாளைத் தரிசிக்க வரும் அடியார்களுக்கு வழமை போல் அன்னதானம் வழங்குவதற்கு எமது சபை சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளது.
அன்றையதினம் அம்பாளைத் தரிசிக்க வரும் அடியார்கள் அம்பாளைத் தரிசித்த பின் அன்னதான சபைக்கு சமூகம் தந்து அன்னதானத்திலும் பங்கு கொண்டு அம்பாளின் திருவருளினைப் பெற்றுய்யும் வண்ணம் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நிர்வாகம்,
அமுதசுரபி அன்னதான சபை.

2ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

(109490)

BLACK&DECKER
DEWALT

யாழ் நகரில்
இலவச பராமரிப்புச் சேவை முகாம்



பழைய உபகரணங்களிற்கான 25% விசேட மாற்றீட்டு விலைக்கழிவு

மின் வலு சக்தி உபகரணங்களுக்கு மட்டும்

- இலவச பரிசோதனையும் பராமரிப்புச் சேவையும்
- பழுதுபார்ப்புக் கட்டணத்தில் 50% தள்ளுபடி
- உதிரிப்பாகங்களின் விலைகளில் 25% தள்ளுபடி
- விசேட பரிமாற்றச் சலுகை
- மின் வலு சக்தி உபகரணங்களின் செயற்பாட்டை அவதானிக்கும் வாய்ப்பு
- சரியான மற்றும் பாதுகாப்பான பாவனைக்கு ஆலோசனைகள்

நந்தலால் இரும்பகம்
இல. 29, ஸ்டான்லி வீதி, யாழ்பாணம்.
2011 ஜனவரி மாதம் 19ம் 20ம் திகதிகளில்

சுந்தர்சன்
யாழ் வீதி, மானிப்பாய்.
2011 ஜனவரி மாதம் 21ம் 22ம் திகதிகளில்

மு.ப 9.00 முதல் பி.ப 4.00 வரை

இலங்கையில் ஏக விநியோகஸ்தர்
டெல்மேஜ் கொன்ஸ்ட்ரக்ஷன் புரடக்ட்ஸ் தனியார் நிறுவனம்
101, வினயாலங்கார மாவத்தை, கொழும்பு 10.
உடனடி அழைப்பு: 077 1095270

DELMEGE CONSTRUCTION PRODUCTS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானில் நிலநடுக்கம் புதுடில்லி வரை அதிர்ந்தது

கராச்சி,ஜன. 20

பாகிஸ்தானில் தென்மேற்குப் பகுதியில் தல்பாந்தின் நகரம் உள்ளது. இது ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் உள்ளது. நேற்று அதிகாலை 1.23 மணியளவில் தல்பாந்தின் நகரிலும், அதை சுற்றியுள்ள 50கிலோ மீற்றர் பகுதியிலும் பயங்கர நில நடுக்கம் ஏற்பட்டது. இதனால் வீடுகள் மற்றும் கட்டடங்கள் குலுங்கின. இந்த அதிர்வு புதுடில்லி வரை உணரப்பட்டது அப்போது நள்ளி ரவை கடந்து அதிகாலை நேரம் என்பதால் மக்கள் நன்றாக அயர்ந்து தூங்கி கொண்டிருந்தனர். படுக்கைகளில் இருந்து அவர்கள் கீழே தூக்கி வீசப்பட்டனர்.

இதனால், பயந்த மக்கள் திடுக்கிட்டு விழித்து எழுந்தனர். நிலநடுக்கம் என்பதை உணர்ந்த அவர்கள் அலறியடித்தபடி வீடுகளில் இருந்து வெளியேறி தெருக்களில் கூடினார்கள். இதை தொடர்ந்து அப்பகுதியில் பதட்டமும் பரபரப்பும் ஏற்பட்டது. பீதியில் உறைந்த மக்கள் கொட்டும் பனியையும் பொருட்படுத்தாது விடிய விடிய வீதிகளில் தங்கி இருந்தனர்.

இதற்கிடையே, பாகிஸ்தானில் 7.2 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் பதிவாகி இருப்பதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. பாகிஸ்தான் மாகாணத்தில் உள்ள ஈரான் நகரை மையமாக வைத்து இந்த பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டதாகப் பாகிஸ்தான் வானிலை மையம் அறிவித்துள்ளது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விவரம் மற்றும் உயிர்ச்சேதம் போன்றவை வெளியிடப்படவில்லை.

பாகிஸ்தானில் ஏற் பட்ட நிலநடுக்கம் இந்திய தலைநகர் டெல்லியிலும் உணரப் பட்டது.

(த)

## சர்வதேச கடலில் கடந்த ஆண்டு 1,181 கப்பல்கள் கடத்தப்பட்டன

லண்டன்,ஜன. 20

கடந்தாண்டில் மட்டும், சர்வதேச கடற்பகுதியில் 1,181 கப்பல்கள் கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டுள்ளன. அவற்றில் பெரும்பான்மை யான கடத்தல்கள், சோமாலியக் கடற்கொள்ளையர்களால் நிகழ்த்தப்பட்டவை என்பது தெரியவந்துள்ளது.

பிரிட்டன் தலைநகர் லண்டனை மையமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச கடற்பகுதி கண்காணிப்புக் குழு, சமீபத்தில் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது, கடந்தாண்டு, சர்வதேச கடற்பகுதிகளில் கடற் கொள்ளையர்களால் 1,181 கப்பல்கள் கடத்தப்பட்டுள்ளன. இவற்றில் 49ல் இருந்து 52 வரையிலான கப்பல்கள் சோமாலிய கடற் கொள்ளையர்களால் கடத்தப்பட்டவை. 445 முறை கப்பல்கள் மீது கடத்தல் முயற்சி மற்றும் தாக்குதல்கள் நடத்தப் பட்டுள்ளன. தென்சீன கடலில் 2009யை விட 2010ஆம் ஆண்டில் இரண்டு மடங்கு கப்பல் கடத்தல் அதிகரித்துள்ளது. கடந்தாண்டில் 31 கப்பல்கள் கடத்தப்பட்டுள்ளன.

கடற்கொள்ளையர்கள் கேட்ட பணத்தை கொடுத்து 1,016 கப்பல்கள் மீட்கப்பட் டன. இன்னும் அவர்களிடம் 28 கப்பல்களும், 638 பணையக் கைதிகளும் இருக்கின்றனர்.

(த)

## இஸ்ரேல் ஆளும் கட்சி தலைவர் ராஜினாமா

ஜெருசலேம், ஜன. 19

இஸ்ரேலின் ஆளும் தொழிலாளர் கட்சியின் தலைவரும், இராணுவ அமைச்சருமான ஈகூட் பராக் திடீரென தலைவர் பதவியை விட்டு விலகி, தாம் புதிய கட்சி ஆரம்பிக்கப்போகிறார் என அறிவித்தார்.

இதனால் இஸ்ரேல் அரசில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. மத்திய கிழக்கு நாடுகளான இஸ்ரேலில் தற்போது வலது முன்னணி, தொழிலாளர் கட்சி ஆகியவற்றின் கூட்டணி ஆட்சி நடந்து வருகிறது.

பிரதமராக பெஞ்சமின் நெட்டன் யாகூ உள்ளார். இவரது அமைச்சரவையில் முக்கிய அங்கம் வகிப்பவரும், மூன்றாவது மிகப்பெரிய கட்சியான தொழிலாளர் கட்சியின் தலைவருமான ஈகூட் பராக் தனது கட்சியின் தலைவர் பதவியை இராஜிநாமா செய்துள்ளார்.

தற்போது இராணுவ அமைச்சராகவும் உள்ளார். 120 எம்.பிக்களைக் கொண்ட இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் தொழிலாளர் கட்சி 12 எம்.பிக்களை கொண்டுள்ளது.

(த)

## கூட்டு முயற்சி....



ஆஸ்திரேலியா சென்றிருந்த இங்கிலாந்து நிதி அமைச்சர் வில்லியம் ஹோக்,இராணுவ அமைச்சர் லியாம் பொக்ஸ் ,அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் மற்றும் உயரதிகாரிகள் ஆகியோர் சிட்னி நகரில் நடந்த விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## சிசுக்கள் கொலை பாகிஸ்தானில் அதிகம்

கராச்சி,ஜன 20

பாகிஸ்தானில் சிசுக் கொலைகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அண்மைக்காலமாகச் சிசுப் படுகொலைச் சம்பவங்கள் உயர்வ்டைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. திருமண பந்தத்திற்குப் புறம்பான முறையில் குழந் தைப் பெற்றுக் கொள்வது இஸ்லாமியச் சட்டத்திற்கு அமைய தண்டனைக்குரிய குற்றச் செயலாகும்.

இதனால் அநேகமான பெற்றோர் இவ்வாறு தவறான வழிகளில் பிறக்கும் சிசுக்களைக் கொன்று விடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இஸ்லாமியச் சட்டத்தின்படி திருமண பந்தத்திற்குப் புறம்பான வகையில் குழந்தைகளை பிரசவிக்கும் தாய்மாருக்கு உச்ச பட்சமாக மரண தண்டனை விதிக்கப்படலாம் என குறிப்படப்படுகிறது.

கடந்த ஆண்டில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிசுக்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும், இதில் பெரும்பான்மையான சிசுக்கள் பெண் குழந்தைகள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(த)

# 1.5 தொன் தங்கத்துடன் தப்பிய ஜனாதிபதி

## டுனிசியாவில் சம்பவம்

பரிஸ்,ஜன 20

டுனிசியாவிலிருந்து பதவி விலகிய ஜனாதிபதி பென் அலி 1.5 தொன் எடையுடைய தங்கத்துடன் நாட்டிலிருந்து வெளியேறியுள்ளதாக பரான்ஸ் புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளதாகப் பிரான்ஸின் லா மொன்டே பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

நாட்டின் சொத்துக்களை சுரண்டியதாக குற்றம் சுமத்தப்பட்ட பென் அலிக்கு எதிரான பாரிய ஆர்ப்பாட்டங்களையடுத்து அவர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு தனது குடும்பத்தினருடன் சவூதி அரேபயாவுக்கு விமானத்தில் தப்பிச் சென்றமை குறிப்படத்தக்கது.

23 வருடங்களாக ஆட்சியிலிருந்த பென் அலி , நாட்டிலிருந்து வெளியேறும் போது 1.5 தொன் தங்கத்துடன் தப்பச் சென்றதாகவும் கடந்த வாரம் பென் அலியின் இரண்டாவது மனைவி லைலா ட்ராபெல்ஷி, டுனிசிய மத்திய வங்கியிலிருந்து தங்கப் பாளங்களை மீளப் பெற்றதாகவும் பிரான்ஸ் புலனாய்வுத் துறையினர் பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கலஸ் சர்கோஸிக்குத் தெரிவித்துள்ளனர்.

மத்திய வங்கி ஆளுநர் ஆரம்பத்தில் இதற்கு மறுத்த நிலையில் ஜனாதிபதி பென் அலி' தலையிட்டதையடுத்து அவரின் அழுத்தத்திற்குப் பணிந்ததாக அவர் கூறியுள்ளார்.

இத்தங்கத்தின் பெறுமதி சுமார் 6.5 கோடி அமெரிக்க டொலர்கள் (சுமார் 720 கோடி ரூபா) ஆகும்.

பென் பிரான்ஸுக்குச் செல்வதற்காகவே விமானத்தில் புறப்பட்டதாகவும் ஆனால் அவரை ஏற்றுக்கொள்ள பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கலஸ் சார்கோஸி மறுத்ததையடுத்து சவூதி அரேபியாவுக்கு விமானத்தில் தப்பிச் சென்ற தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(த)

## குவைத் மக்களுக்கு இலவச உணவு

குவைத்சிட்டி, ஜன. 20

ஐக்கிய அரபு நாடுகளில் ஒன்றான குவைத்தில் 11 லட்சத்து 20 ஆயிரம் மக்கள் உள்ளனர். எண்ணை வளம் மிக்க இந்த நாடு செல்வச் செழிப்புடன் திகழ்கிறது.

இந்த நிலையில் இந்நாட்டு மக்களுக்கு இலவச உணவு, ரூ.20 ஆயிரம் கோடி பண உதவி ஆகியன வழங்கப்படவுள்ளது.

இது அடுத்த ஆண்டு (2012) மார்ச் 31ஆம் திகதி வரை அதாவது 14 மாதங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. (த)

## உலக வங்கியிடம் கடன் முதலிடத்தில் உள்ள சீனா

அபவிருத்தியடைந்து வரும் நாடுகளில் ஒன்றான சீனா உலக வங்கியிடம் கடன் பெறுவதில் முதலிடத்தைப் பெற்றிருப்பதாக 'பினான்சியல் ரைம்ஸ்' நிறுவனம் தெரிவித்துள்ளது.

சீனாவை சேர்ந்த சீன அபிவிருத்தி வங்கி மற்றும் ஏற்றுமதி -இறக்குமதி வங்கி ஆகியவை முறையே கடந்த 2008ஆம், 2009ஆம் ஆண்டுகளில் 100 மில்லியன் டொலர் அளவிற்கு கடன் வாங்கியிருந்தன. தற்போது 2009ஆம், 2010ஆம் ஆண்டில் இவை 110 மில்லியன் டொலராக அதிகரித்துள்ளது.

மேலும் உலக வங்கியிடம் பெறப்படும் நிதி பெரும்பாலும் பல்வேறு இனங்களுக்காக செலவிடப்படுகிறது. குறிப்பாக எண்ணெய் வளத்தை மேம்படுத்த ரஷ்யா வெனின்சுலா மற்றும் பிரேசில் நாடுகளுடனும், உட்கட்டுமானத் துறை நுட்பத்திற்கு கானா மற்றும் அர்ஜென்ரீனா நாட்டினையும், மின் உற்பத்திக்கு இந்திய நிறுவனங்களுடனும் ஒன்றிணைந்து செயல்பட்டு வருகின்றன என உலக வங்கி தலைவர் றொபர்ட் ஜோலியாக் தெரிவித்துள்ளார். (த)

## பாப்பரசரால் குணமான கன்னியாஸ்திரி

பரிஸ்,ஜன 20

மரணம் அடைந்த பாப்பரசர் 2ஆவது ஜோன் போல் அருளால் நோயில் இருந்து மீண்டேன் என்று பிரான்ஸ் கன்னியாஸ்திரி தெரிவித்துள்ளார். கத்தோலிக்கக் கிறிஸ்தவ மதத்துக்குச் சேவை செய்து மரணம் அடைந்தவர்களின் தெய்வீக அருளால் பல அற்புதங்கள் நிகழ்வதாக நம்பப்படுகிறது. அது போன்று அற்புதங்கள் செய்பவர்களுக்கு அருளாளர் மற்றும் புனிதர் பட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில், மரணம் அடைந்த பாப்பரசர் 2ஆவது ஜோன் போல் அற்புதங்கள் நிகழ்த்தியதாக தகவல் வெளியாகிஉள்ளது.

அவரது அருளால் நோயில் இருந்து மீண்டு மறுபிறவி எடுத்ததாகக் கன்னியாஸ்திரி ஒருவர் தெரிவித்துள்ளார். பிரான்ஸ் நாட்டை சேர்ந்தவர் மேரிசிமோன் பயேரி (49). இவர் வைத்தியசாலையில் பணிபுரிந்து வந்தார். 4 ஆண்டுகளாக இவர் பக்கவாத நோயினால் அவதிப்பட்டு வந்தார். தலைமை கன்னியாஸ்திரி மேரி தோமஸ் அவரைப் பார்க்க வந்தார்.

அப்போது, மரணம் அடைந்த பாப்பரசர் 2ஆவது ஜோன் போல், பெயரைப் பென்சிலால் எழுதிப் பிரார்த்தனை செய்யும்படி கூறினார். அதன்படி மேரியும் எழுதி வந்தார். இந்த நிலையில் பாப்பரசர் 2ஆவது ஜோன் போல் இறந்த 2 மாதத்தில் அவர் குணம் அடைந்தார். பாப்பரசர் ஜோன் போலின் அருளாசியினால்தான் நான் நோயில் இருந்து மீண்டேன். இது எனக்கு மறுபறவி என அவர் தெரிவித்தார்.

மறைந்த பாப்பரசர் 2ஆவது ஜோன் போல் கடந்த மே 1ஆம் திகதி அருளாளர் பட்டம் வழங்கப்பட்டது.

(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சல் மூல வாக்களிப்பு இம்முறை குறைவு

கொழும்பு,ஜன. 20

இந்த முறை உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அஞ்சல் மூல வாக்களிப்பிற்காக விண்ணப்பிப்பதன் பொருட்டு நேற்று முன்தினம் முதல் இன்று வரை வாக்காளர் பெயர்பட்டியல் காட்சிப் படுத்தப்பட்டிருந்த போதும் குறைந்த விண்ணப்பங்களே கிடைத்துள்ளன.

கொழும்பு மாவட்டத்தில் 60 அஞ்சல் மூல வாக்களிப்பு விண்ணப்பங்களே கிடைத்துள்ளதாக தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

பொதுவாக ஏனைய தேர்தல்களின் போது கொழும்பு மாவட்டத்தில் சுமார் 5 ஆயிரம் விண்ணப்பங்கள் வரை கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, கம்பஹா மாவட்டத்தில் 80 விண்ணப்பங்களே கிடைத்துள்ளன.

இந்தநிலையில், கடந்த 14ஆம் திகதி கோரப்பட்ட அஞ்சல் மூல வாக்களிப்பு விண்ணப்ப கோரல் எதிர்வரும் 27ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. (த)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி பாஸ்கரன் குமுதினி (வவா)



மலர்வு
13 ★ 07 ★ 1976

உதிர்வு
31 ★ 01 ★ 2010

அன்புக்கு அணிகலனாய்
பாசத்தின் இருப்பிடமாய்
பொறுமையின் பொக்கிஷமாய்
சுமைதாங்கியாய் வாழ்ந்து
எமது இருதயத்தில் - என்றும்
அணையாத் தீபமாய் சுடர் வீசும்
எங்கள் தங்க அம்மாவே!
ஆண்டுகள் ஒன்று ஆனாலும்
உங்கள் அன்பு முகத்தை
மறக்கமுடியவில்லை - அம்மா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை
வேண்டுகின்றோம்.

கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.
தொ.பே. 0774745673 (109602) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### சோமசுந்தரம் கருணானந்தன் (கருணா)

315, நாவலர் வீதி, ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் தற்போது பிரான்ஸில் வசித்து வருமான சோமசுந்தரம் கருணானந்தன் 18.01.2011 செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும், பத்மாவதியின் (பேபி) அன்புக் கணவரும், அனோஜா, காண்டீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீதரன், ஸ்ரீஸ்கந்தராஜா, காலஞ்சென்ற ஸ்ரீநாதன் மற்றும் ஸ்ரீரஞ்சன், புவனேந்திரன், திருமதி சொக்கலிங்கம் சந்திராதேவி, ஜெயஸ்ரீ, திருமதி பத்மநாதன் விமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

102, அம்பலவாணர் வீதி,
யாழ்ப்பாணம்.
315, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (109491)

தகவல்:
சோ. புவனேந்திரன்(இந்திரன்-சகோதரன்),
திருமதி ச.சொக்கலிங்கம்(சகோதரி)

## மரண அறிவித்தல்



### திருமதி சந்திரா சிவகுருநாதன்

(ஓய்வுபெற்ற நிதியியல் உதவியாளர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், நுணாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்திரா சிவகுருநாதன் நேற்று (19.01.2011) புதன்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலம் சென்ற கணபதிப்பிள்ளை - இராசம்மா தம்பதியினரின் அன்பு மகளும், சிவகுருநாதன் அவர்களின் அன்பு மனைவியும், கந்தவனம் - சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகளும், செந்தூரன், தர்ஷன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ரஜிப்பிரியாவின் அன்பு மாமியாரும், யோகேஸ்வரி, இராசரத்தினம் காலஞ்சென்ற புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிதம்பரநாதன், சிவபாலநாதன், சிவயோகநாதன், சிவலோகநாதன், காலஞ்சென்றவர்களான சிவகுணநாதன், சிவராஜேஸ்வரி மற்றும் சிவயோகேஸ்வரி, சிவலோகேஸ்வரி, சிவனேஸ்வரி, சிவசக்தி, இளையதம்பி (மணியம்), ஐயம்பிள்ளை, இராசமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும் .

இந்த அறிவித்தலை உற்றார் , உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குருஸ்தான்
மட்டுவில் தெற்கு
(நுணாவில் சந்தி அருகில்
சாவகச்சேரி) (109609)

தகவல்:
சிவகுருநாதன் (கணவர்)
செந்தூரன், தர்ஷன் (மகன்மார்)
தொ.இல-0773185779, 021320[illegible]

## விழிப்புணர்வு கருத்தரங்கு

தென்மராட்சி, ஜன. 20

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆசிரியைகளுக்கான தாய்ப்பால் ஊட்டுவது தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு கடந்த திங்களன்று வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

யுனிசெவ் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இக் கருத்தரங்கில் சாவகச்சேரி சுகாதார திணைக்கள மேற்பார்வை குடும்பநல உத்தியோகத்தர்கள் கருத்துரைகளை வழங்கினர். (ஒ-207)

## தேவை

*சாரதி தேவை
(AD, அனுபவம் 3 வருடம்)
*தரம் ஆறில்(6) கல்வி கற்கும் மாணவிக்கு பிரத்தியேகமாகக் கல்வி கற்பிப்பதற்கு ஆசிரியர் தேவை
(விஞ்ஞானம், ஆங்கிலம், கணிதம்)

தொடர்புகளுக்கு
(109608) 0777722215

## வகுப்புகள்

German Swiss மொழிகள் German Swiss மொழி வகுப்புகள் தமிழ் மொழிபெயர்ப்புடன் Gothe Institutel இல் நடைபெறும் exam இற்கு ஏற்றவாறு நடைபெறுகின்றது.

10, Palaly Road, Jaffna.
(109621) T.P.0771604828

## தேசிய அடையாள அட்டை கண்டெடுப்பு

தென்மராட்சி சுட்டிபுரம் கண்ணகை அம்மன் ஆலயத்துக்கும் கொடிகாமத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் கட்டைக்காடு, முள்ளியவளையைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை பிறேமதாஸ் என்பவருடைய தேசிய அடையாள அட்டை சிறுதொகைப் பணத்துடன் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் மயூரா தொலைத்தொடர்பகம் அல்லைப்பிட்டி, கரவெட்டி என்னும் முகவரியில் பெற்றுக்கொள்ளவும்.

(சி-575018) தொடர்பு இல - 0212263209

## தவறிவிட்டது

கந்தரோடை, சுன்னாகம் என்னும் முகவரியையுடைய இராமதேவன் சசிவரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (741533510V) மற்றும் சாரதிப் பத்திரம் அடங்கிய பேஸ் சண்டிலிப்பாய்க்கும், மாதகலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரிக்குத் தொடர்புகொள்ளவும்.

**பெறுமதியான தகுந்த சன்மானம் வழங்கப்படும்.**

முகவரி:
இ.சசிவரன்,
முத்தட்டு மடலேன்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்

தொடர்பு - 0773068765,
0212224042,
0776337380
(109611)

## மணமகள் தேவை

பிரான்ஸில் பிரஜாவுரிமையுடைய (1984ஆம் ஆண்டு பூரம் நட்சத்திரம்) யாழ். இந்துகௌரவ மணமகனுக்கு அழகிய மணமகள் தேவை.

சீதனம் எதிர்பார்க்கப்படவில்லை
(109608) தொடர்பு - 0779063025

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

சுத்தம் செய்த புறொயிலர் இறைச்சி கிலோ 400
நல்ல இன சிவப்புமுட்டைக்குஞ்சு, புறொயிலர் குஞ்சு என்பன 21.01.2011 வழங்கப்படும்.
முன்கூட்டியே பதிவுசெய்யவும், கல்பேட்ஸ், முட்டை, கோழித்தீன் வகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் வியாபாரிகளுக்கு விஷேட கழிவுடன் விற்பனைக்குண்டு.

பிறின்ஸி போல்றி பாம்
இல.[illegible] [illegible] இ.[illegible]றர்தாஸ்,
யாழ்ப்பாணம் (சி-575014) தொ.இல - 0776095749


# NET CABS

நெற் கப்ஸ் சேவை.

அழையுங்கள்
0213202202 அல்லது
0775934168



திருமணக் கார், வான்கள் மிகவும் குறைந்த விலையில் வாடகைக்கு.
தரமான சேவை. (109497)


## கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் ஆலோசனைக் கூட்டம் 21.01.2011 வெள்ளி

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த உற்சவ பங்குனி உத்தர பொங்கல் விழா எதிர்வரும் 19.03.2011ஆம் ஆண்டு சனிக்கிழமை நடைபெறவுள்ளது. இது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் 21.01.2011 வெள்ளி மு.ப.10 மணிக்கு மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், திணைக்களத் தலைவர்கள், கிராம அலுவலர்கள், போக்குவரத்து உத்தியோகத் தர்கள் ஆகியோர் கலந்துகொண்டு பொங்கல் விழா சிறப்புற பல தரப்பட்ட ஆலோசனைகள் வழங்கி சிறப்பிப்பார்கள் என்பதை அறியத் தருகிறோம்.

(சி/575012) ஆலய பரிபாலன சபை.

## யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவுச் சிக்கன சேமிப்பு கடன்நிவிர்த்திச் சங்கம் (வ-து)

ஐம்பதாவது வருடாந்தப் பொதுக்கூட்டம்

இடம் - யாழ்.அரசினர் போதனா வைத்தியசாலை மருத்துவ கிளினிக் பகுதி
காலம் - 23.01.2011 ஞாயிற்றுக்கிழமை
நேரம் - காலை 9.00 மணி

தலைவர் - சி.பாக்கியலிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெறும்.

சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகம் தரும்வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர் - சி.பாக்கியலிங்கம்

(109615)


# UK STUDENT VISA

@ IELTS: Not Necessary
@ College Admission arranged
@ Bank Sponsors arranged
@ 100% Visa Success

SIC CENTER
734, Hospital Road, Jaffna.
Tel: 0776 209887 / 0777 767818

உங்கள் வியாபார நிறுவனத்தில் பிரச்சினையா?
நிறுவனத்தை லாபகரமாக்க, ஊழியர் ஊக்குவிப்புக் கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் மற்றும் ஆலோசனைகளுக்கு நாடுங்கள்



வியாபார முகாமைத்துவ
ஆலோசகர்கள்,
34, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்

தொடர்புகளுக்கு - 0212229757, 0775934168 (109496)


## கடை வாடகைக்கு - காணி குத்தகைக்கு

* அச்சுவேலி - பருத்தித்துறை பிரதான வீதியில் அச்சுவேலி பஸ் நிலையத்தில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் மூன்று கடைகள் வாடகைக்கு உண்டு.
* கடைகளுக்கு அண்மையில் வீதியோரமாக 18 பரப்புக்காணி நீண்டகால குத்தகைக்கு உண்டு.

தொடர்புகள்:
0215212431, 0750424360

## மணமகள் தேவை

கண்டி நகரைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல தனியார் நிறுவனத்தில் பிராந்திய முகாமையாளராக (Area Sales Manager) பதவி வகிக்கும் 31 வயது மணமகனுக்கு மணமகளை எதிர்பார்க்கிறோம்.

தொடர்புகளுக்கு - 0712290030, 0773481963, 0771096827
(109605)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சரவணமுத்து சிவக்கொழுந்து



மட்டுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப் பிடமாகவும் கொண்ட சரவணமுத்து சிவக்கொழுந்து நேற்று (19.01.2011) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தங்கம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற சரவணமுத்துவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், பரமலிங்கம் மற்றும் மகாலிங்கம், இந்திராணி, வாமதேவன் ஆகியோரின் தாயாரும், மகேஸ்வரி, கனகரத்தினம், காலஞ்சென்ற பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.01.2011) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் கிழக்கு,
கனகம்புளியடி,
சாவகச்சேரி.

(சி-575025)

தகவல்:
செ.கோபாலகுலசிங்கம்,
(மருமகன், ஓய்வுபெற்ற CTB சாரதி)

## திருமதி தம்பிராசா மனோன்மணி



ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் நீர்வேலி மேற்கு, மாசுவனை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட தம்பிராசா மனோன்மணி நேற்று (19.01.2011) புதன்கிழமை இறைபத மடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகேந்திரம் - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுவாமிநாதர் - தங்கமுத்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற தம்பிராசாவின் அன்பு துணைவியும், சிவனேஸ்வரி (நீர்வேலி), அழகேஸ்வரி (லண்டன்), சகுந்தலாதேவி (கனடா), பத்மநாதன் (பிரான்ஸ்), பரராஜசிங்கம் (ஆனந்தன் - பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.01.2011) வியாழக்கிழமை நீர்வேலி மாசுவனில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 1 மணிக்கு நீர்வேலி சீயாக்காடு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாசுவன் சந்தி.

(109347)

தகவல்:
தவராசா

## மயில்வாகனம் சிதம்பரநாதன்



இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சிதம்பரநாதன் நேற்று (19.01.2011) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - யோகம்மா தம்பதியரின் மகனும், இராஜேஸ்வரி (வவி)யின் கணவரும், சரஸ்வதி, கேமாவதி ஆகியோரின் சகோதரனும், ஜனார்த்தனன், ஜசோதை, பரணீதரன் (கட்டுறு பயிற்சி ஆசிரியர், இணுவில் மத்திய கல்லூரி), ஜீவகநாதன் (மாணவன், விஞ்ஞானபீடம், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.01.2011) வியாழக்கிழமை மு.ப 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மாயனத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விக்னேஸ்வரா வீதி,
இணுவில் தெற்கு,
சுன்னாகம்.

(109620)

தகவல்:
குடும்பத்தினர்.

## மாட்டைக் கடத்தி வந்த இருவர் இராணுவத்திடம் சிக்கினர்

யாழ்ப்பாணம், ஜன. 20

கொழும்புத்துறை பகுதியில் இருந்து மாட்டைக் கடத்தி வந்த இருவர் இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டு யாழ். பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 5.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

சந்தேகத்துக்கு இடமான வகையில் மாடு ஒன்றை கொண்டு சென்ற இருவரை கணக்கர் சந்தியில் நின்ற இராணுவத்தினர் வழிமறித்து விசாரித்தனர்.

இருவரும் தடுமாறியவாறு முரண்பட்ட தகவல்களைக் கூறியதை அடுத்து இராணுவத்தினர் அவர்களை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (ஓ-10-23)

## தேசிய குருதிப் படையில் அங்கத்துவராக சேரலாம்

யாழ்ப்பாணம், ஜன. 20

நாரஹேன்பிட்டியைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் தேசிய குருதி மாற்றுச் சேவையின் ஓர் அங்கமாக தேசிய குருதிப் படை (National Blood Force) ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இலங்கையின் சகல மாவட்டங்களிலுமுள்ள இரத்த வங்கிகளின் கீழ் இந்த அமைப்பு செயற்படவுள்ளது.

ஐந்து தடவைகளுக்கு மேல் தன்னார்வக் குருதிக் கொடையாளர்களாக இரத்த தானம் செய்த சகலரும் இந்த அமைப்பில் அங்கத்தவர்களாக சேரலாம் எனவும் இதற்கான விண்ணபப்பபடிவங்களை சகல இரத்த வங்கிகளிலும் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் ஐந்து தடவைகளுக்கு மேல் தன்னார்வக் குருதிக் கொடையாளர்களாக இரத்த தானம் செய்தவர்களுள் மேற்படி தேசிய குருதிப் படையில் அங்கத்தவர்களாக சேர விரும்புபவர்கள் விரைவாக விண்ணப்பப் படிவங்களை அருகிலுள்ள இரத்த வங்கியில் பெற்று பூர்த்திசெய்து கையளிக்குமாறு வட பிராந்திய இரத்த வங்கிகளின் கொத்தணிப் பொறுப்பாளர் வைத்திய கலாநிதி இ. சிவசங்கர் அறிவித்துள்ளார். (ஓ)

## படையினர் எல்லை விஸ்தரிப்பு

தென்மராட்சி பிரதேச படையினரின் கட்டமைப்பு எல்லைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

52ஆவது படைப்பிரிவு தென்மராட்சி, வடமராட்சி பிரதேசங்களை உள்ளடக்கியதாகவும்522ஆவது படையணி கொடிகாமத்தில் இருந்து எழுதுமட்டுவாழ் வரையிலும்

5 2 3 ஆ வ து பிரிவு கொடிகாமத்திலிருந்து கைதடி வரையிலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. (ஓ-207)

# மரண அறிவித்தல்கள்

## தங்கராசா சுரேந்தினி



நிற்சாமம், சங்கானையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா சுரேந்தினி நேற்று (19.01.2011) புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கதிரவேலு தங்கராசா - புனிதவதி தம்பதியரின் அன்பு மகளும், சுபாசினி, சுபாதரன் (சுதன் தச்சுத் தொழிலகம்), சியோ (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தமிழ்ச்செல்வன், ரட்ணஜோதி, ஜெசிந்தா ஆகியோரின் மைத்துனியும், டினோஜன், டிலக்ஷி, மலரோன், சாருஷா, தேனுஜா ஆகியோரின் சித்தியும் நிலக்ஷன், சுலக்ஷன் ஆகியோரின் அத்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.01.2011) வியாழக்கிழமை நிற்சாமம் சங்கானையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 11 மணியளவில் விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிற்சாமம்,
சங்கானை.

(சி-575021)

தகவல்:
குடும்பத்தினர்,
உறவினர்.

## திருமதி தம்பிராசா திலகவதி

காரைநகர், தங்கோடையைப் பிறப்பிடமாகவும், வேம்படி காரைநகரில் வசித்தவரும் தற்போது கனடாவில் வசித்தவருமான திருமதி தம்பிராசா திலகவதி நேற்று (19.01.2011) புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - காமாட்சி தம்பதியினரின் மருமகளும், தம்பிராசாவின் (கனடா) அன்பு மனைவியும், கனடாவில் வசிப்பவர்களான உதயகுமார், உதயகுமாரி, வசந்தகுமாரி, மோகன், ரஜனி, காலஞ்சென்ற கிருஷ்ணகுமாரி ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

94, UPPER HUMBER DRIVE,
GTOBICORE, ONTARIO,
M9W7B8.
T.P - 0014162130566

(சி-575024)

தகவல் :
கணவர், பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்



## இராமலிங்கம் சிவசோதி

விடத்தல்பளை, உசனைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் பாரிஸை வ்சிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சிவசோதி நேற்று (19.01.2011) புதன் கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் இராமலிங்கம் - தவமணி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும், சண்முகம் - சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மருமகனும், சந்திராவின் பாசமிகு கணவரும், ஷெலினின் (பிரான்ஸ்) அன்புத் தந்தையாரும், தெய்வநாயகி (ரதி), பூபாலசிங்கம் (பிரான்ஸ்), சிவானந்தசோதி (கனடா), சிவபாதம் (பிரான்ஸ்), நித்தியானந்த சோதி (கனடா), சிறீபாஸ்கரன் (பிரான்ஸ்) ரங்கநாயகி (கனடா) காலஞ்சென்ற ஜெயசோதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், அழகராசா, பேபி (பிரான்ஸ்), நல்லமலர் (கனடா), கண்ணா (பிரான்ஸ்), கலாஜோதி (கனடா), ஜெவீந்திரன் (கனடா), ஆகியோரின் அன்பு மைத்துனரும், நிதர்சன் (பிரான்ஸ்), டயல்சன் (அபான்ஸ் - நெல்லியடி), நிதர்சினி, சோபினா, கேதீஸ்வரன், அஸ்வின் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், டிலக்சன் (பிரான்ஸ்), டெனுசியன் (பிரான்ஸ்), டியூட்டன் (பிரான்ஸ்), கயலி (கனடா), ஆர்த்தி (கனடா), அர்ஜன் (கனடா) அக்ஷன் (கனடா), சௌமியா (பிரான்ஸ்), இலக்கியா (பிரான்ஸ்), ஐஸ்வரியா (பிரான்ஸ்) ஆகியோரின் பெரியதந்தையாருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

பருத்தித்துறை வீதி,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

தொ.இல - 0213205459, 0776450332
T.P - 0033666643862, 003314591218l.

(சி-575023)

தகவல்:
ரி.அழகராசா
(மைத்துனர்).

# நீங்காத நினைவுகளுடன்

3ஆம் ஆண்டில்

மண்ணில் 08 ★ 06 ★ 1931




மனதில் 22 ★ 01 ★ 2008

**சின்னையா இராசதுரை**

17ஆம் ஆண்டில்

மண்ணில் 26 ★ 08 ★ 1968



மனதில் 03 ★ 01 ★ 1994

**இராசதுரை இராசேஸ்வரன்**

திதி:20.01.2011

ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்ட உங்கள்
ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும்

நாவற்காடு,
அச்சுவேலி.

(109495)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடால், முர்ரே முன்னேற்றம்


நடால்

மெல்போர்ன், ஜன. 20

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரின் இரண்டாவது சுற்றுக்கு ரபேல் நடால், அன்டி முர்ரே, சோடர்லிங் டேவிட் பெரர் ஆகியோர் தகுதி பெற்றுள்ளனர்.

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டம் ஒன்றில் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் ஸ்பெய்ன் வீரரான ரபேல் நடால், பிரேஸில் வீரரான மார்கோஸ் டானியலை எதிர்கொண்டார்.

தனது அதிரடி ஆட்டம் மூலம் முதல் சுற்றை 6-0 என்ற கணக்கில் நடால் வெற்றிகொண்டார்.

இரண்டாவது சுற்றிலும் தனது அதிரடியைத் தொடர்ந்த ரபேல் நடால் 5-0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தபோது, காயம் காரணமாக மார்கோஸ் ஆட்டத்திலிருந்து விலகினார்.

இதனடிப்படையில், 6-0, 5-0 என்ற கணக்கில் நடால் வெற்றிபெற்று, இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

அதேவேளை, நடைபெற்ற இன்னொரு ஆட்டத்தில், தரவரிசையில் 5ஆவது இடத்தில் இருக்கும் இங்கிலாந்து வீரரான அன்டி முர்ரே, ஸ்லோவோக்கியாவின் கரோல் பக்கை எதிர்கொண்டார். முதல் இரண்டு சுற்றுகளையும் 6-3, 6-1 என்ற கணக்கில் முர்ரே கைப்பற்றினார். மூன்றாவது சுற்றில் 4-2 என்ற கணக்கில் முர்ரே முன்னிலையில் இருந்தபோது, கரோல் காயம் காரணமாக விலகினார். இதன் காரணமாக 6-3, 6-1, 4-2 என்ற செற் கணக்கில் முர்ரே வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

தரவரிசையில் 4ஆவது இடத்தில் உள்ள சுவிற்ஸர் லாந்து வீரரான ரோபன் சோடர்லிங், 6- 4, 6- 2, 6-2 என்ற நேர் செற் கணக்கில் இத்தாலியின் ஸ்டாரேஸை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு ஆட்டத்தில் தரவரிசையில் 7ஆவது இடத்திலிருக்கும் ஸ்பெய்ன் வீரரான டேவிட் பெரர், பின்லாந்து வீரரான ஜார்க்கோ நியமினெனை 6-4, 6-3, 1-6, 6-2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று, அடுத்த சுற்றுக்குள் நுழைந்தார்.

# முதல் ஆட்டத்திலேயே தோற்றார் இந்தியாவின் சானியா மிர்ஷா



மெல்போர்ன், ஜன. 20

ஆஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் போட்டியில் நேற்றுமுன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டம் ஒன்றில் இந்திய வீராங்கனையான சானியா மிர்ஷா, பெல்ஜியத்தின் ஜஸ்டின் ஹெனினிடம் தோல்விகண்டார்.

ஏழு தடவைகள் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவரும் தரவரிசையில் 13ஆவது இடத்தில் உள்ள வருமான பெல்ஜியம் வீராங்கனையான ஜஸ்டின் ஹெனினை, இந்திய வீராங்கனையான சானியா மிர்ஷா எதிர்கொண்டார்.

முதல் சுற்றில் சிறப்பாக விளையாடிய சானியா 7-5 என்ற கணக்கில் வென்றார். ஆனால் அடுத்து ஆடிய இரண்டு சுற்றுகளையும் சானியா இழந்தார்.

இறுதியில் 7-5, 3-6, 1-6 என்ற கணக்கில் சானியா, ஜஸ்டின் ஹெனினிடம் தோல்வியடைந்தார்.

சானியா மிர்ஷா ஆஸ்திரேலிய ஓபன் ஒற்றையர் பிரிவில், 2005 மற்றும் 2008ஆம் ஆண்டுகளில் 3ஆவது சுற்று வரை முன்னேறினார். 2009ஆம் ஆண்டில் கலப்பு இரட்டையர் பிரிவில் மகேஷ் பூபதியுடன் இணைந்து சம்பியன் பட்டத்தை வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# மூன்றாவது சுற்றில் முன்னணி வீராங்கனைகள்


கரோலின் வொஸ்னியாக்கி

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்கள் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டங்களில், முன்னணி வீராங்கனைகளான கரோலின் வொஸ்னியாக்கி, வீனஸ் வில்லியம்ஸ், ஜஸ்டின் ஹெனின், மரியா ஷரபோவா ஆகியோர் வெற்றிபெற்று மூன்றாவது சுற்றுக்குத் தெரிவாகினர்.

நேற்று நடைபெற்ற இரண்டாவது சுற்று ஆட்டம் ஒன்றில், தரவரிசையில் முதலிடம் வகிக்கும் டென்மார்க்கின் கரோலின், 6-1, 6-0 என்ற செற் கணக்கில், அமெரிக்க வீராங்கனையான வனியா கிங்கை வெற்றிகொண்டார்.

தரவரிசையில் 5ஆவது இடத் திலிருக்கும் வீனஸ் வில்லியம்ஸ், 6-7, 6-0, 6-4 என்ற செற் கணக்கில் சந்ராவை வீழ்த்தினார்.

தரவரிசையில் 13ஆவது இடத்திலிருக்கும் பெல்ஜியம் வீராங்கனையான ஜஸ்டின், 6-1, 6-3 என்ற செற் கணக்கில் இங்கிலாந்து வீராங்கனையான எலீனாவை வெற்றிகொண்டார்.

அதேவேளை நடைபெற்ற இன்னொரு ஆட்டத்தில், தரவரிசையில் 16ஆவது இடத்திலிருக்கும் ரஷ்ய வீராங்கனையான மரியா ஷரபோவா, 7-6, 6-3 என்ற செற் கணக்கில் பிரான்ஸ் வீராங்கனையான விர்ஜினியை வீழ்த்தி மூன்றாவது சுற்றுக்குள் நுழைந்தார்.

# அனா அதிர்ச்சித் தோல்வி; கிளிஸ்டர்ஸ் அசத்தல்!


அனா

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் நேற்று மாலை நடைபெற்ற பெண்கள் பிரிவு முதல் சுற்று ஆட்டங்களில், கிம் கிளிஸ்டர்ஸ், சஹார் பீர் ஆகியோர் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேற, அனா இவனோவிக் அதிர்ச்சித் தோல்வி கண்டுள்ளார்.

நேற்று மாலை நடைபெற்ற பெண்கள் பிரிவு ஆட்டம் ஒன்றில் தரவரிசையில் மூன்றாவது இடத்திலிருக்கும் பெல்ஜியம் வீராங்கனையான கிம் கிளிஸ்டர்ஸ், ரஷ்யாவின் டினாரா சபீனாவை 6-0, 6-0 என்ற கணக்கில் தோற்கடித்தார்.

இன்னொரு ஆட்டத்தில் தரவரிசையில் 12ஆவது இடத்தில் இருக்கும் சஹார் பீர், பிரான்ஸின் மதில்டே ஜோஹன்சனை 6-1, 6-1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றார்.

மற்றொரு ஆட்டத்தில் தரவரிசையில் 20ஆவது இடத்தில் இருக்கும் செர்பிய வீராங்கனையான அனா இவனோவிக், 6-3, 4-6, 8-10 என்ற செற் கணக்கில் ரஷ்ய வீராங்கனையான எகரெரினா மாகரோவாவிடம் அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

# இந்தியக் கிரிக்கெட் சபைக்கு இறக்குமதி வரிச்சலுகை ரத்து

இந்திய கிரிக்கெட் சபை மற்றும் மத்திய அரசு இடையே மோதல் வலுத்துள்ளது. இந்தியக் கிரிக்கெட் சபை சார்பில் இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கான சுங்க வரி விலக்கு அதிரடியாக ரத்து செய்யப்பட்டுள்ளது. மத்திய விளையாட்டுத் துறை அமைச்சகத்தின் அங்கீகாரம் பெற, ஒவ்வொரு விளையாட்டு அமைப்பும் தங்களது தேர்தல் முறை, நிர்வாகிகளின் பதவிக் காலம், செலவு கணக்கு உள்ளிட்ட பல்வேறு விவரங்களை சமர்ப்பிக்க வேண்டும். ஆனால், இந்திய கிரிக்கெட் சபை தரப்பில் நிர்ணயிக்கப்பட்ட கால கெடுவுக்குள் எவ்வித தகவலும் அளிக்கப்படவில்லை. இதையடுத்து இந்திய கிரிக்கெட் சபையின் தேசிய விளையாட்டு அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டது. இனி, கிரிக்கெட்டின் தலைமை அமைப்பாக செயல்பட முடியாது. இந்திய கிரிக்கெட் சபை சார்பில் இந்திய அணியை தேர்வு செய்ய இயலாது.

தேசிய விளையாட்டு அமைப்பின் அங்கீகாரம் ரத்தானதை தொடர்ந்து பல்வேறு சலுகைகளை இந்திய கிரிக்கெட் சபை இழக்கிறது. இதன் ஒரு பகுதியாக இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்காக அளிக்கப்பட்ட சுங்க வரி விலக்கு ரத்து செய்யப்படுகிறது. இது, அடுத்த மாதம் தொடங்கவுள்ள உலகக் கிண்ணம்தொடரின் போது பெரும் சிக்கலை ஏற்படுத்தலாம். இத்தொடருக்கான விளம்பரத்துக்கு பயன்படுத்தும் பொருள்கள் மற்றும் கிரிக்கெட் உபரகரணங்கள் வெளிநாடுகளில் இருந்து தான் இறக்குமதி செய்யப்பட உள்ளன. தற்போது வரி விலக்கு ரத்தானதால், இந்திய கிரிக்கெட் சபைக்கு செலவு அதிகரிக்கும்.

இது குறித்து இந்திய கிரிக்கெட் சபை தலைமை நிர்வாக அதிகாரி ரத்னாகர் ஷெட்டி கூறுகையில், இந்திய கிரிக்கெட் சபை என்பது ஒரு தன்னிச்சையான அமைப்பு. அரசிடம் இருந்து எவ்வித நிதி உதவியும் பெறுவது இல்லை. ஆனாலும், கடந்த சில மாதங்களாக அரசிடம் பதிவு செய்ய வேண்டுமென, மத்திய விளையாட்டு துறை அமைச்சகம் நெருக்கடி கொடுக்கிறது. இதனை ஏற்பதில் இந்திய கிரிக்கெட் சபைக்கு உடன்பாடில்லை. ஐ.சி.சி உறுப்பினர் என்ற அடிப்படையில், இந்திய அணியை இந்திய கிரிக்கெட் சபை மட்டுமே தேர்வு செய்ய முடியும். சுங்க வரி விலக்கு ரத்து காரணமாக உலகக்கிண்ணம் தொடருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்றார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமனிலையில் முடிந்தது வெலிங்டன் டெஸ்ட்; 1-0 என்ற கணக்கில் தொடரை வென்றது பாக்.

வெலிங்டன், ஜன. 20

வெலிங்டனில் நடைபெற்று வந்த நியூஸிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி சமனிலையில் முடிந்துள்ளது. இதன் அடிப்படையில் பாகிஸ்தான் அணி, 2 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை 1-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

நியூஸிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 2 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்றுவந்தது.

முன்னர் நடந்து முடிந்த முதலாவது போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றது.

இந்நிலையில், கடந்த சனியன்று இரண்டாவது ஆட்டம் ஆரம்பமானது.

நியூஸிலாந்து அணி முதல் இன்னிங்ஸிற்காக 356 ஓட்டங்களையும், பாகிஸ்தான் அணி 376 ஓட்டங்களையும் சேர்த்தன.

பின்னர் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த நியூஸிலாந்து அணி, நேற்று முன்தினம் ஆட்ட நேரம் முடியும்போது, சகல விக்கெட்டுகளையும் இழந்து 293 ஓட்டங்களைச் சேர்த்தது.

நியூஸிலாந்து அணி 293 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம், பாகிஸ்தான் அணிக்கு 274 ஓட்டங்களை வெற்றியிலக்காக நிர்ணயித்துள்ளது.



நேற்றுத் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி, ஆரம்பத்தில் தடுமாற்றம் கண்டது.

ஆரம்ப வீரரான தௌபீக் உமர், ஓட்டம் எதுவும் பெறாமல் ஆட்டமிழந்தார். பின்னர் வந்த அஷார் அலியும் தனது பங்குக்கு 10 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்து சென்றார். அவரைத் தொடர்ந்து மற்றொரு ஆரம்ப வீரரான மொஹமட் ஹபீஸ் 32 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தார்.இவர் ஆட்டமிழந்தபோது பாகிஸ்தான் அணி, 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 42 ஓட்டங்களை மட்டுமே சேர்த்து இக்கட்டான நிலையில் இருந்தது.

எனி னும், பின்னர் இணைந்த யூனுஸ்கான் - மிஸ்பா உல் ஹக் ஜோடி, முதல் இன்னிங்ஸில் அசத்தியது போல இந்த இன்னிங்ஸிலும் தமது அசத்தல் ஆட்டத்தைத் தொடர்ந்தது.

சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த யூனுஸ்கான் 81 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்து சென்றார். அவரைத் தொடர்ந்து வந்த அஸாட் ஷாபீக் 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். பின்னர் அட்னன் அக்மல் களம் புகுந்தார்.

இறுதியில் பாகிஸ்தான் அணி, 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 226 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளை ஆட்ட நேரம் முடிவுக்கு வந்தது. இதனால் இந்த ஆட்டம் சமனிலையை எட்டியது.

மிஸ்பா உல் ஹக் 70 ஓட்டங்களுடனும், அட்னன் அக்மல் 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

நியூஸிலாந்து அணி சார்பாக பந்துவீச்சில், மார்டின், சௌத்தி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை யும், வெற்றோரி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக பாகிஸ்தான் வீரரான மிஸ்பா உல் ஹக் தெரிவுசெய்யப்பட்டார்.


இந்தப் போட்டி சமனிலையில் முடிந்தமையாலும், பாக். ஏற்கனவே ஒரு வெற்றியைப் பெற்றிருந்தமையாலும் இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை, 1-0 என்ற கணக்கில் பாகிஸ்தான் அணி கைப்பற்றியது.

# பாகிஸ்தான் அணியில் இருந்து யூஸுப் நீக்கம்

எதிர்வரும் உலக கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கான பாகிஸ்தான் அணியில் சிரேஷ்ட துடுப்பாட்ட வீரர் மொஹமட் யூஸுப் சேர்க்கப்படவில்லை.

இச்சுற்றுப்போட்டிக்கான 15 பேர் கொண்ட பாகிஸ்தான் அணி விபரம் நேற்று அறிவிக்கப்பட்டது. இப்பட்டியிலில் யூஸுப் இடம்பெறவில்லை. அதேவேளை அணித்தலைவர் நியமனம் குறித்த அறிவிப்பும் தாமதமாகியுள்ளது.

மொஹமட் யூஸுப் கடந்த உலக கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளிலும் விளையாடியவர் என்பது குறிப்படத்தக்கது. 281 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் விளையாடிய அனுபவம் கொண்ட அவர், கடந்த வருடம் தான் விளையாடிய 10 ஒருநாள் போட்டிகளில் ஒரேயொரு அரைச்சதம் மாத்திரமே பெற்றிருந்தார்.




2007 ஆம் ஆண்டு உலக கிண்ண சுற்றுப்போட்டியில் விளை யாடிய வீரர்களில் 7 பேர் மாத்திரமே இம்முறையும் அணியில் இடம்பெற்றுள்ளனர்.

இச் சுற்றுப்போட்டி நடைபெறும் இந்திய உப கண்டத்து நாடுகளின் ஆடுகளங்கள் சுழற்பந்துவீச்சுக்கு சாதகமானவை.

எனினும் 15 பேர் கொண்ட பாகிஸ்தான் அணியில் இரு விசேட சுழற்பந்துவீச்சாளர்கள் மாத்திரமே அப்துர் ரஹ்மான் சயீட் அஜ்மல் - சேர்க்கப்பட்டுள்ளனர். சொஹைப் அக்தார் உட்பட நான்கு வேகப்பந்துவீச்சாளர்கள் அணியில் இடம்பெற்றுள்ளனர்.

# உலகக் கிண்ணத் தொடருக்கான இங்கிலாந்து, தெ.ஆபிரிக்க, பாக். அணிகள் அறிவிப்பு

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கான இங்கிலாந்து, தென்னாபிரிக்க, பாகிஸ்தான் அணிகள் அறி விக்கப்பட்டுள்ளன.

தென்னாபிரிக்க அணியின் விக்கெட் காப்பாளரான மார்க் பௌச்சர், சகலதுறைவீரர் அல்பி மோர்கல் ஆகியோர் அணியில் சேர்க்கப்படவில்லை.

இதேவேளை, பாகிஸ்தான் அணியின் தலைவர் யார் என்று தெரிவிக்கப் படவில்லை. முன்னாள் அணித்தலைவர் முகமது யூசுப்புக்கு அணியில் இடம் கிடைக்கவில்லை.

இங்கிலாந்து அணி விவரம் வருமாறு:-


ஸ்டிரஸ் (அணித்தலைவர்) அன்டர்சன், இயன் பெல், டிம் பிரெஸ்னன், ஸ்ரூவர்ட் பிராட், போல் கொலிங்வூட், இயன் மோர்கன், கெவின் பீற்றர்சன், மேட் பிரையர், அஜ்மல் ஷாசாத், கிரேம் ஸ்வான், ஜேம்ஸ் டிரெட் வெல், ஜொனாதன் டிராட், லுக் ரைட், மைக்கல் யார்டி.

தென்னாபிரிக்க அணி விவரம் வருமாறு:-

ஸ்மித் (அணித்தலைவர்), ஜக் கலிஸ், ஹஷிம் ஆம்லா, டிவிலியர்ஸ், டுமினி, ஜோஹன் போத்தா, இங்ராம், மோர்னி மோர்கல், டேல் ஸ்ரெய்ன், இம்ரான் தாஹிர், வெய்ன் பார்னெல், சொட்சோபே, ராபன் பீற் றர்சன், மோர்னி வான் விக், பொப் டூ பிளெஸ்ஸிஸ்.

பாகிஸ்தான் அணி விவரம் வருமாறு:-

முகமது ஹபீஸ், அகமது ஷெசாத், யூனிஸ்கான், மிஸ்பா உல்-ஹக், உமர் அக்மல், அஸாத் ஷபீக், கம்ரன் அக்மல், சயித் அப்ரிடி, அப்துல் ரஸாக், அப்துல் ரஹ்மான், சயீத் அஜ்மல், சொயிப் அக்தர், உமர்குல், வஹாப் ரியாஸ், சொகைல் தன்விர்.



30 நாள்களே

உதயன் உலகக்கிண்ண கொண்டாட்டம் உங்களுடன்

உலகக்கிண்ணப் போட்டிகள்.
எதிர்பார்க்கின்றோம் உங்கள்
எழுத்துக்களை. பார்த்த அனுபவங்கள்.
ரசித்த போட்டிகள். எழுந்த
எண்ணங்கள். எழுதுங்கள்....
எழுதுங்கள்..... எழுதிக் குவியுங்கள்.
சிறந்ததற்கு உண்டு பரிசு .

"உலகக் கிண்ண வாசகர் கணை"
தபால் உறையின் இடது மேல் மூலைக்குறிப்பு.
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# உலகக் கிண்ண தென்னாபிரிக்க அணியில் பவுச்சர் இல்லை

உலகக் கிண்ணத் தொடருக்கான தென் ஆபிரிக்க அணியில் புதுமுக வீரர் இம்ரான் தாகிருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அனு பவ விக்கெட் காப்பாளரான பவுச்சர் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இந்தியத் துணைக் கண்டத்தில் உலக கோப்பை கிரிக்கெட் தொடர் அடுத்த மாதம் 18 ஆம் திகதி முதல் ஏப்ரல் 2 ஆம் திகதி வரை நடக்கிறது. இந்தியா, இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணி கள் இணைந்து நடத்தும் இத்தொடரில், மொத் தம் 14 அணிகள் பங்கேற்கின்றன. இதற்கான அணிகளை அறிவிக்க நேற்று கடைசி நாள்.

[illegible] பாகிஸ்தான் உள் ளிட்ட [illegible] அணிகளை ஏற்கனவே அறிவித்து இருந்தன. இந்நிலையில் தென் ஆபிரிக்கா, நியூசிலாந்து உள்ளிட்ட மற்ற அணிகளும் நேற்று 15 பேர்கள் அடங்கிய அணியை அறிவித்தன.

ஸ்மித்தை கப்டனாக கொண்டு, வழக்க மான வீரர்களுடன் அறிவிக்கப்பட்டுள்ள தென்ஆபிரிக்க அணியில் காயத்தால் அவதிப் படும் காலிஸ் சேர்க்கப்பட்டுள்ளார். பாகிஸ் தானில் பறந்து சமீபத்தில் தென்ஆபிரிக்க குடியுரிமை பெற்ற இம்ரான் தாகிர், போத்தா, பீட்டர்சன் ஆகிய 3 சுழற்பந்து வீச்சாளர்கள் அணிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். சகலதுறை ஆட்டக்காரர் இடத்தை டு பிளசிஸ் பிடித்துள்ளார். அனுபவ வீரரான பவுச்சர் நீக்கப்பட்டு டி வில்லியர்ஸ், வான் விக் இருவருக்கும் இடம் தரப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
20 ஜனவரி 2011 வியாழக்கிழமை

# இலங்கைத் தூதரை அழைத்துக் கண்டனம்; தேர்தலுக்காகக் காங்கிரஸ் நடத்தும் நாடகம்

## நெடுமாறனின் புதிய தகவல்

தஞ்சாவூர், ஜன. 20

இலங்கைத் தூதரை அழைத்து இந்திய வெளிவிவகார அமைச்சு கண்டனம் தெரிவித்த சம்பவம், தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்காக நடத்தப்படும் நாடகம் - என்று தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூரில் நேற்றுமுன்தினம் அவர் அளித்த பேட்டியின் விவரம் வருமாறு -

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர் வீரபாண்டியன் அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து, வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா இலங்கைத் தூதரை நேரில் வரவழைத்து கடும் எதிர்ப்பைத் தெரிவித்தார்.

கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டு வரும் நிலையில், தற்போது மத்திய அரசு எதிர்ப்பைத் தெரிவித்திருப்பது தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்காக நடத்தப்படும் நாடகமாகும். இந்த விடயத்தில் தமிழக முதல்வரும் மத்திய அரசுக்கு கடிதம் எழுதுவதோடு தனது கடமை முடிந்துவிட்டது எனக் கருதுகிறார்.

இந்தியக் கடல் எல்லைக்குள் வரும் இலங்கைக் கடற்படையினர் மீது நடவடிக்கை எடுக்காத இந்தியக் கடற்படை மீது நடவடிக்கை எடுக்குமாறு, மத்திய அரசிடம் முதல்வர் கருணாநிதி வலியுறுத்த வேண்டும்.

ஈழத் தமிழர்களுக்கும், தமிழக மீனவர்களுக்கும் எதிரான நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வரும் இலங்கைக்கு,



இராமேஸ்வரத்திலிருந்து கேபிள் மூலம் மின்சாரம் வழங்கப்படுகிறது. தமிழகத்தில் மின் பற்றாக்குறை நிலவும் நிலையில், இலங்கைக்கு மின் விநியோகம் செய்வது தமிழர்களுக்குச் செய்யும் மிகப் பெரிய துரோகமாகும். - இப்படி அவர் தெரிவித்தார்.

## ராஜினாமா செய்வதாக கூறவில்லை - அழகிரி

சென்னை, ஜன. 20

தி.மு.க. தென்மண்டல அமைப்புச் செயலர் பதவியையும், மத்திய அமைச்சர் பதவியையும் இராஜினாமா செய்வதாகத் தான் கூறவில்லை - என்று மத்திய அமைச்சர் அழகிரி தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் டில்லி புறப்படும் முன் சென்னை விமான நிலையத்தில் அழகிரி செய்தியாளர்களிடம் பேசியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இராஜினாமாச் செய்வதாக வெளியான தகவல்களுக்கு தி.மு.க. தலைவரும், தனது தந்தையுமான கருணாநிதி ஏற்கனவே பதிலளித்துவிட்டார் என்றும் அவர் தெரிவித்தார்.

## இறைவனின் மனதை ஆட்சி செய்யும் பெருமை தமிழுக்கு மட்டுமே உண்டு

இறைவனின் மனதையே ஆட்சி செய்யும் பெருமை தமிழ் மொழிக்கு உண்டு - என தருமபுர ஆதீனம் குமாரசாமி தம்பிரான் சுவாமிகள் தெரிவித்தார்.

நவரசம் கலை, அறிவியல் மகளிர் கல்லூரியில் 'முத்தமிழுக்கு முடிசூட்டு விழா' என்ற தலைப்பில் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் எனப் பல்வேறு பிரிவுகளில் தமிழின் பெருமை குறித்த பயிலரங்கம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் தருமபுர ஆதீன குமாரசாமி தம்பிரான் சுவாமிகள் பேசியவை வருமாறு -

முத்தமிழுக்கு முடிசூட்டும் விழா இன்றைய தலைமுறையினருக்கு தமிழின் பெருமைகளை எடுத்துரைக்கும் விழாவாக உள்ளது.

தமிழ்மொழியின் இலக்கியங்கள் பண்பட்ட மனிதர்களை உருவாக்குகிறது. பெண்கள் அனைத்துத் துறைகளிலும் முன்னேறி வருகின்றனர்.

ஆணும் பெண்ணும் அறிவியலிலும், ஆற்றலிலும் சமம் என்பதை நிரூபித்து வருகின்றனர். இறைவன் தன்னுடைய இடப்பக்கத்தில் அர்த்தநாரீஸ்வரராக 50 சதவீத இட ஒதுக்கீடு கொடுத்துப் பெண்களைப் பெருமைப்படுத்தியுள்ளான்.

ஏழிசையாய் இசைப்பயணம் இருக்கும் இறைவன், தமிழின் தேவாரம் திருவாசகப் பாடல்களைக் கேட்டு நடனமாடியிருக்கிறான். இறைவனின் மனதையே ஆட்சி செய்யும் பெருமை தமிழ்மொழிக்கு மட்டுமே உண்டு. - இப்படி அவர் தெரிவித்தார்.

# தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது குறித்து மஹிந்தவிடம் ஏற்கனவே பேசியுள்ளோம்

## மத்திய அமைச்சர் நாராயணசாமி வியாக்கியானம்

சென்னை, ஜன.20

இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் தாக்கப்படும் சம்பவம் குறித்து ஏற்கனவே இலங்கை ஜனாதிபதியுடன் பேசியுள்ளோம். அண்மையில் டில்லிக்கு மஹிந்த ராஜபக்ஷ வந்திருந்தபோது, அவரிடம் பிரதமர் மன்மோகன் சிங் இது குறித்துப் பேசி, தாக்குதல் சம்பவங்கள் நடக்காத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

- இவ்வாறு மத்திய அமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்றுமுன்தினம் முதலமைச்சர் கருணாநிதியை அவரது வீட்டில் சந்தித்துப் பேசிய அமைச்சர் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்ததார்.

அப்போது அவரிடம், சந்திப்பின் போது அரசியல் ஏதாவது பேசினீர்களா? தற்போது மத்திய அமைச்சரவையில் மாற்றம் என்றெல்லாம் செய்திகள் வருகின்றனவே என்ற கேள்விகளுக்கு அது பற்றி எனக்கொன்றும் தெரியாது என்று பதிலளித்தார்.

தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவது குறித்து என்ன கருத்துச் சொல்ல நினைக்கிறீர்கள் என்ற கேள்விக்கு அவர் பதிலளித்துக் கூறியவை வருமாறு -

இதுவொரு முக்கியமான பிரச்சினை. தமிழக மீனவர்கள் அடிக்கடி இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள், தாக்கப்படுகிறார்கள். இது சம்பந்தமாக தமிழக முதல்வர் இந்தியப் பிரதமருக்குப் பல கடிதங்களை எழுதி இலங்கை அரசுடன் பேசி இதுபோன்ற சம்பவங்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்.

அதன் அடிப்படையிலே டில்லிக்கு மஹிந்த ராஜபக்ஷ வந்திருந்தபோது, அவரிடம் பிரதமர் இதுகுறித்துப் பேசி இதுபோன்ற தாக்குதல் சம்பவங்கள் நடக்காத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இலங்கைக்கு வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவை அனுப்பி, அங்கு பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கான நிவாரணப் பணிகளைத் கண்காணிக்கவும், தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது குறித்துப் பேசவும் செய்தார் பிரதமர்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

# ஜெயலலிதாவை ஆதரிக்கிறேன் என்று சொல்லவில்லையே; சீமான் விளக்கம்

சென்னை, ஜன. 20

தமிழ் இனத்தை அழிக்க நினைக்கும் கருணாநிதி மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடாது என்று நான் சொன்னேன். அதற்காக நான் ஜெயலலிதாவை ஆதரிக்கிறேன் என்று அர்த்தமா? நான் அவரை ஆதரிக்கிறேன் என்று சொல்லவில்லையே?

- இவ்வாறு ஈழத் தமிழ் ஆதரவு அக்கினிப்புயலும் நாம் தமிழர் இயக்கத்தின் தலைவருமான சீமான் தெரிவித்துள்ளார்.

தமிழக முஸ்லிம் முன்னேற்றக்கழகத்தின் சார்பில் 'பாபர் மசூதியின் தீர்ப்பும், தேசிய அவமானமும்' என்ற தலைப்பில் திருச்சியில் கருத்தரங்கம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

கருணாநிதி ஊழல் செய்தார் என்று ஜெயலலிதா சொல்கிறார். ஜெயலலிதா ஊழல் செய்தார் என்று கருணாநிதி சொல்கிறார். நீங்கள் இரண்டு பேரும் ஊழல் செய்தவர்கள் என்று நாங்கள் சொல்கிறோம்.

இந்த நாட்டுக்குத் தேவையில்லை என்று நாங்கள் கூறுகிறோம். ஜெயலலிதா, கருணாநிதியை விட்டால் நாட்டைக் காக்க வேறு ஆளே இல்லையா? நாம் அனைவரும் ஒன்றிணைந்தால் புதிய அரசியல் மாற்றத்தைக் கொண்டுவர முடியும்.

தமிழினத்தை அழித்த காங்கிரஸ் கட்சியை தமிழகத்தில் அழிக்க வேண்டும். எந்தக் கட்சியுடன் கூட்டணி வைத்தாலும், எவ்வளவு சீட் வாங்கினாலும் தேர்தலில் காங்கிரஸ் கட்சியையும் அதன் கூட்டணியையும் தோற்கடிப்போம். - இப்படி அவர் தெரிவித்தார்.



டில்லியில் பாரதிய ஜனதா கட்சியை சேர்ந்தவர்கள் பெற்றோல் விலை உயர்வைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்தபோது பொலிஸாருக்கும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் இடையே இழுபறி ஏற்பட்டது.

# கலைஞருடன் அழகிரி திடீர் சந்திப்பு

முதல்வர் கருணாநிதியை மத்திய அமைச்சர் மு.க.அழகிரி நேற்றுமுன்தினம் திடீரெனச் சந்தித்துப் பேசினார்.

மத்திய அமைச்சரவை புதன்கிழமை விரிவாக்கம் செய்யப்பட உள்ள நிலையில் அவர் முதல்வர் கருணாநிதியைச் சந்தித்துப் பேசியிருப்பது குறிப்பிடத்தக்கது.

2 ஜி அலைக்கற்றை விவகாரம் இந்தியா முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த விவகாரத்தில் ஆ.ராசா, அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்தார். இந்தப் பிரச்சினையில் ஆ.ராசாவை மத்திய அமைச்சர் மு.க.அழகிரி எச்சரித்தார் எனச் செய்திகள் வெளியாகின.

இதனிடையே, தனது அமைச்சர் பதவி முற்றும் கட்சிப் பொறுப்பை மு.க.அழகிரி இராஜினாமா செய்ததார் எனத் தகவல்கள் வெளியாயின. இந்தச் செய்தியை முதல்வர் கருணாநிதி தனது பேட்டியின் போது மறுத்தார்.

இராஜினாமா சர்ச்சைகளுக்கு இடையே தி.மு.கவின் மூத்த தலைவர்கள் சிலர் மு.க.அழகிரியைச் சமாதானம் செய்தனர் எனத் தெரிகிறது.

இந்நிலையில், மத்திய அமைச்சர் மு.க.அழகிரி முதல்வர் கருணாநிதியைச் சந்தித்துப் பேசியிருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

தி.மு.கவின் பொதுக்குழுக் கூட்டம் பெப்ரவரி 3 ஆம் திகதி நடைபெறுகிறது. இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட வேண்டிய முக்கிய முடிவுகள் குறித்தும் கருணாநிதியுடன் அழகிரி ஆலோசனை நடத்தியுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சீனாவின் எழுச்சியை கூர்ந்து கவனித்து வருகிறது இந்தியா

சீனாவின் எழுச்சியை இந்தியா கூர்ந்து கவனித்து வருகிறது. அதன் எழுச்சி, இந்தியாவுக்குச் சவால் விடக்கூடியதாக இருந்தாலும் வாய்ப்புகளையும் வழங்கக் கூடியது என்பதில் சந்தேகம் இல்லை என்று இந்தியா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வெளிவிவகாரச் செயலர் நிருபமா ராவ் டில்லியில் நடந்த கருத்தரங்கில் கூறியவை வருமாறு -

இந்தியாவின் முக்கிய எதிர்பார்ப்புகளைப் புரிந்துகொண்டு செயற்படக்கூடிய வகையில் சீனாவின் செயற்பாடு அமைய வேண்டும். பிறரை அச்சுறுத்தும் போக்கு இல்லாத வகையில் அமைதி வழியில் சீனாவின் எழுச்சி இருக்கிறதா என்கிற கண்ணோட்டத்தில்தான் ஆசிய நாடுகள் அதை மதிப்பிடும். பிறரை ஆட்டிப் படைக்கும் விதத்தில் அதன் செயற்பாடு இருந்தால் மதிப்பீடு வேறாக இருக்கும்.

சீனாவுக்கும் இந்தியாவுக்கும் பல விடயங்களில் போட்டாபோட்டி இருக்கும் அதே வேளையில் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகளும் இருக்கின்றன என்பதை மறந்துவிடமுடியாது. இரண்டுக்கும் சமநிலை உருவாகப் பேச்சுகளும், தூதரக நிலை சமரச முயற்சிகளும் உதவிடும். அதே வேளையில் இந்தியாவின் முக்கிய எதிர்பார்ப்புகளுக்கு செவிசாய்ப்பதாக சீனாவின் செயற்பாடு அமையவேண்டும்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 13ஆவது திருத்தத்தில் பொலிஸ் அதிகாரம் உண்டு அது இல்லாத தீர்வு பிளஸ் அல்ல மைனஸ்

## கட்டுரையாளர் பெர்னாண்டோ கருத்து

கொழும்பு, ஜனவரி.20

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின்படி தீர்வினை வழங்கத் தயார் - அதற்கு மேலதிகமாகவும் போகத்தயார் என்று கூறும் ஜனாதிபதி அந்தத் திருத்தத்தில் உள்ள பொலிஸ் அதிகாரம் வழங்கப்படமாட்டாது என்கிறார். இதை 13 திருத்தமும் பிளஸ்ஸும் என்று கூறுவது பொருந்தாது, 13 ஆம் திருத்தமும் மைனஸும் என்றே கொள்ள வேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் உபுல் ஜோசெப் பெர்னாண்டோ. டெய்லி மிரர் பத்திரிகையில் எழுதியுள்ள தமது கட்டுரையொன்றில் அவர் கூறியிருப்பதாவது:

13ஆம் திருத்த தொடர்பாக மஹிந்த வெளியிட்டிருக்கும் அறிவிப்பு சிக்கலாகத் தெரிகின்றது. 13 ஆம் திருத்தத்தையும் அதற்கு மேலாகவும் (பிளஸ்) தருவதற்கு தாம் தயாராய் இருப்பதாக அவர் தெரிவித்திருந்தாலும் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழ்வரும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதை எதிர்க்கிறார்.

பொலிஸ் அதிகாரமில்லாத 13ஆவது திருத்தம் என்பது 13 ஆவது திருத்தம் பிளஸ் என்று கொள்ள முடியாது. 13 ஆவது திருத்தம் மைனஸ் என்றே ஆகும்.

13 ஆவது திருத்தம் தொடர்பான முன்மொழிவுகள் தமிழ்தேசிய கூட்டமைப்பிடம் வழங்கப்படும் என்று ஜனாதிபதியின் நிலைப்பாடாக இருந்தபோதிலும் அவர்களுடனான பேச்சுவார்த்தைகளை நடத்தும் பொறுப்பை அவரது ஓய்வூதியப் பட்டியலில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரட்ண சிறிவிக்கிரமநாயக்காவிடம் ஒப்படைத்திருப்பது இந்த விடயத்தில் அவருக்கிருக்கும் நேர்மையில் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

போர் முடிவடையும் வரையில் இந்தியாவை பக்கம் சாராமல் வைத்துக் கொள்வதற்காக சர்வகட்சி மாநாட்டை காட்டி இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கை சமாளித்து வந்தார். பல வருடங்கள் இழுத்தடித்ததின் பின் சர்வகட்சி மாநாடு வழங்கிய அறிக்கையும் கூட கிடப்பில் போடப்பட்டு தூசி பிடித்துக் கொண்டிருக்கின்றது.

மன்மோகன் சிங்கை சர்வகட்சி மாநாட்டை காட்டி ஏமாற்றிய மஹிந்த அதே தந்திரத்தையே 13 ஆவது திருத்தத்தையும் பிளஸ்ஸையும் காட்டி தமிழ் நாடு தேர்தல்கள் முடியும் வரை ராகுல் காந்தியையும் ஏமாற்றுவாரானால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இவ்வாறு உபுல் ஜோசப் பெர்னாண்டோ தமது கட்டுரையில் தெரிவித்துள்ளார். (ப)

# இ.போ.ச. பஸ்களில் இலத்திரனியல் அனுமதிச் சீட்டு இயந்திரங்கள்

கொழும்பு, ஜன. 20

இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்களில் இலத்திரனியல் அனுமதிச் சீட்டு இயந்திரங்களைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளன என இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவர் எம்.டி.பந்துசேன தெரிவித்துள்ளார்.

உடஹமுல்ல பஸ் நிலையத்தில் இது தொடர்பான பரீட்சார்த்த நிகழ்வு வெற்றியளித்ததை அடுத்தே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

நாடளாவிய ரீதியில் ஆயிரம் இலத்திரனியல் அனுமதிச்சீட்டு இயந்திரங்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப் படவுள்ளன எனவும் பந்துசேன தெரிவித்தார். (சி)

# மஹிந்தவின் படம் பொறித்த கலண்டர்கள் தீயிட்டு எரிப்பு

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உருவப் படத்துடனான கலண்டர்களைத் திரும்பப் பெறக்கோரி நேற்று தமிழ்நாடு உடுமலையில் ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது.உடுமலையிலுள்ள இராணுவப்பள்ளி இந்தக் கலண்டர்களை வெளியிட்டுள்ளது. இந்தக் கலண்டர்களைத் திரும்பப் பெறக்கோரி பெரியார் திராவிடக் கழகத்தினர் கலண்டர் எரிப்புப் போராட்டத்தை நடத்தினர்.

இப் போராட்டத்தில் அ.தி.மு.க, பாட்டாளி மக்கள் கட்சி, நாம் தமிழர் இயக்கம் ஆகிய கட்சிகளும் கலந்துகொண்டன. பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்குமிடையே வாய்த் தர்க்கம் ஏற்பட்டதையடுத்து 200 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். (சி)

# சலுகைக்காக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு மேலும் பேசிய சுமந்திரன் தெரிவித்ததாவது:-

புலிகளுக்கு எதிராகத் தான் பெற்ற வெற்றியை முன்னிறுத்தியே இந்த அரசு கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வென்றது. ஆனால் வடக்கு, கிழக்கில் மக்கள் இந்த அரசை ஏற்காமல் புறக்கணித்தார்கள். அவர்கள் கூட்டமைப்பையே ஒருமனதாக ஆதரித்து நின்றார்கள்.

அந்த அங்கீகாரத்தின் காரணமாகத்தான் அரசு இப்போது கூட்டமைப்பை அழைத்துப் பேசுகிறது.

அரசுடனான பேச்சுக்களில் இரு விடயங்கள் முக்கியமாக ஆராயப்படுகின்றன. ஒன்று எமது மக்களின் அடிப்படைத் தேவைகள். மற்றொன்று அரசியல் தீர்வு பற்றிய கலந்துரையாடல்கள். இரண்டு விடயங்களுமே சமகாலத்தில் பேசப்படுகின்றன.

அரசுடனான பேச்சில் ஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பில் நாம் இதுவரை வெளிப்படையாக எதனையும் மக்களுக்குத் தெரிவிக்கவில்லை. கணிசமான முடிவைக் கண்டதன் பின்னர் கூட்டறிக்கை ஒன்றை வெளியிடுவதுதான் எமது நோக்கம். அதுவரை பேச்சு விடயங்களை வெளிவிடுவதில்லை என்று இரு தரப்பினரும் இணக்கம் கண்டுள்ளோம்.

நீங்கள் நினைக்கக்கூடும் கடந்த 60 வருடங்களில் எத்தனையோ பேச்சுக்கள் இடம்பெற்றன. ஆனால் எதுவுமே நடக்கவில்லை என்று. ஆனால், இந்தப் பேச்சுக்கள் மூலம் காத்திரமான ஓர் அடைவை எட்டுவதற்கு நாங்கள் முயற்சிக்கின்றோம்.

### விலைபோக மாட்டோம்

அரசுடன் பேச்சு நடத்துகிறோம் என்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விலைபோய் விட்டது என்று நீங்கள் எண்ணத் தேவையில்லை. அந்த அச்சம் உங்களுக்கு ஒருபோதும் தேவையற்றது.

கூட்டமைப்பு மீது நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை ஒருபோதும் வீணடிக்க மாட்டோம். எம் மக்களுக்கும் துரோகம் இழைக்க மாட்டோம். எமது அடிப்படைக் கொள்கைகளை விட்டுக் கொடுக்காமலேயே நாம் செயற்படுவோம்.

சிறையில் வாடும் 800இற்கும் அதிகமான அரசியல் கைதிகளின் விடுதலை, உயர் பாதுகாப்பு வலயங்களாக இருக்கும் பகுதிகளுக்கு மக்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுப்பது, ஆயுதங்களுடன் அரசியல் செய்பவர்களிடம் இருந்து அவற்றைக் களைவது ஆகிய விடயங்கள் உள்ளிட்ட பல உடனடித் தேவைகள் குறித்தும் அரசுடன் ஆராய்ந்துள்ளோம் - என்றார்.

நிகழ்வில் உரையாற்றிய மாவை சேனாதிராசா, ''அரசுடனான இந்தப் பேச்சுக்களுக்கு இந்தியாதான் தூண்டியது'' என்று தெரிவித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியத் தூதுவரைச் சந்தித்து கோரிக்கை முன்வைத்ததைத் தொடர்ந்துதான் கிழக்குக்கு உடனடியாக உதவிப் பொருள்களை அது அனுப்பியது என்றும் அவர் குறிப்பிட்டார்.

# புங்குடுதீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறத்தில் பூக்கள் கொண்ட சட்டை என்பன கண்டெடுக்கப்பட்டன.

இந்த ஆடைகள் அனைத்தும் ஒன்றாகத் திரட்டப்பட்டு கல்லில் கட்டி கிணற்றில் போடப்பட்டுள்ளன. மேலே மிதந்து அடையாளம் காட்டிக் கொடுக்காத வகையில் திட்டமிட்டு ஆடையையும் சடலத்தையும் மறைப்பதற்குக் கொலை யாளிகள் முயன்றிருக்கிறார்கள் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

கிணற்றில் சுமார் மூன்றரை அடி ஆழத்திற்கே தண்ணீர் இருந்தது. அதனால் அப் பெண் கிணற்றில் குதித்துத் தற்கொலை செய்வதற்கான சாத்தியங்கள் ஏதுமில்லை என்றே அதிகாரிகள் நம்புகின்றனர்.

ஆரம்ப விசாரணையில் சடலத்தின் கழுத்துப் பகுதியில் கத்தி வெட்டுக் காயம் ஒன்று காணப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

சுமார் ஒரு மாதத்திற்கு முன்பே இந்தப் பெண் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

கிணற்றில் இருந்து மீட்கப்பட்ட சடலமும் ஆடைகளும் அடையாளம் காணும் பொருட்டு யாழ். போதனா வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட ஆடைகளை வைத்துப் பார்க்கும் போது அது தமிழ்ப் பெண் ஒருவரின் சடலமாகவே இருக்க வேண்டும் என்றும் -

பணிக்குச் சென்று வந்திருக்கக் கூடிய ஒரு பெண்ணாக அவர் இருந்திருக்கக்கூடும் என்றும் -

அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (உ-9)

மகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

Dr.Sathasivam Kirupakaran(M.D)



இத்தைப்பூச திரு நன்நாளில் சித்தன்கேணியூர் வைத்திய கலாநிதி சி.சதாசிவம் (J.P, MJF) திருமதி சர்வேஸ்வரி ஆகியோரின் கனிஷ்ட புத்திரனும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவருமாகிய ச.கிருபாகரன் ரஷ்ய நாட்டின் குருஸ் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் (20.01.2010) வைத்திய கலாநிதி பட்டம் பெறுகின்றமையை இட்டு மகிழ்ச்சி அடையும் அதே வேளை மேலும் பட்டங்கள் பல பெற்று தாய்த்திரு நாட்டில் பணியாற்ற எல்லாம் வல்ல சித்தன்கேணியூர் பெரியவளவுப் பிள்ளையாரை வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
நண்பர்கள்

நிர்வாகப் பொறுப்பாளர் தேவை (பெண்)

சிறுவர் கிராமத்தில் தங்கியிருந்து பணிபுரிவதற்குத் தகுதிவாய்ந்த பெண் நிர்வாகப் பொறுப்பாளர் தேவை. முகாமைத்துவம், அடிப்படைக் கணக்கியல், ஆங்கிலம், கணினி மற்றும் தமிழில் அறிக்கைகள் தயாரிக்கும் திறன் வாய்ந்த ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர்கள், சிரேஷ்ட ஆசிரியர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், அரச, தனியார் உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது. தகுதிவாய்ந்த இளையோர்களும் விண்ணப்பிக்கலாம்.

நேர்முகத்தேர்வுக்கு தொடர்புகொள்ள
Dr.B.Anandkumar,
T.P - 0773627055

(சி-575026)

ஓம் விஸ்வப் பிரம்மனே நமஹ



புதுக்கடை திறப்புவிழா அழைப்பு



இன்று (20.01.2011) வியாழக்கிழமை முற்பகல் 10.06 முதல் 11.28 வரையுள்ள மீனலக்கினமும் பூசம் நட்சத்திரமும் அமிர்த சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்தத்தில்

நுபானாஸ் ஜூவல்லறி

புதுப்பொலிவுடன் திறந்து வைக்கப்படவுள்ளது. அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

(109486)

27, [illegible] வீதி, யாழ்ப்பாணம். க.சாந்தகுமார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வடக்கிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆனால் தற்போது பொலிஸ் மா அதிபர் கலாநிதி மஹிந்த பாலசூரியவின் வேண்டுகோளின் பேரில் தமிழ் இளைஞர்கள், யுவதிகளைப் பொலிஸ் சேவைக்கு இணைத்துக்கொள்ள அரசு தீர்மானித்துள்ளது.

இதற்கிணங்க வடக்கு, கிழக்கிலிருந்து நீண்ட காலத்தின் பின்னர் பொலிஸ் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட 336 பேர் அண்மையில் களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியை நிறைவு செய்துகொண்டு வெளியேறியமை தெரிந்ததே.

இவ்வைபவத்தில் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்ட பொலிஸ் மா அதிபர் கலாநிதி மஹிந்த பாலசூரிய வடக்கு, கிழக்கிலிருந்து பொலிஸ் சேவைக்கு எதிர்காலத்தில் 2,500 பேர் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் எனத் தெரிவித்திருந்தார்.

இதன் முதற்கட்டமாகவே வடக்கிலிருந்து 1,000 பேரை பொலிஸ் சேவையில் இணைத்துக்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

வடக்கிலிருந்து தமிழ் இளைஞர், யுவதிகளைப் பொலிஸ் சேவைக்கு இணைத்துக் கொள்வது தொடர்பாகப் பொலிஸ் மனிதவளப் பிரிவின் அத்தியட்சகர் கின்சிறி ஜயலத் மேலும் கூறியவை வருமாறு:-

கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களிலிருந்தே 1,000 பேர் பொலிஸ் சேவைக்குத் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

இது தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு தமிழ் பேசும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் ஆறு பேர் குறித்த பிரதேசங்களுக்கு நேற்று 19ஆம் திகதி விஜயம் செய்துள்ளனர். இவர்களிடம் குறித்த பிரதேசங்களில் வாழும் இளைஞர், யுவதிகள் அறிவுரைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

விசேடமாக விண்ணப்பித்தவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு கொழும்புக்கு வரத் தேவையில்லை. அதற்கும் நாம் விசேட ஏற்பாடுகளைச் செய்துள்ளோம். குறித்த பிரதேசங்களுக்கு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் சென்று நேர்முகப் பரீட்சையை நடத்துவர். - என்றார்.(ஒ-சி)

## நல்லிணக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மக்களிடம் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டபோது காணிப் பிரச்சினை மற்றும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக மக்கள் பிரஸ்தா பித்திருந்தார்கள்.

தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பாக நல்லிணக்க ஆணைக்குழு மற்றும் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் சிபார்சுகளுக்கு அமைய ஜனாதிபதியினால் சட்டத்தரணிகள் அடங்கிய நால்வர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டது. இக்குழு நேற்று பூஸா முகாம் சென்றது.

இதேவேளை, காணிப் பிரச்சினை தொடர்பில் ஆணைக்குழு தற்போது நடவடிக்கை எடுத்துவருகின்றது.

இதன் முதற் கட்டமாக காணி அபிவிருத்தி அதிகார சபை, காணி அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றின் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தவுள்ளது என நல்லிணக்க ஆணைக்குழுவின் ஊடக இணைப்பாளர் தெரிவித்தார்.

அத்துடன், அநுராதபுரம் மாவட்டத்திற்கு வரும் 28, 29, 30, 31 ஆம் திகதிகளில் ஆணைக்குழு விஜயம் மேற்கொள்ளும் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-சி)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வைப்பு வேளைவிவாதமொன்றை சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் கோரியிருந்தமை குறிப் பிடத்தக்கது.

நாடாளுமன்றம் இன்று பிற்பகல் ஒரு மணிக்குக் கூடுகிறது. (ஒ-சி)

## உள்ளூராட்சி மன்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உள்ளூராட்சி மன்றத் தேர்தலை சுமுகமான முறையில் நடத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். *(விரிவான செய்தி 2ஆம் பக்கத்தில்)* (சி)

## உள்ளூராட்சி சபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வேட்பாளர்களின் எண்ணிக்கைக்கு அமைய ஒருவர் தலா 250 ரூபா செலுத்தி விண் ணப்பப்படிவம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று தேர்தல்கள் செயலகம் ஏற்கனவே அறிவித் திருந்தது.

இன்று முதல் எதிர்வரும் 27ஆம் திகதி வரை மாவட்ட செயலகங்களில் வேட்புமனு ஏற்கப்படும். இச்சந்தர்ப்பத்தில் மாவட்ட செயலகங்களின் பாதுகாப்பிற்காக பொலிஸார் இன்று முதல் ஈடுபடுத்தப்படவுள்ளனர் எனப் பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவித்தன.

அத்துடன், உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களுக்கான திகதி எதிர்வரும் 27ஆம் திகதி தீர்மானிக்கப்பட்டு, அறிவிக்கப்படும் என்று மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (ஒ-சி)


திறப்பு விழா

CITY INNS (Hotel)



இல.56, கன்னாதிட்டி வீதியில் அமைந்துள்ள
முற்றிலும் குளிரூட்டப்பட்ட அறைகள் கொண்ட
City Inns (Hotel) இன்று (20.01.2011)
வியாழக்கிழமை சுபமுகூர்த்த வேளையில்
சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளது.
என்பதனை மிக மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக்கொள்கின்றோம்.



CITY INNS HOTEL MANAGEMENT

* Reservation & Inquiries Contact
* T.P:- 021 2224605
* Hotline:- 0772833822
* E-mail:- info@cityinns.lk, methu@cityinns.lk
* Web:-www.cityinns.lk

Career opportunities
Walk in Interview from 21st to 24th between 9am-6pm

### வெளிவந்துவிட்டது வெற்றித்தேர்வு

இலங்கை முழுவதும் சாதனை படைத்து நிற்கும் 2011ஆம் ஆண்டுக்கான வெற்றித்தேர்வுகள் புதிய அங்கீகாரத்துடன் புதுப்பொலிவுடன் வெளியாகியுள்ளன.

தரம் - 5 வெற்றித்தேர்வு - 02
தரம் - 4 வெற்றித்தேர்வு - 01

தேவையான பாடசாலைகள் உடன் தொடர்புகொள்க.

தரம் - 5 வெற்றித்தேர்வு - 01 இன்று முதல் புத்தகசாலைகளில்

யாழ்நகர் - பூபாலசிங்கம் புத்தகசாலை
வவுனியா - J.P.K. புத்தகசாலை
தொடர்புகளுக்கு - 0212229016, 0773126807, 0775388471
(109605)


### மரண அறிவித்தல்

#### கந்தையா கதிரவேலு (சீனிவாசகம்)



யாழ்.திருநெல்வேலி கிழக்கு செங்குந்தா வீதியைப் பிறப்பிடமாகவும், London-Harrow பகுதியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கந்தையா - கதிரவேலு (சீனிவாசகம் - இளைப்பாறிய சிறைச்சாலை உத்தியோகத்தர்) கடந்த 12.01.2011 அன்று சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - அம்மணிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும், லைலாராணி (பானுமதி - லண்டன்- முன்னாள் ஆசிரியை, யாழ்.றோ. க.த.க. பாடசாலை), சந்திரசிறி (இலங்கை- முன்னாள் உத்தியோகத்தர், யாழ்.கல்வித் திணைக்களம்), சூரியகுமார் (லண்டன்), ஜெயசிறி (லண்டன்), ராஜகுமாரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராஜேஸ்வரன் (இலங்கை - முன்னாள் ஆசிரியர், யாழ்.கனகரெத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), பவளராணி (இலங்கை), குணசீலன் (லண்டன்), அனுலா (மாலா-லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ் சென்றவர்களான செல்லத்துரை, குமாரசாமி, ஐயாத்துரை (காசிப்பிள்ளை), சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுஜீந்திரன், சுபாங்கிதன், கீர்த்தனன், அர்ச்சனா, அபிரா, சரவணன், குபேரன், பவித்திரா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (23.01.2011) நண்பகல் 12 மணிக்கு லண்டனில் நடைபெறும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சூரியகுமாரன் (மகன்) -00447939048652,
ராஜகுமாரன் (மகன்) - 00447939322009 (லண்டன்),
இராஜேஸ்வரன் (மருமகன்) - 0773911909 (இலங்கை),
குணசீலன் (மருமகன்) - 00447534936335 (லண்டன்)
(இ/575027)


### கணினிப் பயிற்சிநெறிகள்

தைப்பூசத்தன்று புதிய வகுப்புக்கள் ஆரம்பம்



Softview Computer College
43, Arasady Rd, Thaddatheru Junction, Jaffna.

### விண்ணப்பப் படிவம் விற்பனை

இலங்கை கல்வி நிர்வாக சேவை SLEAS படிவங்கள் விற்பனையாகின்றன.
அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம்தொ.பே.இல:0212229881


### தவறி விட்டது

இராசதுரை சிவகணேசன் என்பவருடைய பேர்ஸ், தேசிய அடையாள அட்டை (800211000V), சாரதி அனுமதிப் பத்திரம் (A011034076), தொழில் அடையாள அட்டை, ATM கார்டுடன், நேற்றுமுன்தினம் (18.01.2011) யாழ்ப்பாணத்துக்கும் புத்தூருக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் 0773787369, 0718077171 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.
சன்மானம் வழங்கப்படும்.


### பணியாளர் தேவை

புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ள ஆண் பணியாளர்கள் தேவை.
கவர்ச்சிகரமானசம்பளம்வழங்கப்படும்.
நேரில் சமுகம் தரவும்.

சரவணா ரெக்ஸ்
770, 772 கே.கே.எஸ் வீதி,
(தட்டாதெருச் சந்தி) யாழ்ப்பாணம்

### SRI KARAN BOOK CENTER

உயர்தரப் புவியியற் பாடத்திட்டத்திற்கமைவான
"MAPED COLOUR PENCILS"(No-I)
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஒரே இடம்
*ஸ்ரீ கரன் புக் சென்ரர்*
"நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம்"

No.73, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
புகையிரத நிலைய வீதி, சுன்னாகம். T.P:-0213210960

இரு இதயங்கள் இணையும்
இன் னன்னாளின் உதயம்
திருமண அழைப்பிதழ்களின் தொடக்கம்...!

BOASCO

திருமண அழைப்பிதழ்களின் ஆலயம்

மங்களகரமான தெரிவுகள் மலிவு விலையில்
போஸ்கோ
(யாழ் நல்லூர் கோயில் முன்பாக)

No. 252, Point Pedro Road, Nallur, Jaffna.
Tel: 021 222 0370, E-mail: boasco09@yahoo.com


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.01.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகராதிச் சொற்கள்...

இக்கட்டு: தீர்வுகாண இயலாத நிலை
இங்காலே: இந்தப்பக்கம்
இங்கிதம் : சூழ்நிலைக்கேற்ப
இடக்கரடக்கல் : ஒரு பொருளை அல்லது குற்றத்தை நேரிடையாகக் கூறாது மறைமுகமாக நாகரிகமான சொற்களைக் கொண்டு உரைத்தல்
இடம் போடுதல்: பேருந்து வண்டியில் கூட்டம் அதிகமாக இருக்கும் போது தனக்கென்று ஓர் இடத்தைத் துண்டு போட்டுக் கைப்பற்றுதல்
இட்டுக்கட்டு: இல்லாததை இருப்பதாகப் புனைந்துரைத்தல்.
இட்டு நிரப்பு: வேறு ஒன்று கொண்டு ஈடு செய்தல்.
இதோபதேசம்: நல்லுரை புகலுதல்
இத்யாதி: இதைப் போன்று இன்னும் பிற.

கோகுமி,
கொழும்புத்துறை.

## எதிர்கால மலர்கள்...



ஊக்குவிப்பு: தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற 'கல்வி ஒவ்வொருவரதும் அடிப்படை உரிமை' என்னும் தொனிப்பொருளில் அமைந்த கண்காட்சியில் தரம் 3 மாணவர்கள் தமது காட்சிப் பொருள்களுடன் உள்ளனர்.

## சிந்தனைத் துளிகள்

* நீ வெற்றி பெற்றால் உனக்குப் போலியான நண்பர்களும் மெய்யான பகைவர்களும்தான் கிடைப்பார்கள். இருந்தாலும் நீ வெற்றி பெறப் பாடுபடு.
* கௌரவம் நாக்கிலும், உயர்வு பணிவிலும், கல்வி ஒழுக்கத்திலும் உள்ளது.
* அறிவுக்கு முற்றுப்புள்ளி வைக்காதே; நீ சாகும் வரைக்கும் உன் அறிவுக் கதவு திறந்தே இருக்கட்டும்.
* உன் குறையை உனக்கு மட்டுமே சுட்டிக்காட்டு மற்றவர்களிடம் அதனை மறைப்பவனே நம்பத் தகுந்த நண்பன்.
* தீயார் நேசத்தை விடத் தனிமை மேலானது.
* எதிர்பார்க்கப்படுகின்ற அனைத்துமே நெருக்கமானது. ஆனால் அவை அனைத்தையும் விட மரணம் என்பது மிக நெருக்கமானது.
* சத்தியத்தை உணர்ந்தவர்களுக்குத் தியாகங்கள் இனிமையாக இருக்கும்.
* உன் எண்ணங்கள் எப்படியோ, அப்படித்தான் வாழ்க்கையும் அமையும். எனவே, சிறந்தவைகளையே எண்ண முயற்சி செய்.
* பொறுமையாய் இரு; அது உன் வெற்றியின் முதற்படி.
* உண்மையைச் சொல்லி நன்மையைச் செய்தால் உலகம் உன்னில் மயங்கும்; உன் நிலை உயரும்போது பணிவு கொண்டால் உயிர்கள் உன்னை வணங்கும்.

மிதுலாயினி,
கொய்யாத்தோட்டம்.

## கிருஷ்ணா புடைவைகொடு




பரமார்த்த குருவும் சீடர்களும் பொரி வாங்கிச் சாப்பிட்டபடி மடத்துக்குத் திரும்பிக் கொண்டு இருந்தனர். அப்போது பக்கத்துத் தெருவில் தெருக்கூத்து ஒன்று நடக்க இருந்தது. அதில் நடிப்பதற்காகக் கிருஷ்ணர் வேடம்போட்டுக் கொண்டு அந்த வழியாக வந்தார் ஒருவர்.

அவரைப் பார்த்த சீடர்கள், நிஜமான கிருஷ்ணர்தான் வருகிறார் என்று நம்பினார்கள். ''அதோ பாருங்கள் குருதேவா! கிருஷ்ண பரமாத்மா வருகிறார்!'' என்று குதித்தான் மட்டி.

''ஆமாம் குருவே! கையில் புல்லாங்குழல் கூட வைத்திருக்கிறார்'' என்றான் மடையன். பரமார்த்தரும் அவரைக் கடவுள் என்றே நம்பினார். உடனே நன்றாக இருந்த தன் வேட்டியைக் கிழித்து விட்டுக் கொண்டதோடு ''சீடர்களே, நீங்களும் உங்கள் துணிகளை இதேபோல் கிழித்துக் கொள்ளுங்கள்'' என்றார் பரமார்த்தர். ''புதுத் துணிகளைக் கிழிப்பதா'' ஏன் குருவே? என்று கேட்டான் முட்டாள். ''புத்தி கெட்டவனே! ஏன் என்று கேட்காதே. சீக்கிரம் கிழி! அப்போதுதான் நாம் ஏழைகள் என்று அவர் நம்புவார்!'' என ஆணையிட்டார் பரமார்த்த குரு.

சீடர்கள் ஐவரும், குருவின் கட்டளைப்படி கட்டியிருந்த வேட்டிகளைக் கிழித்துக் கந்தல் கந்தலாக ஆக்கினார்கள் உடனே பரமார்த்தர் வேகமாகச் சென்று கிருஷ்ணர் வேடம் போட்டவர் காலில் விழுந்து வணங்கினார்! ''பாஞ்சாலிக்குப் புடைவை கொடுத்து மானம் காத்த கிருஷ்ணா! அதேபோல் நீதான் எங்களுக்கும் ஆளுக்கு ஒரு புடைவை கொடுத்து எங்கள் மானத்தைக் காப்பாற்ற வேண்டும்.'' என்று வேண்டினார் பரமார்த்தர். ''குருவே! நமக்கு எதற்கெதற்குப் புடைவை?'' என்று கேட்டான் மண்டு.

''அதுதானே? நமக்கு வேட்டி அல்லவா தேவை!'' என்றான் மூடன். ''கார்மேகக் கண்ணா! இந்தா, பொரி! உன் இஷ்டம் போல் கொரி!'' என்றபடி கொஞ்சம் பொரியைத் தந்தான் மட்டி. கிருஷ்ணர் வேடம் போட்டவருக்கோ ஒன்றும் புரியவில்லை. ''நான் கடவுள் இல்லை! எனக்கு நேரமாகிறது; என்னைப் போகவிடுங்கள்'' என்றார். ''கண்ண பெருமானே! எங்களை ஏமாற்ற நினைக்காதீர்கள்'' எனக் கெஞ்சினான் முட்டாள். ''கண்ணா! அன்று குசேலர் கொடுத்த அவலை மட்டும் சாப்பிட்ட நீ, இந்த ஏழைப் பரமார்த்தர் தரும் பொரியைச் சாப்பிடத் தயங்குவது ஏன்?'' என்றார் குரு. ''கோபாலா, கோவிந்தா! தயவு செய்து கொஞ்சம் பொரியையாவது சாப்பிடு'' என்றான் மடையன். ''பொரியைச் சாப்பிடாவிட்டால் விடமாட்டார்கள்'' என்று நினைத்து கொஞ்சம் பொரியைச் சாப்பிட்டார் தெருக்கூத்து நடிகர்.

''பொரி கொடுத்ததற்கு நன்றி! நான் போய் வருகிறேன்'' என்று நகரத் தொடங்கினார் நடிகர். ''என்ன? பொரியைத் தின்றுவிட்டு சும்மா போகிறீர்கள்? எங்களுக்கு வேண்டிய வரங்களைக் கொடுங்கள்'' என்றார் பரமார்த்தர்.

தொடரும்.

## பிராணிகள் தமது பாதுகாப்புக்காகக் கைக்கொள்ளும் உத்திகள்

*01. முயல்: நீண்ட செவிகள் மூலம் சிறிய சத்தத்தையும் கேட்டுக் கிரகித்துத் தப்பிக்கொள்ளும்.*
*02. கோழி: கால் நகங்களால் எதிரியைத் தாக்கும், பறந்து தப்பிக்கும்.*
*03. யானை: தும்பிக்கையால் தாக்கும்.*
*04. நத்தை: ஓட்டுக்குள் சுருண்டு கொள்ளும்.*
*05. ஆமை: ஓட்டுக்குள் உடலை மறைத்துக் கொள்ளும்.*
*06. முள்ளம் பன்றி: தமது உடலில் உள்ள முள்களை சிலிர்த்து விரட்டும்.*
*07. பல்லி: வாலை உடைத்து விட்டு ஓடும்.*

ம.திவ்வியபிரகாஸ்
தரம்-5,
யா/மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலயம்.

## பாவை



அப்பா ஒரு பாவைப்பிள்ளை வாங்கிவந்தாரே
அன்புடனே எனக்கு விளையாடத் தந்தாரே
கைகளிலே காப்புமிட்டு மோதிரம் போட்டேன்
காதுகுத்தித் தோடுமிட்டு மாலையும் போட்டேன்

சட்டையோடு தாவணியும் போட்டுவிட்டேன்
தலையிழுத்து நெற்றியிலே பொட்டுமிட்டேன்
கட்டிலிலே படுக்க வைத்துப் பாட்டுப் பாடினேன்
கம்பளியால் கவனமாகப் போர்த்து மூடினேன்

அம்மாவிடம் சோறுகறி வாங்கிச் செல்வேனே
ஆசையோடு பாவையிடம் நான்கொடுப்பேனே
அம்மா மெல்ல ஒழித்திருந்து பார்த்துக் கொண்டாளே
அன்புடனே என்னை வந்து அணைத்துக் கொண்டாளே.

சோபியா.

## குழந்தைச் செல்வங்கள்

குழந்தைகள் உண்மையிலேயே ஒரு தனி உலகம் தான். வளர்ந்த மனிதர்களின் சூது, வாதுகள், வஞ்சகங்கள், கபட நாடகங்கள், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுதல் போன்றவை குழந்தைகளிடம் இருக்காது.

பிரபல ஆங்கில நாவலாசிரியர் சார்லஸ் டிகக்னஸ் குழந்தைகள் இறைவனிடமி ருந்து கிடைக்கப் பெற்ற ''புதுமையான மலர்கள்'' என்று குறிப்பிடுகின்றார். குழந்தைகளிடம் அன்பு காட்டாதவர்கள் யாருமே இருக்க முடியாது. குழந்தைகளைச் ''செல்வங்கள்'' என்று இலக்கியங்கள் வர்ணிக்கின்றன. குழந்தைகளைப் பார்த்தால் பெரியவர்களின் கவலைகள் மறைந்து விடும். அவர்களது மழலைச் சொற்களைக் கேட்டால் அந்த நிமிடமே மனம் மகிழ்ச்சியில் கூத்தாடும். குழந்தைகள் வருங்காலச் செல்வங்கள் எனப் போற்றப்படுகின்றனர். குழந்தைகளின் உலகம் பெரியவர்களின் உலகத்தில் இருந்து வேறுபட்டது. அவர்களின் நடத்தைகளைக் கூர்ந்து கவனித்தால் அவற்றைப் புரிந்து கொள்ளமுடியும். குழந்தைகளுக்குப் பொய் சொல்லத்தெரியாது. ஏமாற்றத் தெரியாது. நினைத்ததைச் சொல்லிவிடுவார்கள். பார்த்ததை அப்படியே சொல்லும். எதையும் தானே செய்ய வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கும். நினைத்தபடி நடக்கவேண்டு மென அடம்பிடிக்கும். கற்பனை அதிகமாக இருக்கும். இவை இயற்கையின் தூண்டுதல் என்பதால் பெரியோருக்குப் பிடிக்காத பல காரியங்களைச் செய்வார்கள்.

நிஷா.

## சுவிங்கம்

உங்களுக்கெல்லாம் பிரியமானதல்லவா? சிலர் நாளெல்லாம் இதைமென்றுகொண்டே இருப்பீர்களே? சௌவ்வு போன்ற இதை எப்படித் தாயரிக்கிறார்கள் என்று தெரியுமா? மத்திய அமெரிக்காவில் அதி உஷ்ணப் பிரதேசக் காடுகளில் ஒருவகை மரங்கள் வளருகின்றன. மனிதர்கள் இதன் மீது ஏறி இதன் கிளைகளில் வெட்டுவாய்களை ஏற்படுத்துகிறார்கள். இறப்பர் மரத்திலிருந்து இறப்பர்பால் வடிவது போல் இந்த மரங்களிலிருந்தும் ஒருவகைத் திரவம் வடிகிறது. அதைப்பாத்திரங்களில் சேகரித்துக் காய்ச்சி இறப்பரைப் போல கெட்டியாக ஆனதும் அத்துடன் சர்க்கரை ருசிக்குப் பலவித எஸென்ஸ் ஆகியவற்யையும் கலந்து ரொட்டி மாவை அடித்து அடித்துப் பிசைவது போல் ஓர் இயந்திரம் இதைப் பிசைகிறது. பிறகு தலையணைபோன்ற வில்லைகளாக வார்க்கின்றனர். இன்னொரு இயந்திரம் இதை நீங்கள் அசைபோடும் உருவத்தில் சிறு சிறு துண்டுகளாக்கி காகிதத்தில் சுற்றித் தருகிறது. நீங்கள் சுவைக்கும் 'சுவிங்கம் எதனால் எப்படித் தயாராகிறது என்று இப்போது புரிகிறதா?

லோ.தாஜுஜன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கில் ஜப்பானின் உதவி

உலக சமாதானத்துக்கு செழிப்புடனும் அர்ப்பணிப்புடனும் பங்களிப்பு வழங்கும் நாடு என்ற வகையில் ஜப்பான் இலங்கையில் சமாதானம் மற்றும் மீள் கட்டமைப்புக்குத் தனது உதவியை வழங்குவதுடன் நடுத்தர மற்றும் நீண்டகால அபிவிருத்தி நோக்கினையும் கொண்டுள்ளது. ஆகவே ஜப்பான் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் மீள் கட்டமைக்கும் மக்களின் வாழ்க்கைத்தர உயர்வுக்கும் அதி உயர்ந்த முன்னுரிமையளித்துச் செயற்பட்டு வருகின்றது. ஜப்பான் சமாதான நடவடிக்கைகளுக்கும் தனது முழு உதவியை வழங்குகின்றது. சமாதானம் மற்றும் நல்லிணக்கம் நிலையான அபிவிருத்தி, சௌபாக்கியத்திற்கு இன்றியமையாததாகும். வடக்கு மற்றும் கிழக்கிற்கான ஜப்பானிய உதவியானது அவசர மனிதாபிமான உதவியிலிருந்து சமூக, பொருளாதார அபிவிருத்தி வரை ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA)சர்வதேச அமைப்புகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினூடாக வழங்கப்படுகின்றது.

**மோதல்களில் பாதிக்கப்பட்ட மக்களின் உடனடித் தேவைகளில் கவனம் செலுத்தல்**

ஜப்பானிய அரசாங்கமானது ஆயுத மோதல்களின் முடிவில் பாதிக்கப்பட்ட இடம்பெயர்ந்த மக்களின் உடனடி நிவாரணத்துக்கும் உதவி புரிய பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தது. 20 மில்லியன் (22 மில்லியன்) அமெரிக்க டொலர் பெறுமதியான உணவு, தற்காலிக கூடாரங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் இடம்பெயர்ந்த மக்களின் அவரசத் தேவைக்காக IOM, UNICEF, UNHER மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

**நிலக்கண்ணிவெடி அகற்றுவதற்கான உதவி**

இடம்பெயர்ந்தவர்களை துரிதமாக மீள்குடியமர்த்துவதற்கும் விவசாய வாழ்வாதார நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும், கண்ணிவெடியகற்றும் நடவடிக்கைகளுக்கும் ஜப்பான் முக்கிய உதவி வழங்குனராக இருந்து வருகின்றது. 2003ஆம்ஆண்டிலிருந்து வடகிழக்கில் நிலக்கண்ணிவெடியகற்றும் நடவடிக்கைகளுக்கு ஜப்பானுக்கு 21 மில்லியன் (அண்ணளவாக ரூ.2350 மில்லியன்) வழங்கி பெரும்பாலான பிரதேசங்களை நிலக்கண்ணிவெடியற்ற பிரதேசங்களாக மாற்ற உதவி புரிந்தது. 2010 ஆம்ஆண்டில் ஜப்பான் 16 மில்லியன் (அண்ணளவாக ரூ.180 மில்லியன்) மன்னார், கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணப் பிரதேசங்களில் கண்ணிவெடியகற்றும் செயற்பாட்டுக்காக Swiss Foundation for Mine Action (FSD), HALO Trust மற்றும் Devlon Assistance for Social Harmony (DASH) மூலமாக வழங்கியது. இக் கண்ணிவெடியகற்றும் நடவடிக்கைகள் ஊடாக இப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்குத் தொழில் வாய்ப்புகளையும் வழங்குகின்றது.

**அபிவிருத்தி உதவியும் இழப்பை ஈடுசெய்தலும் அடிப்படை சமூகசேவைகளை வழங்குதலும்**

மோதலில் பாதிப்புற்ற மக்களின் அவசர தேவைகளுக்கு உதவி வழங்குவதிலும் மேலதிகமாக பாதிக்கப்பட்ட மக்களின் அபிவிருத்தி உதவி மற்றும் அடிப்படை சமூக தேவைகளை பூர்த்தி செய்வதிலும் ஜப்பான் முக்கிய இடத்தை வகித்து வருகின்றது. ஜப்பான் யுத்த நிறுத்த காலப்பகுதியில் மக்களுக்கு மிகவும் தேவையான சுகாதார வசதிகளை வழங்கும் பொருட்டு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் கட்டுமானத்துக்கு உதவி வழங்கியதுடன் தற்போது வடக்கு மக்களின் அதிகரித்த சுகாதார தேவைகளுக்காக யாழ்பாணம் போதனா வைத்தியசாலையின் வளர்ச்சிக்கும் உதவி வருகிறது. மற்றும் வடக்கு மக்களுக்கு திருப்திகரமான மின்சார வசதியை வழங்கும் பொருட்டு கிளிநொச்சி வவுனியா மின்சார இணைப்புக்கு உதவியளித்து வருகின்றது. கிழக்கில், கிழக்கு மாகாண நீர் வழங்கல் அபிவிருத்தித்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இதனூடாக நகர்ப்புறங்களிலுள்ள மக்களுக்கு சுத்தமான நீரை வழங்க இயலுவதுடன் பல்வேறு கிராமப்புற நீர் வழங்கல் திட்டங்களை மேற்கொள்ளவும் முடியும்.

**சுயசார்பு நிலையை விருத்தி செய்தல்**

மோதலால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் வாழ்வாதாரத்தை மீள்கட்டியெழுப்பலை நோக்காகக் கொண்டு ஜப்பான் பல்வேறு சுயசார்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உதவியளித்து வருகின்றது. வறுமை ஒழிப்பு, சிறு கடன் திட்டம், மக்கள் தொடர்புடன் விவசாய கிராமிய அபிவிருத்தி மற்றும் மீள்கட்டுமான (TRINCAP) திட்டம் வறிய மக்கள் பொருளாதார அபிவிருத்திபோன்ற திட்டங்களை வாழ்வாதார அபிவிருத்தியை ஏற்படுத்தவும் சமூகங்களின் விருத்திநோக்காகக்கொண்டும் செயற்படுத்தப்படுகிறது. இதற்கு மேலதிகமாக ஜப்பான் அடிமட்ட மற்றும் மனித பாதுகாப்பு திட்டங்களின் ஊடாக பல்வேறு செயல்திட்டங்களை மக்களின் பங்களிப்புடன் செயற்படுத்தி வருகின்றது. அண்மையில் ஜப்பான் தனது GGP செயத்திட்டங்களை மோதலால் பாதிக்கப்பட்ட பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மீள்கட்டியெழுப்பவும் கீழ் கட்டமைப்பு வசதிகளின் மீள் கட்டுமானத்துக்கும் சர்வோதய, சேவா லங்கா மற்றும் இலங்கை சமூக நடவடிக்கைகள் சங்கத்தினூடாகவும் செயற்படுத்தி வருகின்றது. GGP செயல்திட்டத்தின் ஆரம்பத்திலிருந்து இன்று வரை வடக்கு மற்றும் கிழக்கில் 30ற்கு மேற்பட்ட சமூக நலத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. ஜப்பான், ஜப்பானிய அரச சார்பற்ற நிறுவனங்களினூடாக பல்வேறு வாழ்வாதார நலத்திட்டங்களுக்கு உதவியளித்து வருகின்றது. தற்போது Save The Children Japan சிறுவர் பராய அபிவிருத்தி திட்டமொன்றை திருகோணமலையிலும், JEN நிறுவனம் விவசாயிகளுக்கு உதவும் திட்டமொன்றை மட்டக்களப்பிலும் செயற்படுத்தி வருகின்றது. இதற்கு மேலதிகமாக ஜப்பான் பல்வேறு வாழ்வாதார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஐக்கிய நாடுகள் சபை நிறுவனங்களினூடாக உதவியிருக்கிறது.

**மனிதவள மேம்பாட்டை விருத்தி செய்தல்**

மனிதவள அபிவிருத்தியை நோக்காகக் கொண்டும் உள்ளூர் நிர்வாக நிறுவனங்களின் இயலளவை அதிகரிக்கும் பொருட்டு 3000 வடக்கு மற்றும் கிழக்கு மாகாண ஊழியர்களுக்கு தற்போது பயிற்சி வழங்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக ஜப்பான் மனிதவள புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தினூடாக வடகிழக்கைச் சேர்ந்த பல்வேறு அரச உத்தியோகத்தர்கள் ஜப்பானில் தற்போது உயர்கல்வி கற்கின்றனர். உத்தேச இளந் தலைவர்கள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வடகிழக்கைச் சேர்ந்த 26 இளைஞர்கள்" 18 நாள் பயிற்சி நெறியொன்றை "மோதலுக்கு பிந்திய மீள்கட்டமைப்பு மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புக" என்ற தொனிப்பொருளின் கீழ் பெறுவார்கள்.

மேற்கூறிய எல்லா நடவடிக்கைகளும் செயற்பாடுகளும் வடக்கு மற்றும் கிழக்கை அபிவிருத்தி செய்வதன் ஊடாக மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதிலும், மக்களின் சகவாழ்வுக்கான ஜப்பானின் அதிஉச்ச அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது. இந்த உவுதவிகளினூடாக மக்கள் நேரடியாக பயன்பெற்று தங்களது வாழ்வாதாரங்களை விருத்தி செய்து நீடித்த சமாதானத்தை நல்லிணக்க முயற்சிகளின் மூலம் பெற்று தன்னிறைவான சமூக பொருளாதார அபிவிருத்தியை அடைவார்கள் என ஜப்பான் எதிர்பார்க்கின்றது.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

அணியின் தலைவருமான
திரு.வ.செந்தூரன்



ஆகிய இருவரையும் யாழ்.கல்வி வலயத்தில் சேவைக்காலஆசிரிய ஆலோசகர்களாக (சுகாதாரமும் உடற்கல்வியும்) பதவி உயர்வு பெற்றமையையிட்டு மனமுவந்து பாராட்டுவதோடு மேலும் பல உயர்வுகளை ப் பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம்.
ஆவரங்கால்.



(சி/574963)

பவீசாரு பூங்கனிச் சோலை
PAVEE SHARU POONGANI SOLAI
311/1 பலாலி வீதி, கோண்டாவில் சந்தி, யாழ்ப்பாணம்.
விதை சட்டத்திற்கு அமைவாக விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை கண்ணோறுவை பேராதனையில் பதிவு செய்யப்பட்ட ஓர் நிறுவனம்.
T.P : 021 222 8199
Mob.No : 071 8475629
Reg No : SA/JFA/02677
STALL NO: 225
பழமரங்கள்
1Kg கொய்யா
Redlady பப்பா
மாதுளை
அலங்காரதாவரம்
செவ்வரத்தை
(100 வகையானது)
குரோட்டன்
மருந்துமூலிகை
கொக்கோ
பயன்தரு மரங்கள்
தென்னை } 5 வருடம்
செவ்விளனி 3 வருடம்
மாலைதீவு 3 வருடம்
காட்டுமரம்
மரக்கறி விதைகள்
கத்தரி வெண்டி
தக்காளி பாகல்
(சி/575007)
இம்மாதம் 21ஆம், 22ஆம், 23ஆம் திகதிகளில் சுப்பிரமணியம் பூங்காவுக்கு முன்பாக நடைபெறும் வர்த்தகக் கண்காட்சியில் சேவைகளை நாம் வழங்கவுள்ளோம். கடை இல.225.

DBL வாடிக்கையாளர்களுக்கு யாழ் மண்ணில் ஓர் அரிய சந்தர்ப்பம்
DBL
உத்தரவாதத்துடன்
FREE Service
தாங்கள் பாவிக்கும் Dongcheng மற்றும் DBL இயந்திரங்களுக்கான
இலவச சேவை தங்களை நாடி வந்துள்ளது




Hot Line...
0716 551551
2011 ஜனவரி 21 வெள்ளிக்கிழமை 9.30 to 5.00
THILLAYAMPATHI MOTORS
# 114, Stanly Road, Jaffna.
2011 ஜனவரி 22 சனிக்கிழமை 9.30 to 5.00
A.R.K. ENTERPRISES
# 150, Stanly Road, Jaffna.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காகில்ஸ் பூட் சிற்றியின் 152 ஆவது கிளை யாழ்ப்பாணத்தில்

அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அனைத்துப் பொருள்களையும் இலகுவான முறையில், குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் 152 விற்பனை நிலையங்களுடன் சிறந்த நுகர்வோர் சேவையை வழங்கிவரும். காகில்ஸ் பூட் சிற்றியின் 153 வது விற்பனை நிலையம் இலக்கம் 54, கன்னாதிட்டி றோட், ,யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இன்று காலை 8.30 மணிக்கு கோலாகலமாகத் திறந்து வைக்கப்படுகின்றது.வடக்கு வாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுடன் இலங்கையின் நிலையான அபிவிருத்திக்கு சிறந்த பங்களிப்பை வழங்குவது என்ற எமது உயர் நோக்கின் ஓர் முக்கிய நிகழ்வாக இது கருதப்படுகின்றது.

வாழ்க்கைக்கு அத்தியாவசியமான அனைத்துப் பொருள்களையும் அதிநவீன வசதிகளுடன் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்வதுடன் போதிய வாகனத் தரிப்பிட வசதியும் உண்டு. புத்தம் புதிய பழவகைகள், காய்கறி வகைகள்,மீன், இறைச்சிவகைகளையும்,காகில்ஸின் பதப்படுத்தப்பட்ட இறைச்சி வகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

காகில்ஸ் பூட் சிற்றியில் பொருள்களைக் கொள்வனவு செய்து விசேட விலைக் கழிவுகளையும், சீட்டிழுப்புகள் மூலம் பரிசில்களையும் வெகுமதிகளையும் தினம் தினம் பெற்றுக் கொள்ளுங்கள். (1)


# இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகளில் இப்போது இந்தியர்களே அதிகம் பேர்

இலங்கையின் சுற்றுலாத் தொழில் மீண்டும் சுறுசுறுப்படைந்துள்ளது. இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளில் இந்தியர்களின் எண்ணிக்கையே அதிகமாக உள்ளது.

இலங்கை வருமானத்தின் பெரும்பங்கை சுற்றுலாத் துறையே வழங்கி வந்தது. ஆனால் கடந்த பல ஆண்டுகளாகத் தமிழர்களின் இனப்பிரச்சினை காரணமாக இருந்துவந்த யுத்த சூழ்நிலை இந்தத்துறையைத் தொய்வடையச் செய்திருந்தது.

2009ஆம் ஆண்டு மே மாதம் உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்த பின் இலங்கைக்குச் சுற்றுலாப் பயணிகள் பெரும் எண்ணிக்கையில் வரத் தொடங்கியுள்ளனர்.

சுற்றுலா வர்த்தகத்திலிருந்து இலங்கைக்கு இப்போது கிட்டும் வருமானத்தின் பெரும் பகுதி இந்தியப் பயணிகளிடமிருந்தே வருகிறது.



2010ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 6,54,476 ஆகும். இவர்களில் 1,26,882 பேர் இந்தியர்கள்.

இவர்களுக்கு அடுத்தபடியாக இங்கிலாந்தைச் சேர்ந்தவர்களே அதிகம்பேர் இலங்கையைச் சுற்றிப் பார்க்க வந்துள்ளனர். இவர்களில் 83,634பேர் இந்தியர்கள். 81,594 பேர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர்கள்.

2009ஆம் ஆண்டை விட 2010ஆம் ஆண்டு 46.1 சதவீதம் அதிக பயணிகள் இலங்கை வந்துள்ளனர். சுற்றுலாப் பயணிகள் வரவு அதிகரிப்பால் சுற்றுலாத் துறையின் தேவைகளும் அதிகரித்துள்ளன. அதனால் ஹோட்டல்கள் மற்றும் லொட்ஜுகளில் அறை வாடகை மற்றும் சேவைக் கட்டணம் ஆகியவை உயர்ந்துள்ளன. உணவு வகைகளின் விலைகளும் ஏறியுள்ளன.

# "உலகின் முதலாவது 3D Camcorder" இலங்கையில் இப்போது அறிமுகம்'

இதோ 3D பிம்பங்களை வீட்டிலேயே அனைவரும் பதிவுசெய்து கொள்ளலாம்! Softlogic உடன் இணைந்து பனசோனிக் அறிமுகப்படுத்தும் உலகில் முதலாவது 3D Camcorder. இலங்கையர்களுக்கு புதியதொரு வீடியோ காட்சிப்படுத்தல் மற்றும் பதிவு செய்தல் அனுபவத்தை வழங்க உள்ளது.

உலகம் முழுவதிலும் பல பில்லியன் கணக்கான மக்கள் அனுபவித்து மகிழும் புரட்சிகரமான பனசோனிக் 3Dதொழிநுட் பத்தின் அனுகூலங்களையும், அதன் கண்ணைக் கவரும், தத்ரூபமான, வர்ண ஜாலங் கள் கொண்ட பிம்பங்களை இலங்கையர்களும் தற்பொழுது பார்த்து ரசித்து மகிழக் கூடியதாயிருக்கும்.

பனசோனிக் கூட்டுத்தாபனம், பனசோனிக் கூட்டுத் தாபனத்தின் ஆசியா மற்றும் ஒஷானியா முகாமைத்துவப் பிரிவு ஆகியவற்றின் முகாமைப்படுத்தல் பிரதம நிறைவேற்று அதிகாரியும் பனிசோனிக் ஏசியா பசுபிக் மியாமோடோ இந்த விசேட அறிமுக நிகழ்வில் கலந்து கொண்டு பேசும் போது பனசோனிக் 3D மாயாஜல தொழிநுட்பத்தின் புரட்சிகரமான அனுபவத்தை மதிப்புமிக்க பல்லாயிரக்கணக்கான இலங்கையர்களுடன் பகிர்ந்து கொள்வதில் தாம் பெருமகிழ்ச்சி அடைகிறார் என்று குறிப்பிட்டார்.

"நவீன தொழில்நுட்பக் கண்டு பிடிப்புகளில் புதிய அத்தியாயமாக விளங்கும் 3D தொழி நுட்பத்தை அறிமுகப்படுத்துவதில் பனசோனிக் பெருமிதம் அடைகின்றது. மேலும் இன்று மிகவும் சிறந்த பொழுதுபோக்கு அம்சமான 3D Camcorder அறிமுகப்படுத்துவதனூடாக எமது வாடிக்கையாளருக்கு மனதிற்கு இனிய உச்சபட்ச பொழுது போக்கு அனுபவங்களைக் கிடைக்கச் செய்கின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# கொள்கலன்களை மாற்றி அமைப்பதற்கு முதலில் ISO சான்றிதழ் பெற்ற இலங்கை நிறுவனம்

ஹேலீஸ் குழுமத்தின் ஓர் அங்கமான லொஜிவென்சர்ஸ் நிறுவனம் கொள்கலன்களைப் பல்வேறு தேவைகளுக்கும் ஏற்ற அலகுகளாக மாற்றியமைக்கும் "போர்டபிள் கெபின்" (Convertainers) தொழில்துறையில் சர்வதேச அங்கீகாரமுடைய ISO 9001: 2008 பெற்ற முதலாவது உள்ளூர் நிறுவனம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது.

ஐக்கிய இராஜ்ஜியத்தில் தலைமையகத்தைக் கொண்டுள்ள பெயர்பெற்ற லோயிட்ஸ் ரெஜி ஸ்டர் குவாலிடி அசூரன்ஸ் வரையறுக்கப்பட்ட (LRQA) நிறுவனத்தால் இந்தச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. தரத்தில் கவனம் செலுத்தும் வெளிநாட்டுச் சந்தைகளுக்கான வாய்ப்புக்களை மேலும் விஸ்தரிக்க இது வழி வகுத்துள்ளது என்று கம்பனி அறிவித்துள்ளது.

தற்போது உள்ளூர் "போர்டபிள் கெபின்" சந்தைத் தேவையில் 80 சதவீதத்தை லொஜிவென்சர்ஸ் நிறுவனம் பூர்த்தி செய்கிறது. அத்தோடு இந்தியா, மாலைதீவு, தாய்லாந்து மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்குத் தனது மாற்றியமைக்கப்பட்ட கொள்கலன்களை (Convertainer) ஏற்றுமதி செய்தும் வருகின்றது.

வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ப கொள்கலன்களை மாற்றிமைத்து உருவாக்குதல், ஆடை உற்பத்திகள் மற்றும் திரவங்களை அடைக்கக்கூடியதாகக் கொள்கலன்களை உருவாக்கல், பராமரித்தல், பழுதுபார்த்தல், சரக்குக் கொள்கலன்களை மீள விற்பனை செய்தல், பாதுகாப்பு முத்திரைகள் மற்றும் ஹோலோகிராம்களை விற்பனை செய்தல் என லொஜிவென்சர்ஸ் தனது வெலிஸர வேலைத் தளத்தில் மேற்கொள்ளும் பல நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டே இந்தத் தரச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

# சன் ரீவியையும் இணைத்து டயலொக் 74 சனல்களில் முழுநேர ஒளிபரப்பு

செல்லிடத் தொலைபேசித் துறையில் 15 வருட அனுபவத்துடன் ஜாம்பவானாகத் திகழும் டயலொக் 2007இல் தொலைக்காட்சித் துறையிலும் காலடி பதித்து வெற்றிக்கொடி நாட்டி வருகிறது. இப்போது இந்தியாவின் புகழ்பெற்ற சன் ரிவி, சன்மியூசிக், KTV ஆகியவற்றையும் இணைத்து வருடத்தின் 365 நாட்களிலும் இரவும் பகலும் 24 மணி நேரமும் 75 அலைவரிசைகளில் நிகழ்ச்சி களை ஒளிபரப்பி வருகிறது. ஒன்றரை லட்சம் வீடுகளில் டயலொக் TV நிகழ்ச்சிகளைப் பார்த்து பல லட்சம் மக்கள் மகிழ்கிறார்கள்.

இப்படி டயலொக் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் நுஷாட் பெரேரா சுடர் ஒளியுடனான நேர்காணலில் தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவித்தவற்றின் விவரம் வருமாறு:-

இன்று பல்வேறு தொலைபேசிச் சேவை கள் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட் டுள்ள போதிலும் டயலொக் தனக்கென ஒரு தனியிடத்தைப் பெற்றுள்ளது.

எமது தொலைக்காட்சி சேவை 2007இல் ஆரம்பித்தது. செல்லிடத் தொலைபேசி சேவையில் ஆரம்பித்த நாம் தொலைக்காட்சிச் சேவைக்கு எவ்வாறு சென்றோம்? ஏன் சென் றோம்? இவை கேள்விகளாக உள்ளன.

தொலைத் தொடர்புத் துறையில் தொலைபேசியும் தொலைக்காட்சியும் ஒன்றுட னொன்று நெருங்கிய தொடர்பைக் கொண் டுள்ளன. இன்று தொலைபேசியில் தொலைக் காட் சியைப் பார்க்கும் வசதிகள் உள்ளன.

தற்போது டயலொக் 75 சனல்களை ஒளிபரப்பு செய்து வருகிறது. இறுதியாக நாம் எமது வரிசையில் இந்தியாவின் சன் ரிவி, சன் மியூசிக், KTV ஆகிய மூன்றையும் இணைத்துள் ளோம்.

எமது ஒளிபரப்பு நாளாந்தம் 24 மணி நேரமும் வருடம் 365 நாட்களிலும் நடை பெறு கிறது. முழு நாட்டிலும் எமது ஒளிபரப்பு தெளிவாக இருப்பதற்கான சிறந்த தொழில்நுட்ப வசதிகளை நாம் ஏற்படுத்தியுள்ளோம்.

இலங்கையில் இப்போது 1,50,000வீடு களில் டயலொக் ரி.வி. பாவனையில் உள்ளது. யாழ்ப்பாணத்தில் ஸ்ரான்லி வீதியில் எமது கிளைக் காரியாலயம் கடந்த 11 வருடங்களாக இயங்கி வருகிறது.

அத்துடன் மட்டக்களப்பு, திருகோண மலை, வவுனியா, அம்பாறை ஆகிய பிரதேசங் களிலும் எமது கிளைக் காரியாலயங்கள் செயற்படுகின்றன. விரைவில் சாவகச்சேரியிலும் கிளையொன்றை ஆரம்பிக்கவுள்ளோம்.

தமிழ் நிகழ்ச்சிகளுக்காக 'தி'என்ற விசேட பெக்கேஜ் 30அலைவரிசைகளுடன் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

யுத்தம் முடிவடைந்த பின் தொலைத் தொடர்புத் துறை வெகு வேகமாக முன்னேறி வருகிறது.

யாழ்.குடாநாட்டில் எமக்கு நல்ல வர வேற்பு கிடைத்துள்ளது. வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையை வழங்கிட நாம் இத் துறையில் நிபுணத்துவம் பெற்ற பணியாளர்களை நாடு முழுவதும் நியமித்துள்ளோம்.

விற்பனைக்குப் பிந்திய சிறப்பான சேவையையும் நாம் வழங்கி வருகின்றோம். எதிர்காலம் பற்றி மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளோம். இப்படி அவர் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணத்தில் வர்த்தகக் கண்காட்சி

நாளை முதல் மூன்று நாட்கள் யாழ்ப்பாணத்தில் 'உதயன்' பத்திரிகையின் அனுசரணையுடன் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி இடம் பெறவிருக்கிறது. இதில் இந்தியா, மலேசியா ஆகிய நாடுகளின் முன்னணி வர்த்தக நிறுவனங்களும் பங்குபற்ற விருக் கின்றன. கண்காட்சியின் முதல்நாள் ஆரம்ப நிகழ்வில் இந்திய, இந்தோனேசிய நாடுகளின் தூதர்கள் பங்கேற்கவிருக்கின்றனர்.

வர்த்தகக் கைத்தொழில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின்நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத் தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மற்றும் பலர் விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.


யாழ்ப்பாணம் பிரதான வீதி, சுப்பிரமணியம் பூங்காவுக்கு முன்பாக நடை பெறவுள்ள இந்த மாபெரும் சர்வதேசக் கண்காட்சியில் சுமார் 250 காட்சிக் கூடங்கள் அமைக்கப்படவுள்ளன. "வியாபாரத்துக்கான உங்கள் திறவு கோல்" என்ற தொனிப்பொருளில் இடம்பெறவுள்ள இந்தக் கண் காட்சியில் விவசாயம், உணவு பதனிடல், பொதியிடல், கட்டுமாணத்துறை, மீன்பிடி, தகவல் தொழில்நுட்பம், சுற்றுலாத்துறை, மோட்டார் உப கரணங்கள், அழகுக் கலை மற்றும் சிறிய நடுத்தர உற்பத்தித் துறை, முக்கிய பிறதுறைகள் ஆகியவற்றின் நவீன இயந்திர சாதனங்களையும் சேவைகள் ஆகியவற்றையும் இந்திய மலேசிய நிறுவனங்கள் காட்சிப்படுத்தவுள்ளன.

இலங்கையின் தென்பகுதியைச் சேர்ந்த பல்வேறு தேசிய கைத்தொழில் நிறுவனங்களும் தமது உற்பத்திப் பொருள்கள், இயந்திர சாதனங்கள் ஆகியவற்றைக் காட்சிப்படுத்தவுள்ளன. அவை தொடர்பான முழுமையான விளக்கங்களும் வழங்கப்படவுள்ளன. யாழ்ப்பாணம் வர்த்தக கைத்தொழில் மன்றமும் வரையறுக்கப்பட்ட இலங்கைக் கண்காட்சி மற்றும் மாநாடுகள் சேவைகள் ஆகிய தனியார் நிறுவனமும் இணைந்து இக்கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி துணை
கரவெ

# அருள்மிகு ஸ்ரீ வெல்ல
# மஹா கும்பாபிஷேக சிற



## நாட்டில் சாந்தியும் சமாதானமும் ஏற்பட

"வானுலகும் மண்ணுலகும் வாழ மறைவாழ
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுகனைப் பரவி அஞ்சலி செய்விப்பாம்"

சிவபூமியாம் ஈழத் திருநாட்டில் வடபால் அமைந்த யாழ்ப்பாணம்,வடமராட்சிப் பகுதியில் சைவமும் தமிழும் செழித்தோங்கும் கரவையம்பதியில் கோயில் கொண்டருளியிருக்கும் வெல்லன் வீரகத்தி விநாயகப் பெருமானுக்கு குடமுழுக்கு விழா 20.01.2011 அன்று தைப்பூசத் திருநாளில் நடத்துவதற்கு திருவருள் கைகூடியுள்ளது. இவ்வண்ணம் குடமுழுக்கு பெறும் விநாயகப் பெருமானது அருளால் நாட்டில் சாந்தியும் சமாதானமும்,ஏற்பட்டு எம்பெருமானது மீளா அடியவர்கள் எல்லோருக்கும் சகல சௌபாக்கியமும் கிடைக்க எல்லாம் வல்ல பரம்பொருளின் அருள் பெற்று நல்லாசி வழங்கி அமைகின்றேன்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

ஸ்ரீலஸ்ரீ வேதாரணியக் குருக்கள்
கனகசபைக்குருக்கள்
பிரதமகுரு, கரவை வெல்லன் விநாயகர் ஆலயம்,
கருணைம்பதி வெற்றிகாட்டு விநாயகர் ஆலயம்.

## தேர்த் திருப்பணிக்கும் அடியார்களின் பூரண ஆதரவு வேண்டும்



வெல்லன் வீரகத்தி சேதக விநாயகராலயம் வடமராட்சிப் பகுதியிலுள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களிலொன்றாகும். சைவ ஆகம விதிப்படி நித்திய நைமித்திய கருமங்கள் சிறப்பாக நடைபெறும் ஓர் முன் மாதிரியான ஆலயமாகும். 1987ஆம் ஆண்டு "வடமராட்சி விடுவிப்பு" நிகழ்வின் போது இவ்வாலயம் மிக மோசமான சேதத்திற்கு உள்ளாக்கப்பட்டது. அங்கு ஓர் தற்காலிக முகாம் அமைக்கப்பட்டு ஆலயமும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசமும் ஓர் உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு 21 நாள்களாக அவர்கள் கையில் இருந்தது. ஆலயத்தின் வளங்கள் சூறையாடப்பட்டதுடன் ஆன்மீகத் தன்மையும் கேள்விக்குறியாக்கப்பட்டது. அடியார்களின் விடா முயற்சியினாலும் புலம் பெயர்ந்த கரவெட்டி வாசிகளின் தாராள நிதியுதவியினாலும் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு 1988ஆம் ஆண்டு புனருத்தாரண-சம்ரோஷன மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது

கடந்த ஐந்து ஆண்டுகளுக்குள் ஆலயத்தில் பல முன்னேற்ற நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்ற தாரக மந்திரத்திரத்திற்கமைய தென்னிந்திய ஸ்தபதி ஞானமூர்த்தியின் மேற்பார்வையில் ஒரு பஞ்ச தள 57 அடி இராச கோபுரம் கட்டி முடிக்கப்பட்டது. அதனோடு இணைந்த 40 அடி 36 அடி அளவுகள் கொண்ட ஒரு மணி மண்டபமும் கட்டி முடிக்கப்பட்டது. நாம் தற்புகழ்ச்சிக்காகக் கூறவில்லை. இந்த இராச கோபுரமும் மணிமண்டபமும் சிறந்த அமைப்பைக் கொண்டவை என்பது கட்டிடக் கலைஞர்களின் அபிப்பிராயமாகும். நவீன வளைவுகள் கொண்ட ஒரு விசாலமான தீர்த்த மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றுடன் பழம் பிள்ளையாருக்கோரு ஆலயம்,வள்ளி தெய்வானை சமேத முருகனுக்கு ஒரு ஆலயம்,இதுவரை காலமும் மாமண்டபத்தில் இருந்த நாகதம்பிரானுக்கு ஓர் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளன. விநாயகராலயத்தின் நவக்கிரக பீடம் பொருத்தமற்றது என்ற அபிப்பிராயத்தை நாமும் பல நூல்களில் கண்டிருக்கிறோம். ஆனால் லண்டனில் வசிக்கின்ற ஓர் அடியார் திரு வெற்றிவேலு சபாநாதன், இளமையிலிருந்து ஓர் விநாயக பக்தனின் விடாப்பிடியான முயற்சியில் நவக்கிரக விக்கிரகங்கள் ஆலயத்தை வந்தடைந்தன. அது மட்டுமல்லாமல் நவக்கிர பீடமமைப்பதற்குரிய நிதியையும் அனுப்பியிருந்தார். விநாயகர் சித்தமென்று ஓர் அழகான நவக்கிரக பீடத்தையும் அமைத்துள்ளோம். புலம் பெயர்ந்த அன்பர்கள் அடியார்களின் தாராள நிதியுதவியில்லாமல் இத்திருப்பணிகளை நாம் நிறைவேற்றியிருக்க முடியாது. நிதி சேகரிப்புக்கு கனடாவில் வசிக்கும் திரு சிற்றம்பலம் அம்பிகாவரனும் லண்டனில் வசிக்கும் திரு முருகேசு சிவபாதசுந்தரமும் பெருமுயற்சி எடுத்தார்கள். அவர்களிற்கு விநாயகப் பெருமானின் அனுக்கிரகம் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம். மேலும் லண்டனில் வசிக்கும் திரு செல்வராசா என்பவர் காலஞ்சென்ற தனது பாசமுள்ள துணைவி மாலினியின் பெயரால் கணிசமான நிதி அனுப்பியிருந்தார். அவருக்கும் விநாயகப் பெருமானின் அனுக்கிரகம் தாராளமாகக் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.

இன்னும் ஓர் முக்கியமான திருப்பணி இருக்கின்றது. எங்கள் ஆலயக் கட்டுத்தேர் மிக மிகப் பழையது. தேர் கட்டுவோரும் வரும் காலத்தில் கிடைப்பார்களோ தெரியாது. ஒரு இடைவெளி விட்டு தேர்த்திருப்பணியை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளோம். அடியார்கள் பூரண ஆதரவு தருவார்கள் என்ற பலமான நம்பிக்கையுள்ளது. முன்கூறப்பட்ட திருப்பணிவேலைகளை மிகநேர்த்தியாக நிறைவேற்றித் தந்த பெருமை தமிழ் நாடு திருச்சிராப்பள்ளி முடிகொண்டான் ஸ்தபதி கிருஷ்ணமூர்த்தி மாரியப்பனைச் சேரும். அவர் ஒரு சகல கலாவல்லன் . இரவு பகலென்று பாராது அயராது உழைப்பவர். உள்ளூர் உதவியாளர்களின் உதவியுடன் மிகச்சிறப்பாக மேற்படி வேலைகளைச் செய்துள்ளார். அவருக்கு எம் பெருமானின் அனுக்கிரகம் கிடைப்பதாக. எம்பெருமானின் திருப்பணி வேலைகளிலும் மற்றும் நித்திய நைமித்திய பணிகளிலும் பேராதரவு தரும் அடியார்கள், குறிப்பாக இளைய தலைமுறையினர் மற்றும் பெருமதிப்பிற்குரிய குருமூர்த்திகளுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

வ.கந்தசாமி
நிர்வாக சபைத் தலைவர்


*ஆதியிலே தான் தோன்றி யாயமர்ந்த*
*ஆனைமுக நாயகனே கணேசா போற்றி*
*காதலுடன் போற்றுவார் துன்பம் தீர்க்கக்*
*கந்தனுடன் வீற்றிருக்கும் தேவா போற்றி*
*மாதழகி வல்லபையின் கணவாபோற்றி*
*வருமிடர்கள் தீர்க்கின்ற செல்வா போற்றி*
*வேதமுயர் கரவெட்டிப் பதியமர்ந்த*
*வெல்லன்வி நாயகரே போற்றி போற்றி*

அருட்கவி

## வேண்டிய அருளும் வெல்லன் விநாயகர்

*திருவளர் செல்வச் சிறப்புறு கரவைப்*
*பெருவளம் பதியிற் பெட்புறு வெல்ல*
*னெனுந்தலம் புண்ணிய வியல்புறு தலமே*
*மனும்பதி யிதனிடை வாழ்வுறு விநாயகர்*
*எவ்வெவ ரெவ்வகை யெவ்வெவை*
*வேண்டினும்*
*அவ்வகை யினிதி னருள்புரி வள்ளலே*
*யிவன்றிரு வடிக ளென்றும் வழிபடு*
*மவரெலாம் புண்ணிய வருட்பெருஞ்*
*செல்வரே*
*வாழி கரவை வாழிவெல் லன்பதி*
*வாழி விநாயகர் வாழியிங் குளோரே.*

ஸ்ரீமத் சு. தியாகராசக் குருக்கள்



## அருள்மிகு வெல்லன் விநாயக

சைவ ஆசாரமும் கல்விச் சிறப்பும் சமூக நாகரிகமும் மேம்பட்டு விளங்கும் கரவையம்பதியில
ஆலடி வெல்லனும் பள்ளக்கிராயும் இணைந்த நிலப்பரப்பில் மருத மரத்தின் கீழ் அப்பகுதியி
வைரவப்பெருமானை வைத்து வழிபாடு செய்யப்பட்டு வந்தது. வைரவப் பெருமானுக்கு சிறு கோட்
இரத்தம் வடிந்தது. இதனைக் கண்ட அப்பகுதி மக்கள் அப்பகுதி மணியகாரனாக இருந்த வீரகத்தி
போது சேதப்பட்ட கருங்கல்லினால் ஆன விநாயகர் விக்கிரகம் ஒன்றைக் கண்டெடுத்தனர். இதனை
விநாயகருக்கு வீரகத்தி சேதக விநாயகர் என்ற பெயர் வழங்கலாயிற்று.
வைரவப் பெருமானை வைத்து வழிபட்ட இடத்தில் விநாயகப் பெருமானை வைத்து வழிபட்
திகழ்கிறது.
தான் தோன்றியாய் மருதநிலத்தில், மருத மரத்தில் தோன்றிய விக்கினங்கள் தீர்க்கும் விநாயக
மக்கள் அதீத நம்பிக்கையோடு வழிபாடு செய்து வந்தனர். அப்பகுதி சைவக் குடும்பத்தாரால் பூ
இருந்து குடிபெயர்ந்து கரணவாயில் வசித்து வந்த சைவக்குருமார்களினால் ஆகம முறைப்படி பூ
சித்திரை மாதத்தில் அப்பகுதி மக்கள் அனைவரும் இணைந்து பெரும் பந்தலிட்டு பௌர்ணமி
உற்சவம் நடைபெற ஆரம்பமானது. இவ்வலங்கார உற்சவத்தின் போது இறைவனை அலங்கரி
வானவேடிக்கைகளுடன் அலங்கார உற்சவங்கள் நடைபெற்று வந்தன. இவ் அலங்கார உற்சவத்
பிடித்து பெரும் தீ மூண்டது. அதில் ஒரு சிலர் ஆலயத்திலேயே தீயுடன் சங்கமமாகினர். பலர் எரிகாய
கோயில் எனவும் இதில் எரிந்தவர்களை எரிஞ்சார் வீட்டுக்காரர் எனவும் அழைப்பதை இன்றும்
வேடிக்கைக்காக வைக்கப்பட்ட ஏராளமான வான வேடிகளை வாணக்காரர் சமயோசிதமாக ஆலயக்
இக் கேணித் தண்ணீரில் கந்தக மணத்தினை உணரலாம்.இந்நிகழ்வுகள் அக்காலப்பத்திரிகைகளி
இந் நிகழ்வின் பின்னர் ஆலய நெறிமுறைகளை ஒழுங்கமைப்பதற்காக சமயோசிதமாக செயற்
செய்ய நியமித்தனர்.
சேதப்பட்ட விநாயகரது உக்கிரத்தாலேயே இது ஏற்பட்டது என்ற காரணத்தால் வேறு
ஆலோசனைக்கமைய இந்தியாவில் இருந்து புதிய விக்கிரகம் தருவிக்கப்பட்டு ஆலயத்தை புனரமை
தூய்மையையும் பேணுவதுடன் அடியவர்கள் மனத்தூய்மையுடன் வழிபாடு செய்ய வேண்டும்
கட்டப்பட்டது. இவ் ஆலயத்தில் புதிய விக்கிரகத்தை பிரதிஸ்டை செய்து விஸ்வநாதக் குருக்கள் அ
மகனான வீரகத்தி என்பவர் முகாமையாளராகப் பொறுப்பேற்று வசந்த மண்டபம் அமைக்கப்பட்
20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆலயப் பொறுப்புக்களைப் பொறுப்பேற்ற வடமராட்சி முகா
பொருட்டு கட்டைக் கோபுரம் ,பிரதான கோபுரவாசல், ஆலய சுற்றுப் பிரகாரம் ஆகியவற்றைக்
சித்தாந்த, சைவ ஆகம முறைப்படி நடை பெற வழி வகுத்தார்.
இவ் ஆலயம் இன்றும் ஊர் மக்களின் பொதுச் சொத்தாக இருக்க வேண்டும் என்பதை எடுத்த
ஆலய ஆதீனத்தாரிலிருந்து தெரிவு செய்யப்பட்ட நிர்வாகத்தினரிடம் ஒப்படைத்தார். இவரே ஆல
பல ஊர்களிலும் இருந்து வருகின்ற யாத்திரிகர்கள்,தொண்டர்கள் உணவருந்துவதற்காகவும்
ஆலயத்தில் இருப்பதனைக் காணலாம்.
ஆலயத்தின் இறை அபிஷேகத்துக்குப் பயன் படுத்துகின்ற பொருட்கள் யாவும் ஆலய உற்
பின்பற்றப்பட்டு வருகிறது.300 க்கு மேற்பட்ட பசுமாடுகள் ஆலயத்தில் பராமரிக்கப்பட்டு அதிலி
நடைபெற்று வருகிறது. இதே போன்று விபூதி,பூ,வில்வம், போன்ற பொருட்களும் ஆலயத்திலே உ
கற்பூர ஆராதனைக்கு விளை கற்பூரம் மாத்திரமே பயன்படுத்தப்படும். அவ்வூர் மக்களால்
போன்ற பல சொத்துக்கள் ஆலயத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது.
சித்திரை மாத சித்திரா பௌர்ணமி தினத்தை தீர்த்தோற்சவமாகக் கொண்டு பதினொரு
வள்ளி,தெய்வானை சமேத முருகப்பெருமானும் வைரவப்பெருமானும் காலையில் திருச்சேந்
கைலாயவாகனம், குதிரை ஆகிய கலை அம்சத்துடன் கூடிய வாகனங்களிலும் திருவீதிஉலா வந்து
இன்று ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ வே.கனகசபைக் குருக்கள் தலைமையில் நடைபெற
பெருமானுக்கு தென்மேற்கு மூலையில் ஆலயம் அமைத்து வீரகத்தி சேதக விநாயகப் பெருமானை
இக் குடமுழுக்கு நிகழ்வில் அனைத்து அடியார்களுக்கும் வெல்லன் விநாயகரின் அருள் கிடைக்கு

அதிப


## வெல்லன் விநாயகனின் அருள் வேண்டி நிற்கின்றோம்

**ஸ்ரீ ஐங்கரா பல்பொருள் வாணிபம்**
பிரதானவீதி,
நெல்லியடி, கரவெட்டி.

**அபிராமி ஸ்ரோர்ஸ்**
பிரதான வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

**வேழமுகன் ஏஜென்சி தபாற்கந்தோர்**
பொலிஸ் நிலையம்முன்பாக,
நெல்லியடி, கரவெட்டி.

**ஹரன் தேநீர்ச்சாலை**
146, பிரதான வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

**ஜெயசெந்தினி நகைமாடம்**
பிரதான வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

**செல்லமுத்தூஸ்**
[illegible]
நெல்லியடி, கரவெட்டி.


**கணேசன் மோட்டோர்ஸ்**
பிரதானவீதி,
நெல்லியடி, கரவெட்டி.

**அம்சன் ஒளியகம்**
பிரதானவீதி,
நெல்லியடி, கரவெட்டி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணபதி துணை
வெட்டி

# ல்லன் விநாயகர் ஆலயம்
# சிறப்பிதழ் - 20.01.2011






## வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும்

இயற்கை வளமும், வன்ப்பும் திரம்பி வழிகின்ற ஈழத் திருநாட்டின் வடக்கே சிவபூமி எனும் சிறப்புப் பெற்ற யாழ்ப்பாணத்து வடமராட்சியில் சைவாகம நெறிமுறைகளை உவந்து நோற்கும் சைவ மக்கள் நிறைந்த கரவையம்பதியிலே பெருங்கோயில் கொண்டு எழுந்தருளி வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் அருளுகின்ற எல்லாம் வல்ல வெல்லன் வீரகத்தி சேதக விநாயகப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் தைப்பூசத் திருநாளாகிய இன்று மகா கும்பாபிஷேகத்தை யானும் ஒருவனாக நின்று நடாத்தி வைக்கும் அருள் கிடைத்ததையிட்டு மனப் பூரிப்படைகின்றேன். இந்த மங்களம் நிறைந்த நன்நாளில் உலக மக்கள் அனைவரும் சகல செளபாக்கியங்களும் பெற்று வாழவேண்டுமென அவனருளை வேண்டி ஆசிகூறி அமைகின்றேன்

"சர்வே ஜனாகா சுகினோ பவந்து"

சிவஸ்ரீ தியாக சம்பந்தக் குருக்கள்
(கரவை வெல்லன் விநாயகரலய குரு)



## எல்லாம் வல்ல வெல்லன் விநாயகனின் அருள்மயத் தோற்றங்கள்

திருவருளும் குருவருளும் நிறைந்து பொலிந்து விளங்கும் எல்லாம் வல்ல வெல்லன் விநாயகனின் ஆலயம் அழகுற புது மெருகூட்டப்பட்டிருப்பது கண்டு அகமிக உருக உவகை பொங்குகின்றது.1933ஆம் ஆண்டு இராஜகோபுரம் அமைப்பதற்காக அத்திபாரமிடப்பட்டு அடித் தளத்துடன் பன்னிரு கருங்கற் தூண்கள் நிறுத்தப்பட்டு வியாழவரிக்கு மேல் தடைப்பட்டிருந்த பஞ்சதள இராஜகோபுரம் நீண்ட காலம் நிறைவேறாதிருந்தது. பஞ்சதள இராஜகோபுரம் ஐம்பொறிகளையும் குறித்து தூலலிங்கமாக விளங்கித் தெய்வீக உணர்வை வளர்க்கின்றதென்பதை அறிந்த அடியவர்கள் 2003ஆம் ஆண்டில் திருப்பணிச் சபையை அமைத்து 2003 நவம்பரில் பஞ்சதள இராஜகோபுர வேலையைப் பெரும் தயக்கத்துடன் தொடர்ந்தனர். சலியா உழைப்பும், தளரா நெஞ்சமும், இடையறா ஊக்கமும் கொண்டு உழைத்தமையால் பஞ்சகோபுரம் புத்துயிர் பெற்று இன்று புதுப் பொலிவுடன் நிமிர்ந்து நிற்கின்றது.

இப்பணிக்கு கலைவல்ல நல்லறிஞன் தமிழக மாமல்லபுரத்தைச் சேர்ந்த ஸ்தபதி திரு C.ஞானமூர்த்தி அவர்களின் ஆலோசனை வழிகாட்டலுடன் உருவாக்கத்தில் ஆரோக்கியமான கட்டடப் பணிகள் தொடர்ந்து சிற்பாச்சாரியார் திரு கி.மாரியப்பன் அவர்களின் கலை வல்ல சாஸ்திர விதிப்படி தனது உதவியாளர்களுடன் கோபுர நிர்மாணப் பணி நிறைவேறியது. தமிழக திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஓவியக் கலைஞரான திரு க.ரெங்கநாதன் அவர்களின் குழுவைச் சேர்ந்த தகுதியும் திறமையும் மிக்க ஓவியக் கலைஞர்களான திரு க.இராமச்சந்திரன், திரு வீ.ஜோதிமுருகன் ஆகியோரின் கைவண்ணத்தினால் மெருகூட்டப்பட்டுத் தோன்றும் காட்சிப் பேற்றினை யாவரும் போற்றுகின்றனர். 2007ஆம் ஆண்டு கோபுர குடமுழுக்கு விழா நிறைவேறியது.

அதனைத் தொடர்ந்து 2009ஆம் ஆண்டு ஆலயக் கோபுர முன்வாசலில் மணிமண்டபம் அமைப்பதற்காக பஞ்சகோபுரத் திருப்பணிக்குக் கட்டடச் சிற்பக் கலைஞர் ஸ்தபதி திரு கி.மாரியப்பன் தமிழகத்திலிருந்து மீண்டும் வரவழைக்கப்பட்டு மணிமண்டபம் வெல்லன் விநாயகனின் அருட்துணையுடன் அழகுற அமைத்து அடியவர்களின் மனங்குளிர நிறைவேறியது.

ஆலயத்தின் கருங்கல் மூலஸ்தான அடித்தளமும் வெள்கற்களாலான சுவரும் நவீன முறையில் புதுப்பிக்கப்பட்டு பழமையும், புதுமையும் விளங்க மகிமையுடன் திருக்காட்சி தருகின்றது.

இரண்டாம் வீதி தென்மேற்கு மூலையில் ஆதிப்பிள்ளையாரும் வடமேற்கு மூலையில் வள்ளி தெய்வானை சமேதராய் முருகப் பெருமானும் சிற்பங்கள் நிறைந்த அற்புதக் காட்சியுடன் அழகுற ஆலயம் அமைத்து பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார்கள். ஆன்மாக்கள் கிரகதோஷ நிவாரணம் பெற வழிபாடியியற்றத்தக்க பொருத்தமாக நவக்கிரக மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் வனப்புமிகு தோற்றத்துக்கும் புனிதத்துக்கும் பொருத்தமாக புது மலர்ச்சியுடன் மூன்று வாயில் கொண்ட தீர்த்த மண்டபம் திடமான வேலைப்பாடுகளுடன் அமைந்துள்ளது.இத்திருப்பணிகள் நிறைவேறிட தவப்பணி கொண்டு விளங்கும் தேவஸ்தான ஆதீனமரபினரும் வெல்லன் பிள்ளையாரின் அடியவர்களும் அன்பர்களும் ஊரவர்களும் ஒருமனப்பட்டு ஒன்றித்து வழங்கிய நன்கொடைகளும் ஆயிரமாயிரமாக அள்ளித் தந்த பெருநிதியும் ஆதீன ஆதனங்களின் வருமானங்களும் பெரிதும் உதவின.

தொடர்ந்தும் ஆலயத்தின் திருப்பணிகள் தொடர வேண்டியுள்ளது. இரண்டாம் வீதி தளவேலைகள் சீராக்கம் பெற வேண்டியுள்ளது என்பதையும் பணிவன்புடன் அறியத் தருகின்றேன். பலருக்கும் நன்றிகள் கூறக் கடமைப்பட்டுள்ளேன். மகிழ்ச்சியுடன் கூடிய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

க.சபாநாயகம்,
செயலாளர்.
(ஆசிரியர், யா/இந்துக் கல்லூரி)

## விநாயகர் திருத்தல வரலாறு

ங்கும் கரவையம்பதியில் மிகப்பழமை வாய்ந்த ஆலயமாக விளங்குவது இவ் ஆலயமாகும்.
மரத்தின் கீழ் அப்பகுதியில் இருந்த சைவக் குடும்பத்தைச் சேர்ந்த கறுவலப்பா குடும்பத்தாரால்
பெருமானுக்கு சிறு கோட்டில் அமைக்கும் முகமாக இம் மரத்தை வெட்டிய போது அதில் இருந்து
ரனாக இருந்த வீரகத்தி மணியம் அவர்களின் துணையுடன் அவ் இடத்தைத் தோண்டிப் பார்த்த
கண்டெடுத்தனர். இதனை சிறுகோட்டிலில் வைத்து வழிபாடு செய்து வந்தனர். இதனால் இவ்

மானை வைத்து வழிபட்டாலும் இன்றும் இவ் ஆலயம் வைரவ முகூர்த்தமுடைய ஆலயமாகத்

ங்கள் தீர்க்கும் விநாயகப் பெருமானை விவசாயத்தை ஜீவனோபாயமாகக் கொண்ட அப்பகுதி
வக் குடும்பத்தாரால் பூசை வழிபாடு செய்யப்பட்டு வந்த ஆலயம் பின்னர் வேதாரணியத்தில்
ல் ஆகம முறைப்படி பூசை வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.
பந்தலிட்டு பௌர்ணமி தினத்தில் பொங்கலிட்டுப் படைத்து வந்தனர். காலப்போக்கில் அலங்கார
இறைவனை அலங்கரித்து ஓலை,கிடுகுகளால் வேயப்பட்ட பெரும் பந்தலை அலங்கரித்து
வ் அலங்கார உற்சவத்தின் போது தீவட்டியிலிருந்து தெறித்த தீ அலங்கார வாகைமாலையில்
மமாகினர். பலர் எரிகாயங்களுக்கு உட்பட்டனர். இதனால் இவ்வாலயத்தை எரிந்த பிள்ளையார்
அழைப்பதை இன்றும் காணலாம். இவ் ஆலயம் எரிந்த போது ஆலயத்திருவிழாவின் வான
சமயோசிதமாக ஆலயக் கேணியினுள் போட்டதனால் பெரும் அழிவு தவிர்க்கப்பட்டது. இன்றும்
அக்காலப்பத்திரிகைகளில் [ஈழகேசரி] பிரசுரிக்கப்பட்டிருந்தது.
சமயோசிதமாக செயற்பட்ட வாணக்காரர் குடும்பத்தைச் சேர்ந்த கந்தப்பு அவர்களை முகாமை


காரணத்தால் வேறு விக்கிரகத்தை பிரதிஸ்டை செய்ய வேண்டுமென்ற குருமார்களின்
டு ஆலயத்தை புனரமைப்பதற்காக ஊர்மக்களும் இணைந்து ஆலயம் என்பது சுத்தத்தையும்
பாடு செய்ய வேண்டும் என்பதனைக் குறியீடாகக் காட்டுவதற்கு வெள்ளைக் கற்களினால்
ஸ்வநாதக் குருக்கள் அவர்களால் முதல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. கந்தப்பு அவர்களின்
ண்டபம் அமைக்கப்பட்டது.
பெற்ற வடமராட்சி முகாமையாளரான சிற்றம்பல முதலியார் ஆலயக் கட்டமைப்பை சீர்செய்யும்
காரம் ஆகியவற்றைக் கட்டுவித்ததுடன் ஆலய நித்திய,நைமித்திய கிரியா முறைகளை சைவ

ண்டும் என்பதை எடுத்துக்காட்ட ஆலய ஆளக சட்டதிட்டத்தை வரைவித்து ஆலய நிர்வாகத்தை
டத்தார். இவரே ஆலயத்தின் முதல் தலைவராகவும் இருந்தார்.
னவருந்துவதற்காகவும் ஆலய மூன்றாம் வீதிக்கு வெளியில் மடங்கள் கட்டப்பட்டு இன்றும்

ள் யாவும் ஆலய உற்பத்திகளாகவே இருக்க வேண்டும் என்ற நடைமுறை நீண்ட காலமாக
ராமரிக்கப்பட்டு அதிலிருந்து பெறப்படுகின்ற பாலால் மட்டுமே மூலமூர்த்தியின் அபிஷேகம்
களும் ஆலயத்திலே உற்பத்தி செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.
அவ்வூர் மக்களால் ஆலயத்துக்கு தானமாக வழங்கப்பட்ட நிலங்கள்,வயல்கள், ஆநிரைகள்,

கொண்டு பதினொரு தினங்கள் மகோற்சவம் நடைபெறும். விநாயகப் பெருமானுடன்
ாலையில் திருச்சேந்தைகளிலும் மாலையில் மூஷிகம்,மயில், பூரம், சிங்கம்,யானை,எருது,
ும் திருவீதிஉலா வந்து அடியவர்களுக்கு அருள்பாலிப்பார்.
லைமையில் நடைபெறும் கும்பாபிஷேக நிகழ்வில் தான் தோன்றியாய் தோன்றிய விநாயகப்
விநாயகப் பெருமானை பிரதிஸ்டை செய்து மக்கள் வழிபாட்டுக்கு விடுவது சிறப்பம்சமாகும்.
கரின் அருள் கிடைக்கும்.

திரு இ.இராகவன்,
அதிபர், யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம்,
கரவெட்டி.



## கரவை வெல்லன் விநாயகர் அந்தாதி வெண்பா

*காரணனே பொற்கரவை காத்தருளும்*
*வீரகத்தி*
*வாரணனே சோதிவடிவானே-ஆரணங்கள்*
*தந்தவனே ஞானத் தவமுடையார்*
*போற்றுகின்ற*
*சுந்தரனே நின்றாள் துணை.*

*துணையாக நின்றென் துயர்போக்கிச்*
*செல்வ*
*இணைமலர்த்தாள் ஈந்தருளும்*
*எந்தாய்-கணபதியே*
*சீரார் கரவையூர்ச் சித்தி விநாயகனே*
*நேராக என்னெஞ்சில் நில்.*

*நில்லா மனத்தை நிறுத்தி அறுவுறுத்த*
*வல்லானே வீரகத்தி மன்னவனே-கல்லாத*
*என்னை இயக்குகின்ற ஏர்க்கரவைக்*
*கற்பகமே*
*உன்னைத் தொழவரந்தா ஓர்ந்து.*

அருட்கவி சி.விநாசித்தம்பி.


ஆலய முகப்பு


இராஜ கோபுரம்


லை
வீதி,
வட்டி.

கணேசன்
ஹாட்வெயர்
106, பிரதான வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

Raveens English
Medium Classes
Singathin Veedu,
Karaveddy.

யகம்
ட்டி.

Phone Shop
நெல்லியடி, கரவெட்டி.

எக்ஸலன்ற்
கல்வி நிறுவனம்
விக்னேஸ்வரா வீதி,
கரவெட்டி.





நிர்த்த மண்டபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூநகரி ப.நோ.கூ.சங்கம் (வரையுள்ளது)
## பதவி வெற்றிடம்

பூநகரி ப.நோ.கூ. சங்கத்தில் கீழ்க்குறிப்பிடும் பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

1. பதவி: கணக்காளர்
   பதவி இலக்கமும்/ சம்பளக்குறியீடும் -
   104-08 (165/88இன்படி) - 104/06 (108/81இன்படி)
   சம்பள அளவுத்திட்டம் -
   சுற்றுநிருபம்66/2006இன்படி 11200-14100 (66/2006இன்படி)
   140X10-150X10
2. தகைமைகள்:
   அ. கூட்டுறவுப்பணியாளர் 09ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்காளர்/ உட்துறைக் கணக்காளர் பதவியில் 03 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப்பணியாளர் 10ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்காளர்/ உட்துறைக் கணக்காளர் பதவியில் ,06 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.
   அல்லது
   ஆ. பட்டயக்கணக்காளர் நிறுவனத்தில் தொழில் உரிமைப் பரீட்சை சித்தி அல்லது தொழில் ரீதியான பகுதி செலவின முகாமைத்துவ கணக்காளர் அல்லது ஸ்ரீலங்கா தொழில் நுட்பக்கல்லூரி டிப்ளோமா கணக்கியல் அல்லது இவற்றுக்கு சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்காளர்/ உட்துறைக்கணக்காய்வாளர் பதவியில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.
3. வயது: 18 - 45 வரை
4. சங்கப் பணிப்பாளர்களுக்கு வயது எல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. சங்கப் பணியாளர்கள் தங்கள் சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.
5. பிணை தொடர்பானது: ரொக்கம்
   ஆதனம்
6. இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது
7. விண்ணப்ப முடிவுத் திகதி: 07.02.2011
8. விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:
   தலைவர், பூநகரி ப.நோ.கூ. சங்கம், ஜெயபுரம், பூநகரி.
   விண்ணப்பத்துடன் கல்வி, வயது அத்தாட்சிப்படுத்தும் சான்றிதழ் போட்டோப் பிரதிகளை இணைக்கவும்.

தலைவர், பூநகரி ப.நோ.கூ.சங்கம், பூநகரி.


## வடமராட்சி பாடசாலைகள் விரைவில் அபிவிருத்தி

யாழ்ப்பாணம்,ஜன.20

வடமராட்சி பகுதியில் வெள்ளநீர் வற்றியவுடன் பாடசாலை அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்படுமென வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் செல்வராஜா அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வடமராட்சி கிழக்கில் வெள்ளநீர் தேங்கியிருப்பதால் தடைப்பட்டுள்ள பாடசாலை அபிவிருத்தி வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, அம்பன் அமெரிக்கன் மிஷன் பாடசாலை மற்றும் செம்பியன்பற்று, ஆழியவளை பாடசாலைகளுக்கான அபிவிருத்தி வேலைகள் விரைவில் 10.5 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன - என்றார். (ம-319)

## கைத்தொழில் சங்க பேரவை நிகழ்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜன.20

இலங்கைக் கைத்தொழில் சங்கங்களின் பேரவை அமைக்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் உள்ள இலங்கை மன்றத்தின் கல்லூரியில் நடைபெறவிருந்தது. இந்த நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் நாளை வெள்ளிக் கிழமைக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

எனவே கைத்தொழிலாளர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு இலங்கைக் கைத்தொழிலாளர் சபையின் தலைமைக்காரியாலயத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (ற-311)

## காந்திய சிந்தனை கற்கைநெறி

யாழ்ப்பாணம், ஜன.20

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் காந்திய சிந்தனைக் கற்கை நெறி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள அகில இலங்கை காந்தி சேவா சங்க அலுவலகத்தில் ஆரம்பமாகவுள்ளது.

ஓய்வு பெற்ற அதிபர் ஆ.வடிவேலு தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கற்கை நெறி நடைபெறும். (ற)


## பூநகரி ப.நோ.கூ.சங்கம் (வரையுள்ளது)
## பதவி வெற்றிடம்

பூநகரி ப.நோ.கூ. சங்கத்தில் கீழ்க்குறிப்பிடும் பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

1. பதவி: பொதுமுகாமையாளர்
   பதவி இலக்கமும்/ சம்பளக்குறியீடும் -
   101-06 (165/88)இன்படி - 101-04 (101/81) இன்படி
   சம்பள அளவுத்திட்டம் -
   66/2006இன்படி 11950-15300 (66/2006இன்படி)
   155×10-180×10
   கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இதர படிகளும் வழங்கப்படும்.
2. தகைமைகள்:
   அ. கூட்டுறவுப்பணியாளர் 07ஆவது சம்பளத்திட்டத்தில் 03வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுற வுப்பணியாளர் 08ஆவது சம்பளத்திட்டத்தில் 06 வருடங் களுக்கு குறையாத அனுபவம்.
   அல்லது
   ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டச்சான்றிதழ் அல்லது அதற்கு சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன் றில் முகாமைமட்ட பதவி ஒன்றில் 08 வருட அனுபவம் இதில் 02 வருடம் சிரேஷ்ட முகாமை மட்ட பதவியில் கடமை அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
   அல்லது
   இ. கூட்டுறவு ஊழியர் தராதரப்பத்திர (உயர்தர) சான்றிதழ்/ க.பொ.த உயர்தரத்தில் 03 பாடங்கள் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டப் பதவி ஒன்றில் 10 வருட அனுபவம். இதில் 02 வருடம் சிரேஷ்ட முகாமைப் பதவியில் கடமை அனுபவம் பெற்றிருக்கவேண்டும்.
3. வயது: 18 - 50 வரை
4. சங்கப் பணியாளர்களுக்கு வயது எல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. சங்கப் பணியாளர்கள் தங்கள் சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.
5. பிணை தொடர்பானது: ரொக்கம்
   ஆதனம்
6. இலங்கைப் பிரஜைகளிடம் விண்ணப்பம் கோரப்படுகின்றது
7. விண்ணப்ப முடிவுத் திகதி: 07.02.2011
8. விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:
   தலைவர் பூநகரி ப.நோ.கூ. சங்கம், ஜெயபுரம், பூநகரி.
9. விண்ணப்பத்துடன் கல்வி, வயது அத்தாட்சிப்படுத்தும் சான்றிதழ் போட்டோப் பிரதிகளை இணைக்கவும்.

தலைவர், பூநகரி ப.நோ.கூ.சங்கம், பூநகரி.



## கன்டர் (Canter) லொறி விற்பனைக்குண்டு


நல்ல நிலையில் உள்ள A\C யுடன் கூடிய 10½ அடி நீளமான கன்டர் லொறி விற்பனைக்குண்டு. அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

**வனிக்கா மெடிக்கல்ஸ்**
இல:203, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 6291


## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் பாலசிங்கம்

(காலி லதா ஸ்ரோர்ஸ் முன்னாள் உரிமையாளர்)



வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் பாலசிங்கம் 18.01.2011 செவ்வாய்க் கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பண்டாரவளை வர்த்தகர் சுப்பிரமணியம் நாகலிங்கம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்துரை - இராசலெட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், விஜயலெட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பவானி மற்றும் ஸ்ரீ பாலகாந்தன், பத்மாவதி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் தயாபரன் (ஆசிரியர் - நுகேகொட தமிழ் மகா வித்தியாலயம்), ராஜசெல்வன் J.P. (அருணா பீடிக் கொம்பனி, வறக்காப்பொல), ராஜினி ஆகியோரின் அன்பு மாமனும், மரகதவல்லி, இராசலெட்சுமி (ஓய்வுபெற்ற ஆசிரியை, கனடா), காலஞ்சென்ற நவரத்தினம் (காலிலதா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்), காலஞ்சென்ற சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற வீரசிங்கம் மற்றும் சிவானந்தம், அருளானந்தம், ஜெகதீஸ்வரி (கனடா), சொரூபராணி (கனடா), செல்வராணி, யோகலட்சுமி, காலஞ்சென்ற இரத்தினம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) இலிங்கப்பிள்ளை (கனடா), சறோஜினிதேவி, இரத்தினம் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், திவியா (மொறட்டுவை பல்கலைக்கழகம் - பொறியியல்பீடம்), யஷிந்தன் (கனடா) அனுஷன் (IAS Institute), விதூஷா (சைவ மங்கையர் கழகம்), கஜனன் (பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி), கிரிஷன், மகிஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு (20.01.2011) இன்று வியாழக்கிழமை இறுதிக் கிரியைகள் நடைபெற்று, பிற்பகல் 4.00 மணிக்கு கனத்தை இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

தொ.பே. 0115735297, 0714467947.


## மஹஜன சம்பத / மஹஜன சம்பத / Mahajana Sampatha — 18.01.2011

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2346

வெற்றி எழுத்து: V
வெற்றி எண்கள்: 2 6 3 0 3 2

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | V | 2 | 6 | 3 | 0 | 3 | 2 | ரூபா.12,593,225/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 2 | 6 | 3 | 0 | 3 | 2 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | | | 6 | 3 | 0 | 3 | 2 | ரூபா. 100,000/= | பரிசுகள் 13 |
| 3 பரிசுகள் | | | | 3 | 0 | 3 | 2 | ரூபா. 10,000/= | பரிசுகள் 131 |
| 4 பரிசுகள் | | | | | 0 | 3 | 2 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1304 |
| 5 பரிசுகள் | | | | | | 3 | 2 | ரூபா. 100/= | பரிசுகள் 13255 |
| 6 பரிசுகள் | | | | | | | 2 | ரூபா. 20/= | பரிசுகள் 131527 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 2 | 6 | 3 | 0 | 3 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 13 |
| 8 பரிசுகள் | | 2 | 6 | 3 | 0 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 135 |
| 9 பரிசுகள் | | 2 | 6 | 3 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1320 |
| 10 பரிசுகள் | | 2 | 6 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 13171 |
| 11 பரிசுகள் | V | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 52439 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை Rs. 11,974,370.00

அடுத்த சீட்டிழுப்பிகான சுப்பர் பரிசு Rs. 13,838.930.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகைக்கு அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
242 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000 Hotline 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை 2011

## 2011 ஜனவரி 21, 22, 23 வரை

**சுப்ரமணியம் பூங்காவிற்கு முன்பாக**

(பிரதான வீதி, துரையப்பா விளையாட்டரங்கிற்கு அருகிலுள்ள)

மு.ப. 10.00 தொடக்கம் பி.ப. 7.00 வரை







## காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளவை

உயர் கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல்

விசேட உணவுகள், குடிபானங்கள் முதலியன

உங்கள் வீட்டுக்கு தேவையான அனைத்து உபகரணங்களும்

கட்டிட பொருட்களும் உபகரணங்களும்

கைத்தொழில் கருத்தரங்குகள் மற்றும் முதலீட்டு அரங்கம்

**SILVER SPONSOR**

dimo TECHNOLOGY உன்னத எதிர்பார்ப்பு

**CO-SPONSORS**

Elephant House · KEELLS · Nilkamal

**ORGANISED BY:**

LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED A member of SAES SOUTH ASIA EXHIBITION SERVICES network

**CO-ORGANISED BY**

FCCISL Sri Lanka

**IN ASSOCIATION WITH**

CCIY CHAMBER OF COMMERCE AND INDUSTRIES OF YARLPANAM UNITY IS STRENGTH

**SUPPORTED BY**

SLCB SRI LANKA CONVENTION BUREAU

**FOR INFORMATION CONTACT:**

4th Floor, Automobile Association Building,
No. 40, Sir Mohamed Macan Markar Mawatha, Colombo 03
Tel: 2390560-2 Fax: 2390563
E-mail: missaka@saexhibitions.com

**PARTNER COUNTRY** INDIA

**OFFICIAL BANKER** இலங்கைவங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

**OFFICIAL FREIGHT FORWARDER** dart GLOBAL LOGISTICS

**OFFICIAL ELECTRONIC MEDIA** சக்தி TV · சக்தி FM

**OFFICIAL PRINT MEDIA** Sunday Observer · Daily News · TAMIL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Jaffna International Trade Fair 2011

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை. 2011
21st 22nd & 23rd January, 2011 in Jaffna
At Public Library, Jaffna
Seminar Series on SME Development
In Parallel to Jaffna International 2011 Trade Fair

**உங்கள் வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்த நாம் உதவுகிறோம்**
**வாருங்கள்......கண்காட்சியைப் பாருங்கள்**
**கண்காட்சியில்......**
**துறைசார் நிபுணர்களின் வழிகாட்டல்களோடும் பங்களிப்புகளோடும் நடைபெறவுள்ள பின்வரும் நிகழ்வுகளில் பங்கு கொண்டு பயன் பெறுங்கள்.**

| Date | Details | Time |
|---|---|---|
| Day 01, FRIDAY 21st JAN 2011 | Session 1:- வடமாகாணத்தில் வர்த்தகத்துக்கான சூழல்/ முதலீட்டுக்கான வாய்ப்புகள். (Business Environment & Investment Opportunities in Northern Province) | 03.00 pm-5.30 pm |
| Day 02, SATURDAY, 22nd Jan 2011 | Session 1:-சிறிய, நடுத்தர கைத்தொழில் முயற்சியாளர்களுக்குத் தேவையான சாத்திய மான முதலீட்டு வர்த்தக அபிவிருத்தி நிதிச் சேவைகள். (Financial Services available for Investment and Business Development for SMEs in Jaffna) | 10.30 am-12.30 pm |
| | Session 2:- நிறுவனங்களின் கட்டமைப்பு மற்றும் முதலீடு சம்பந்தமான வரையறைகள். (Institutional frame work and Regulatory Aspects on Investment) | 3.30 pm- 5.30 pm |
| DAY 03, SUNDAY, 23rd JAN 2011 | Session 1:- உற்பத்தி பொருள்களின் இறுதி நிலைகளும் பொதி செய்தல் முறைகளும். (Finishing & Packing Aspects of Products) | 10.00 am-12.45 pm |

பயனாளர்கள் : யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தக, கைத்தொழில் முயற்சியாளர்கள்
ஒருங்கிணைப்பாளர்கள்:
யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றமும், இலங்கை வர்த்தக கைத்தொழில் சம்மேளனமும்.
(CCIY & FCCISL)


## தீவக வலயத்தில் அதிபர் கூட்டம்

வேலனை,ஜன.20
தீவக வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் நாளைமறுதினம் சனிக்கிழமை வலய முகாமைதுவ மண்டபத்தில் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-267)

## ச.ச. நிலைய ஆண்டு நிறைவு

நவாலி, ஜன.20
ஆனைக்கோட்டை விநாயகர் சனசமூக நிலையத்தின் 5ஆம் ஆண்டு நிறைவு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சனசமூக நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

சனசமூக நிலையத் தலைவர் சி.தவராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவுக்குப் பிரதம விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. கே. சிவசோதியும், கௌரவ விருந்தினர்களாக ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் அ.நிசாந்தனும் கலந்து கொள்வார்கள். (ற-100,32)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன.20
மிருசுவில் வடக்கு குருக்கள் மாவடி வைரவ ஆலய மகாகும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை தைப்பூச தினத்தன்று இடம்பெறவுள்ளது.

இன்றையதினம் காலை 10 மணிக்கு கும்பாபிஷேக நிகழ்வு ஆரம்பமாகும். (ற-122)


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1261 நீலம்

கும்பம் 18 30 47 53 18-01-2011

ஜக்பொட் பரிசு ரூபா. 3,080,350/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 243,652 | 20/- | 4,873,040/- |
| 2 இலக்கங்கள் | 22,422 | 40/- | 896,880/- |
| 1 இல. + லக்கினம் | 22,105 | 60/- | 1,326,300/- |
| 2 இல. + லக்கினம் | 2,043 | 200/- | 408,600/- |
| 3 இலக்கங்கள் | 591 | 1000/- | 591,000/- |
| 3 இல. + லக்கினம் | 56 | 10,000/- | 560,000/- |
| 4 இலக்கங்கள் | 03 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 3,080,350/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 9,255,820/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 660 | | 628,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 291,532 | | 9,884,320/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 4,169,150/-

## இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

மீனம் 02 17 26 33 ஜக்பொட் பரிசு ரூபா. 400,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 657 | 500/- | 328,500/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 400,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 660 | | 628,500/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 500,000/-



eset
Authorized Partner

Jaffna Trade Fair Stall No 16

E-GLOBE SOLUTION யாழ் மக்களிற்கு
இலவச கணனி சேவை (Free Computer Service)

Free ESET Virus Guard - 19 - 23 January 2011
Contact on : 0777-802534



Computer System at Special Price

BRAND : EGS / Dual Core

Intel E5500 Dual Core Processor 2.8Ghz
Intel G41 Motherboard with VGA/Audio/Gigabit Lan
Kingston 1GB DDR2 Memory
320GB SATA II Hard Disk
Liteon DVD Re Writer
ATX Casing with Power Supply
Multi Media Keyboard & Optical Mouse
15.6" LCD Monitor

System Price : Rs. 42,000/-

Warranty : 3 Years Limited Parts Warranty

BRAND : EGS / i3

Intel i3-540 Core i3 Processor 3.06Ghz
Intel 55HC Motherboard with VGA/Audio/Gigabit Lan
Kingston 2GB DDR3 Memory
500GB SATA II Hard Disk
Liteon DVD Re Writer
ATX Casing with 500W FSP Power Supply
Multi Media Keyboard & Optical Mouse
15.6" LCD Monitor

முகவர்கள் வரவேற்கப்படுகின்றனர்

System Price : Rs. 56,500/-


Authorised Distributor for FSP, Seasonic, Antec & Silverstone Power & Casing Products,

E-GLOBE SOLUTIONS PVT LTD
15 Walukarama Road
Colombo 3
Tel: 0114718517 / 0777802534

egs e-Globe Solutions


# 2ஆம் ஆண்டு நினைவில்

## மனோரஞ்சிதன் அருளரசன் (பிரஷாந்)



அன்புச் செல்வமே பிரசாந்( அருளரசன்)
இரும்புப் பறவைகளின்
இராட்சத வியூகமும்
பல்குழல் எறிகணையின் பரவல் சூடும்
வன்னி மக்களை இடம்பெயரச் செய்த வேளை
சுதந்திரபுர மண்ணில்
அனைவரும் ஒன்றாய் இருந்தோம்
குண்டு மழை நடுவே
குலை நடுங்கி நின்றவேளை வந்த
ஷெல்லின் துண்டு
தம்பியவன் காலைப் பதம் பார்க்க
தம்பியின் கால் கழற்றப்படுமா!
என்று கதறினாயே ! பின்பு உன்னையே
நாமிழப்போம் என
எண்ணிடவே முடியவில்லை - ஆனால்
நிஜமாக உனை இழந்து ஈராண்டு முடிந்ததடா
எம் அன்புச் செல்வமே
பதின்மூன்று அகவையிலே
பொறுப்புள்ள பிள்ளையாய்
வளர்ந்ததைக் கண்டு மகிழ்ந்திருந்த
எமக்கு இப்படியோர் இழப்பு
என்று எழுதினானா இறைவன்
ஈராண்டென்ன இருபதாண்டுதான்
சென்றாலும் எம் உயிருள்ளவரை மறக்க
முடியாதேடா
எம் முதற் செல்வமே
எம்மை விட்டுப் போக மனம் வந்ததாடா
இல்லவே இல்லை பறித்து விட்டானே
தந்த கடவுளே....

அன்னை மடியில்
1996.09.13

ஆண்டவன் அடியில்
2009.01.20

உன்பிரிவுத் துயரில் வாடும்
**அப்பா, அம்மா, தங்கை, தம்பிமார், அப்பம்மா.**

அத்தியடி,
யாழ்ப்பாணம்.

(109613)


# புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு

சாரங்கா நிறுவனத்தின் இணை நிறுவனமான

## சிவா நகைமாடம்

*மீண்டும் இல.14, கண்டி வீதி, நவீன சந்தை, சாவகச்சேரியில் இன்று (20.01.2011) வியாழக்கிழமை தைப்பூச நன்நாளில் முற்பகல் 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை உள்ள சுப வேளையில் திறந்து வைக்கப்படுகிறது என்பதனை எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் அறியத்தருவதுடன் இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றேன்.*

உரிமையாளர்:

## சாரங்கா நகைமாடம்

இல.55, செட்டித்தெரு,
கொழும்பு 11
T.P:- 0112434971,
Fax:-0112434071.

இல.157, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:- 0212226972,
Fax:-0212228917


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org